
கம்பர் வரலாற்றில் கவினுறு நிகழ்ச்சிகள்

அருட்கவிஞர் அ. காசி



கம்பர் வரலாற்றில்
கவினுறு நிகழ்ச்சிகள்

அருட்கவிஞர் அ. காசி, எம்.ஏ., எம்.எட்.,


வனிதா பதிப்பகம்

11, நானா தெரு, பாண்டி பஜார்,
தி.நகர், சென்னை – 600 017.
தொலைபேசி : 52070663.

நூல் விளக்கக் குறிப்பு

நூலின் பெயர்	:	கம்பர் வரலாற்றில் கவினுறு நிகழ்ச்சிகள்
ஆசிரியர்	:	அருட்கவிஞர் அ. காசி, எம்.ஏ., எம்.எட்.,
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதற் பதிப்பு, 2003
உரிமை	:	ஆசிரியருக்கே
நூலின் அளவு	:	கிரவுன் 12.5 x 18 செ.மீ.
அச்சு	:	12 புள்ளிகள்
பக்கம்	:	112
படிகள்	:	1200
விலை	:	ரூ.30/-
வெளியீட்டாளர்	:	வனிதா பதிப்பகம், 11, நானா தெரு, பாண்டிபஜார், (தபால் நிலையம் ஒட்டிய தெரு), தி. நகர், சென்னை – 600 017. ☎ : 52070663
ஒளியச்சு	:	தனலட்சுமி எண்டர்பிரைசஸ், 22/73, காந்தி தெரு, மேற்கு மாம்பலம், சென்னை – 600 033. ☎ : 55494849, 35494849
அச்சிட்டோர்	:	அம்சா ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை.

வாழ்த்துரை




T.R. தினகரன், B.E.,
ஸ்ரீ ராமலிங்கா மில்ஸ் லிமிடெட்,
அருப்புக்கோட்டை.

கம்பர் வரலாற்றில் கவினுறு நிகழ்ச்சிகள் நூலில் கம்பர் வாழ்க்கையின் 5 நிகழ்ச்சிகளையும், ஓர் ஒப்பீடும் காண்கிறோம். ஏற்கனவே வெளியிடப் பெற்ற கவிச்சக்கரவர்த்தி கம்பர் கவிநயம் என்ற நூலிலும் வெவ்வேறான ஆறு நிகழ்ச்சிகளை ஆசிரியர் தந்துள்ளார். இரு நூல்களின் மூலம் கவிச்சக்கரவர்த்தி கம்பரின் தெய்விக ஆற்றல்களையும், அவர் வாழ்க்கையில் ஏற்பட்ட இன்னல்களையும் நாம் அறிய முடிகிறது.

அருட்கவிஞர் காசியின் தொண்டு மேலும் வளர வாழ்த்துக்கள்.

அன்புள்ள,
(ஒப்பம்)
டி.ஆர். தினகரன்

அணிந்துரை



டாக்டர் க. இராமச்சந்திரன்,
இணைப் பேராசிரியர்,
திரு. எஸ். இராமசாமி நாயுடு
நினைவுக் கல்லூரி,
சாத்தூர் – 626203.

''வியப்பால் விழிகளை
வியக்க வைத்த எழுத்தாளர்.''

அருட்கவிஞர் அ. காசி அவர்கள்

அருப்புக்கோட்டையில் இவரை அனைவருமே அறிந்திருப்பார்கள்.

'குன்று இருக்கும் இடமெல்லாம்
குமரன் இருப்பான்' – இது பழமொழி.

'கோயில் இருக்கும் இடமெல்லாம்
காசி இருப்பார்' – இது எனது புதுமொழி.

ஆரவாரமோ ஆர்ப்பரிப்போ எதுவும் இல்லாமல் இயல்பாய் எங்கும் இருப்பவர். அதனால் எல்லோரது இதயத்திலும் இடம் பிடித்தவர். ஓயாத உழைப்பும் உரிய முயற்சியும் இருந்தால் உயரலாம் என்பதற்கு இவர் ஓர் உதாரணம்.

ஐம்பதிற்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதி வியப்பால் விழிகளை வியக்க வைத்த எழுத்தாளர்.

நல்ல மாணவர்களை உருவாக்கிய சிறந்த ஆசிரியர்... பேச்சாளர்... இப்படி இவரது பெருமைகளைப் பட்டியலிட்டுக் கொண்டே போகலாம்.

❖ 'கவிச்சக்கரவர்த்தி கம்பரின் கவிநயம்' – என்ற இவரது பொன்விழாப் புத்தகத்திற்கு அணிந்துரை எழுதும் நல்ல வாய்ப்பினைத் தந்தார். அதனைப் பெறுவதற்கரிய பேறாகக் கருதினேன். 'கம்பர் வரலாற்றில் கவினுறு நிகழ்ச்சிகள்'

இன்னும் இந்தப் புதிய நூலுக்கு அணிந்துரை எழுதும் வாய்ப்பினை மீண்டும் தந்துள்ளார். அன்பின் அரவணைப்பை என்னால் தவிர்க்க முடியவில்லை. ஆற்றல் உள்ளவர்களை அணைத்துக் கொள்வதற்கு என் இதயமும் எப்போதும் தயாராக இருக்கின்றது. அதற்கு இந்த அணிந்துரையை வளமான சாட்சி!

❖ கம்பன் ஓர் அற்புதக் கவிஞன். அவனது கவிநயம் சிந்தனைக்கு விருந்தளிக்கும் கருத்துக் கருவூலம். உயர்ந்த நெறிகளை உலகிற்கு உணர்த்தும் அட்சய பாத்திரம். இந்த அட்சய பாத்திரத்தின் சில நிகழ்வுகளை எடுத்துக்காட்டியிருக்கின்றார் அருட்கவிஞர் அ. காசி அவர்கள்.

'கம்பர் பிறப்பும் வளர்ப்பும்' என்பதில் தொடங்கி, 'கம்பரும் எழுத்தச்சனும்' என்னும் கட்டுரையோடு முடித்திருக்கிறார். ஆறு கட்டுரைகளுமே படித்துச் சுவைப்பதற்குக் கட்டுக் கரும்பாகும்.

❖ 'கம்பர் பிறப்பும் வளர்ப்பும்' என்ற முதற் கட்டுரையில் கம்பரின் பெயர்க் காரணத்தை பல மேற்கோள்களின் மூலம் எடுத்துக்காட்டியுள்ளார். சோழனின் அரசவைக்குக் கம்புடன் சென்றதால் கம்பர் என்றும், கம்பத்தினடியில் பிறந்ததால் கம்பர் என்றும் பெயர்க் காரணத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

❖ தெய்வப் புலவர் கம்பர் என்பதை 'கம்பரின் பாலப் பருவம்' கட்டுரையில் படிக்க முடிகின்றது. திருவழுந்தூர் அம்பாளின் அருளால் கல்வி கற்றார். வயிரபுரம் காளியின் அருளால் கவியியற்றும் ஆற்றலைப் பெற்றார்.

காராளராய் இருந்தபோது வயலில் மேய்ந்த குதிரையை கவியால் இறக்கவும் செய்தார். இறந்த குதிரையைப் பிழைக்கவும் செய்தார். அதனால் இவரை தெய்வப் புலவர் என்றே மக்கள் மகிழ்ந்து போற்றி வணங்கினர்.

❖ கம்பரின் மகள் காவிரி, இவளது திருமணத்தின்போது சடையப்ப வள்ளலை நினைத்து எழுதியதுதான் 'ஏரெழுபது' என்ற இணையற்ற நூல். இந்த நூலின் அரங்கேற்ற நிகழ்வுகளை அழகாக எடுத்துக்காட்டியுள்ளார்.

வெங் கோபக் கலிகடந்த
வேளாளர் விளை வயலுள்
பைங்கோல முடி திருத்தப்
பார்வேந்தர் முடி திருந்தும்
பொங்கோதைக் கடற் றாணை
போர்வேந்தர் நடத்தும் பெருஞ்
செங்கோலை நடத்துவதே
ஏரடிக்கும் சிறு கோலே!

ஏர்ப்படை சிறப்பாக நடந்தால்தான் அரசனின் தேர்ப்படை, குதிரைப்படை, யானைப்படை, காலாட்படை போன்றவைகள் சிறப்பாக நடக்கும். இந்நூல் உழவனின் உழைப்பைப் போற்றுகிற உன்னத இலக்கியமாகத் திகழ்கிறது. காசி அவர்கள் இதனை கவினுறு ஓவியமாக்கியுள்ளார்.

கம்பர் மகன் அம்பிகாபதியின் வரலாற்றையும் சொற் சித்திரமாக்கியுள்ளார் காசி அவர்கள்.

எந்த ஒரு மனித வாழ்வும் காதல் இல்லை என்றால் அது ஊனம். காதலின் நிறம் கிடைத்தாலே பெண்ணுக்கு இரண்டு நிறங்கள் கிடைக்கும்.

ஆண் தீண்டுகையில் வெட்க நிறம்
ஆண் தீண்டாவிட்டால் பசலை நிறம்

காதல் வலையில் சிக்கினர் அம்பிகாபதியும் அமராவதியும். அரசவையில் விசாரணை வருகிறது. நூறு தமிழ்க் கவிப்பாடல்களைச் சிற்றின்பம் கலக்காமல் அம்பிகாபதி பாடினால் அமராவதியை அடையலாம்.

இதுதான் தீர்ப்பு!

போட்டி தொடங்கியது...

ஒவ்வொரு பாடலுக்கும் ஒரு பூவை கிள்ளிப் போட்டுக் கொண்டிருந்தாள் அமராவதி. காதல் மயக்கத்தில் கடவுள் வாழ்த்திற்கும் ஒரு பூவைக் கிள்ளி எண்ணிக்கையில் சேர்த்தாள்.

கடவுள் வாழ்த்து எண்ணிக்கையில் சேராது. 99வது பாட்டு, அமராவதி அதை 100வது பாடல் என்று எண்ணி முகில்

விட்டுக் கிளம்பும் நிலவெனத் திரைவிட்டு வெளியே வந்தாள் நிலாவைக் கண்டான் கவிஞன். உடனே 'சற்றே பருத்த தனமே' எனப்பாட்டில் சிற்றின்பம் கலந்தான். அம்பிகாபதியைக் கொலைக்களத்தில் கொன்று ரத்தம் பார்த்தான் மன்னன். இரத்தம் பார்த்த மறுநொடியே தன் உயிரை விட்டாள் அமராவதி.

என் குலம் அழித்த குலோத்துங்கா... என் வாரிசில்லாமல் செய்தவனே! உன் வாரிசும் உனக்கிருக்காது. உன் குடி அழியும் வாள் வேண்டாம் ஆணி போதுமே, இந்த எழுத்தாணி போதுமே என்று இளவரசன் விக்கிரம சோழன் இதயத்தில் இறக்கி எடுத்தார். கம்பர் கொலையும் செய்தார். கைதாகிறார்.

ஸ்ரீமத் சுவாமிகள் இயற்றிய புலவர் புராணத்தின் கதையை ஆதாரமாகக் கொண்டு இதனை எழுதியுள்ளார். கம்பரின் வாழ்வில் இப்படியொரு நிகழ்வா விழிகளை இந்த எழுத்து மீண்டும் நம்மை வியப்படைய வைக்கிறது.

❖ 'கம்பரும் எழுத்தச்சனும்' 'ஓர் ஒப்பீட்டு ஆய்வு' இடைவிடாது ''இராம நாமம் பாடுதல் பிறவித் துயரிலமும் பாவத்தைப் போக்கும் என்பதே கம்பர் எழுத்தச்சன் இருவர் தம் கொள்கை யாகும்'' என்று ஒப்பீடு செய்து நிறைவு செய்துள்ளார்.

அருட்கவிஞர் அ. காசியின் எழுத்துச் சிறகுகள் சிறியவை தான். ஆனால் வானத்தையே அளக்கும் வாய்ப்பை வழங்கி யிருக்கின்றன. மூன்றடிகளால் உலகத்தையே அளந்த வாமன அவதாரமாகத் திகழ்கின்றன இவரது படைப்புகள்.

இந்தப் புத்தகத்தைப் புரட்டப் புரட்ட திமர் திமரென்று இதயத்தின் சாளரங்கள் திறந்து கொள்கின்றன.

ஒரு நதியைப்போல் இவருடைய எழுத்துக்கள் என் இதயத்தில் நடைபோடுகின்றன. நீங்களும் படித்துப் பாருங்களேன். உங்களுக்குள்ளும் உற்சாக ஊற்று பெருக்கெடுக்கும். அருட்கவிஞர் காசி அவர்களை அகமகிழ்ந்து வாழ்த்துகிறேன்.

என்றும் அன்புடன்,
(ஒப்பம்)
க. இராமச்சந்திரன்

முன்னுரை



அருட்கவிஞர்
அ. காசி

கம்பர் மகாகவி. நம் நாட்டின் பழைய இலக்கியங்களைப் பருகி, தமிழ் மரபின் உயர்வை மக்கள் அறிந்து பின்பற்ற புது இலக்கிய மறுமலர்ச்சியை உண்டாக்கியவர். புவிச் சக்கரவர்த்திகள் வியந்து பாராட்டும் கவிச் சக்கரவர்த்தி கம்பர். அன்பு மயமான இராம சரிதையை தனக்கே உரிய பாணியில் உலகிற்குத் தந்தவர் கம்பர்.

உலகப் பொதுமறை குறளைக் கூறிக் காளியின் அருளை முதன் முதல் பெற்றவர் கம்பர். சரஸ்வதியின் அருட் கடாட்சத்தால் பல இன்னல்களுக்குமிடையே காவியத்தைப் படைத்த கவிதா தீபம் கம்பராவார்.

அறம் வெல்லும். பாவந் தோற்கும் என்ற அரிய உண்மையை உணர்த்த இராமாயணத்தை, தமிழின் பொக்கிஷ மாகத் தந்தவர் கம்பர்.

முதன் முதல் ஏட்டிலிருந்த கம்பராமாயணத்தை திரு. வேங்கடாசல முதலியார் பதிப்பாக 1843இல் அச்சில் வெளியிடப் பெற்றது. கம்பராமாயண முழுவதிற்கும் வை.மு. கோபால

கிருஷ்ணமாச்சாரியார் பதிப்புதான் முதன்முதலில் வெளி வந்தது.

கம்பன் வரலாற்றில் கவினுறு நிகழ்ச்சிகள் என்ற இந்நூலில் ஆறு தலைப்புகளில் சில செய்திகளைத்தான் சுட்டிக்காட்ட முடிந்தது. கம்பன் பிறப்பும் வளர்ப்பும், கம்பன் பாலப் பருவத்தில் நடந்த நிகழ்ச்சிகள், கம்பன் மகள் காவேரி, கம்பன் மகன் அம்பிகாபதி பற்றிய செய்திகள், கம்பன் இயற்றிய ஏரெழுபது பற்றிய கருத்துக்கள் கம்பன் வாழ்வின் இறுதி நிகழ்ச்சிக் குறிப்புகள், மலையாள காவியங்களில் கீர்த்தி பெற்ற எழுத்தச்சன் இயற்றிய இராமாயணத்தோடு கம்பன் காவியத்தையும் ஒப்பிட்டுத் தந்த செய்திகளையும் இந்நூலில் காணலாம்.

இராமாயணத்தின் வரலாற்றில் இதற்கு முன் தந்த, ''கவிச் சக்கரவர்த்தி கம்பர் கவிநயம்,'' ''வால்மீகிக்கு வளம் தந்த கம்பர்'' என்ற நூல்களோடு, இந்நூலின் கருத்துகளையும் ஒருங்கு படித்தால் கம்பர் வாழ்வின் வரலாற்றை ஓரளவு நம்மால் அறிய முடிகிறது.

இந்நூலிற்கு அருமையாக அணிந்துரை நல்கிய தமிழ்ப் பேராசிரியர் உயர்திரு க. இராமச்சந்திரன் எம்.ஏ அவர்களுக்கும், வாழ்த்துரை நல்கிப் பெருமைப்படுத்திய பாவலர்களின் புரவலர் ஐயா தினகரன் பி.இ. அவர்களுக்கும், பதிப்புரை தந்து இந்நூலை வெளியிட ஆக்கந் தந்த தேசிய நல்லாசிரியர் நல்லாமூர் கோ. பெரியண்ணன் அவர்களுக்கும் சிறந்த முறையில் இந்நூலைப் பதிப்பித்த சென்னை வனிதா பதிப்பகத்தாருக்கும் என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் என்னுடைய 53 ஆவது படைப்பாகும்.

அன்பன்

அ. காசி

பொருளடக்கம்

1

கம்பர் பிறப்பும் வளர்ப்பும்

1. பிறப்பு :

ஸ்ரீமத் முருகதாச சுவாமிகள் தாம் இயற்றிய புலவர் புராணம் என்ற நூலில்,

"கம்பத் தினருகு ஓர் சிசுக்கண்டு
பெருங்களிப் போடெடுத்து
அம்பத்தனையும் வென்ற விரியுற்ற
மனையாள் கையது நல்கினான்"

என்று கம்பரின் பிறப்பைப் பற்றிக் கூறுகிறார்.

திருவழுந்தூர் என்னும் கிராமத்தில் கோவிலில் பூஜை செய்யும் ஓச்சக் (உவச்சர்) குலத்தான் ஒருவன், அவ்வூரிலிருந்த பிடாரி கோவிலில் கதவைத் திறக்கும்போது கொடிக் கம்பத்தின் அடியில் ஓர் குழந்தை கால் கைகளை ஆட்டிக் கொண்டு படுத்திருப்பதைக் கண்டான்.

மகிழ்ச்சியுடன் அக்குழந்தையைக் கையிலெடுத்துக் கொண்டு போய் மனைவியிடத்தில் கொடுத்து வளர்த்தான். இதனை

"கம்பத் தினடியிற் கிடந்திட்டதால் கம்பனெனப் பெயர்
உம்பர்க்கு மெய்தாத பேறான பிள்ளைக்கு
உவந்து ஓதினான்"

என்ற பாடலால் அறிகிறோம். மேலும் கோவிலின் கம்பத் தினடியில் கண்டெடுக்கப்பட்டதால் அக் குழந்தைக்கு கம்பன் என்ற பெயரைப் பின்னர் சூட்டினர் என்பதையும் அறிகிறோம்.

மேற்கண்ட செய்தியை ஸ்ரீமத் முருகதாச சுவாமிகள் கூறுகிறார்.

வறுமையால் வாடிய ஓர் ஏழைத்தாய் சோரத் தனத்தினால் தனக்குப் பிறந்த பிள்ளையைக் கோவில் கம்பத்தினடியில் போட்டுவிட்டுச் சென்றாள் என்பதே அப்பாடலின் மறைந்த கருத்தாகும். எப்படிப்பட்ட நிலை யிலும் ஒரு தாய் தான் பெற்றெடுத்த குழந்தையை வளர்க்க முடியாமல் இப்படிக் கம்பத்தினடியில் கொண்டு போய் போடுவாளோ? என்ற பலரும் கேட்கலாம். எனவே இது தவறான வரலாறு என்று அக்கருத்திற்கு மறுப்பும் பலர் தெரிவித்துள்ளனர்.

கி.பி. 1862ம் ஆண்டு இயற்றிய தமிழுக்குத் தமிழ் ஆங்கில விளக்க அகராதியில் ''வின்ஸ்லோ பாதிரியார்'' கம்பன் என்போன் ஓர் அரசன் மகன் என்று கூறி கீழ்க் கண்ட வரலாற்றை அறிவிக்கிறார்.

தொண்டை நாட்டின் முதற்பெயர் ''கம்பநாடு'' என்பதாகும். அந்நாட்டை ஆண்ட ஆதித்தர் என்ற அரச னுக்குப் பல எதிரிகள் இருந்தனர். பகைவர்கள் பலர் அரண்மனையிற் புகுந்து அரசனைக் கொன்றனர். அப்போது இராணி குணவதியார் கர்ப்பவதியாக இருந்தார். அரச குடும்பத்தினர் இராணியைத் தப்பிப் பிழைத்துச் செல்லுமாறு வேண்டி, வழிகாட்டி அனுப்பினார். அரண்மனையைவிட்டு வெளியே வந்த இராணியார் நடந்து சென்று திருவழுந்தூர் அடைந்து அவ்வூரில் பூஜை செய்யும் ஓர் ஒச்சனுடைய வீட்டில் சென்று அடைக்கலம் புகுந்தாள். நல்ல குண முடைய அந்த ஒச்சன் இராணிக்கு வேண்டிய உதவிகளைச் செய்தான். ஒச்சனுடைய வீட்டில் குழந்தை பிறந்தது. உரிய முறைப்படி இராணியாகிய தாயே தன் குழந்தைக்குப் பெயர் வைத்தாள்.

2. குழந்தை வளர்ப்பு :

தாயும், பிள்ளையாகிய கம்பனும் ஒச்சனுடைய பாதுகாப்போடு அவன் வீட்டில் ஏழு ஆண்டுகள் வாழ்ந்து வந்தனர்.

இதே நேரத்தில் திருவெண்ணெய் நல்லூரில் பல ஏர்கள் வைத்து உழவுத் தொழிலை நடத்திப் பெருஞ்சீமானாக வாழ்ந்து வந்த சடையப்ப முதலியார் ஓர்நாள் திருவழுந்தூர் வந்தார். ஒச்சனுடைய நிலையை அறிந்து இரக்கங்கொண்டு தானே ஒச்சனுடைய வீட்டிற்கு வந்து கம்பனையும், அவன் தாயையும் திருவெண்ணெய் நல்லூருக்கு அழைத்துச் சென்று, தனி வீட்டில் அவர்கள் வளர ஏற்பாடு செய்தார். குழந்தை கம்பநாடனுக்குக் கல்வி கற்க எல்லா ஏற்பாடு களையும் சடையப்ப வள்ளலே செய்து கொடுத்தார்.

3. கம்பர் பெயர் பொருத்தம் :

ஒச்சனுடைய இல்லத்தில் பிறந்த குழந்தைக்கு அவனுடைய தாயே அரச குடும்ப வழக்கத்தைப் பின்பற்றி கம்பநாடன் என்னும் பெயரைச் சூட்டினாள் என்று அறிகிறோம்.

கம்பருக்கு அப்பெயர் வந்ததன் காரணமும் பலவா றாக ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.

பிடாரி கோவிலின் கம்பத்தினடியில் கண்டெடுக் கப்பட்ட காரணத்தினால் அக்குழந்தைக்கு கம்பன் என்ற பெயர் இடப்பட்டதாக ஸ்ரீமத் முருகதாச சுவாமிகள் கூறியுள்ளார்.

கம்பன் சோழ அரசரை முதன் முதலில் பார்க்கச் செல்லும்போது கையில் ஏந்திய கம்புடன் சென்றதால் கம்பன் என்று அழைக்கப்பட்டான்.

கம்பன் பல அற்புதச் செயல்கள் நிகழ்த்தியதைக் கேள்விப்பட்ட சோழன் அவரை சபைக்கு அழைத்து வரச் சொன்னார். அப்போது கம்புடன் சென்ற இளைஞனைப் பார்த்து ''இக் கம்பனா பல அற்புதச் செயல்களைப் புரிந்தவன்'' என்று வியந்து கூறியதால் அதைக்கேட்ட பலரும் அவனுக்குக் கம்பன் என்ற பெயரைச் சூட்டினர் என்றும் கூறப்படுகிறது.

இளைஞனாகிய அவன் கம்புதானியம் விளைந்த புனத்தினை காவல்காத்து வந்த காரணத்தினால் கம்பன் என்று அழைக்கப்பட்டான் என்றும் ஒரு செய்தி கூறுகிறது.

இளம் வயதில் மந்த புத்தி உடையவனாக இருந்தான். பிறர் கூறும் கருத்தைக் கூறும்போது சில நேரங்களில் செயலற்று கம்பத்தைப் போல நின்ற காரணத்தினால் கம்பன் என்ற பெயரைப் பெற்றான் என்று மற்றொரு செய்தியும் கூறப்படுகிறது.

2

கம்பரின் பாலப் பருவம்

1. வளர்ப்புத் தந்தையுடன் கம்பர் :

திருவெண்ணெய் நல்லூர் இப்பொழுது கதிராமங்கலம் என்று அழைக்கப்படுகிறது. அங்குதான் சடையப்ப வள்ளல், கம்பன் கல்வி கற்க ஒரு கணக்காயரை நியமித்துப் படிக்க ஏற்பாடு செய்தார்.

திருவெண்ணெய் நல்லூர் வருவதற்கு முன்னர் கம்பர் திருவழுந்தூரில் தன் வளர்ப்புத் தந்தையாகிய ஓச்சனுடன் பிடாரி கோவிலில் பணிபுரிந்து வந்தான். பூஜை வழி பாடுகளில் உதவிபுரிந்து வந்தான். இதனால் கோவில் அர்ச்சனை வழிபாட்டு அனுபவமும் கம்பருக்கு உண்டு என்பதை அறிகிறோம்.

2. கணக்காயரும் கம்பரும் :

சடையப்ப வள்ளல் கம்பரைத் திருவெண்ணெய் நல்லூருக்கு அழைத்து வந்தவுடன், தம்மால் மானியம் பெற்று பல மாணவர்களுக்கு கல்வி கற்றுக் கொடுத்து வந்த கணக்காயரிடம் கம்பனைச் சேர்த்து படிக்க ஏற்பாடு செய்தார். கம்பன் இளம் வயதில் மந்த புத்தி உடையவனாக இருந்தாலும், சிரத்தையோடு படிக்க வேண்டும் என்ற எண்ணமும் கொண்டிருந்தான். திருக்குறளில் ஒவ்வொரு மாணவனும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு குறளை ஆசிரியரிடம் ஒப்புவிக்க வேண்டும் என்ற முறை இருந்தது.

3. திருவழுந்தூர் பிடாரி கோவிலில் நடந்த நிகழ்ச்சி :

திருவழுந்தூர் பிடாரி கோவிலில் ஆண்டுதோறும் அம்மன் திருவிழா சிறப்பாக நடைபெறுவது வழக்கம். அவ்விழாவைப் பொறுப்புடன் சடையப்ப வள்ளலே நடத்தி வந்தார். அவர் கோவில் பணிக்குக் கணக்காயரையும் அவருடைய மாணவர்களையும் தொண்டு செய்யப் பணித்திருந்தார்.

கணக்காயரும் அவருடன் படிக்கும் மாணவர்களும் மதியத்திற்கு மேல் திருவழுந்தூர் சென்று கோவில் பணி களைப் புரிந்தனர். மலர் தொடுத்தல், தண்ணீர் தெளித்தல், தோரணம் கட்டுதல் போன்ற பணிகளை மாணவர்கள் செய்தனர்.

சீடனாகிய கம்பன் தன் வளர்ப்புத் தந்தையோடு கோவில் மூலதானத்துட் சென்று அபிஷேக காரியங்களைக் கவனித்து வந்தான். அபிஷேகம் செய்வதற்கு முன் மூல தானத்தின் வாயில் திரையிடப்பட்டிருக்கும்.

''அம்மனுடைய ஆபரணங்களைக் கழற்றித் தயார் செய்'' என்று ஒச்சன் தன் மகனிடம் கூறிவிட்டு வேறு பணியில் தந்தை ஈடுபட்டார். அப்போது கம்பன் தன்னு டைய மந்த புத்தி காரணமாக தான் மறுநாள் பள்ளியில் ஒப்புவிக்க வேண்டிய பாடலாகிய

''அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயர்செகுத் துண்ணாமை நன்று''

என்ற திருக்குறளைக் கூறிக் கொண்டே அம்மன் உடலைத் தூய்மை செய்தான்.

பின் திரைவிலக்கப் பெற்று அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. அதன்பின் திரையிடப்பெற்று அம்மன் அலங்காரப் பணிகளைக் கம்பனே செய்தான். இதே சமயம் கோவிலின் முன்புறம் வாத்திய கோஷம் ஒருபுறமும், மற்றொரு புறம் பலியிடுவதற்காகக் கட்டப்பட்டிருந்த ஆடுகளின் கதறல் ஒலியும் கேட்டுக் கொண்டிருந்தன.

அம்மனை அலங்காரம் செய்யும்போது கம்பன், தன்னுடைய பழைய வினையின் சம்பந்தத்தால் குறளாகிய தமிழ் மறையைப் பலதடவை வாய்விட்டுக் கூறிக் கொண்டே பணிபுரிந்தான். கம்பன் வாய்விட்டுச் சொல்லிய அத்தமிழ் மறை வாக்கியம் மந்திரோச்சாடனமாகி அம்பாளின் செவியுள் புகுந்தது.

அப்போது சிலையுருவிலிருந்து அம்பாள் திவ்விய தன்னுருவை வெளிப்படுத்தினாள். அன்னை, கம்பனை நோக்கி ''பிள்ளாய்! உனக்கென்ன வரம் வேண்டும்! கேள்!'' என்று கருணையோடு கேட்டாள்.

அம்பாள் பெண்ணுருவாகிக் காட்சி தந்த அதிசயத்தைக் கண்ட கம்பன் திகைப்புற்று, கை கூப்பி வணங்கிப் பின் மன அச்சத்தோடு பூமியின் மீது சாஷ்டாங்கமாக விழுந்து, ''அம்மா! நான் ஆசிரியர் கூறும் பாடங்களையும் வாசிக்கும் பாடங்களையும் தெளிந்து கற்க அருள்வாயாக!'' என்றார்.

உடனே அம்பாள் கம்பனை நோக்கி "அப்படியே உன் எண்ணப்படி நடக்கும். நீ உச்சாடனம் செய்து கொண்டிருந்த குறளின் சொற்படி, இனி நான் இன்றி லிருந்து உயிர்ப் பலி ஏற்கமாட்டேன். நீ உலகத்துக்குப் பேரறிவு அளிக்கக் கடவை!'' என்று கூறி அன்னை மறைந்தாள். இப்பொழுது அன்னை அலங்காரம் மேலும் பிரகாசித்திருப்பதைக் கம்பன் கண்டான்.

அப்போது அங்கு வந்த ஓச்சன் தீப ஆராதனைக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தான். உரிய முறைப்படி தீபாராதனைக்குப்பின் பிடாரி, மற்றொரு பூசாரியின் உடலில் புகுந்து ஆடுகளைப் பலியிட உத்தரவு கொடுப்பது வழக்கம்.

இப்பொழுது திரை விலக்கப்பட்டது. பூசாரிகள் பலரும் உடுக்கை, சிலம்பு, திமிலை முதலிய வாத்தியங் களை முழக்கி, ஆடுகளைப் பலியிடுவதற்கான உத்தரவை எதிர் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அப்போது ஒரு பூசாரி உடலில் காளிபுக அப்பூசாரி ஆவேசமாக ஆடத் தொடங்கினான்.

ஆடிக்கொண்டே அப்பூசாரி எதிர்த்திருந்த சடையப்ப வள்ளலை நோக்கி "இன்று முதல் நான் உயிர்ப்பலி ஏற்க மாட்டேன். இனி எனக்கு வேண்டியது வெறும் பள்ள யமே!'' என்று உரத்துக் கூறி சடையப்பருக்கு திருநீறு கொடுத்து அப்படியே கீழே சாய்ந்தான். மற்றொரு பூசாரி அவன் நெற்றியிலே நீறு பூசி நீர் கொடுக்க மயக்கந் தெளிந்தான் அப்பூசாரி.

இக்காட்சியைக் கண்ட அனைவரும் வியப்படைந் தனர். எனினும் சற்று நேரத்திற்கு முன் மூலத்தானத்தில் நடந்த செய்தியை யாரும் அறியவில்லை.

இதனால் பலிக்காக கத்திக் கொண்டிருந்த ஆடு களுக்கு விடுதலை கிடைத்தது. அதற்குப்பதிலாக பூசணிக் காயை வெட்டிக் குங்குமத்தைத் தடவிப் பரிகாரம் செய்தனர்.

மறுநாள் காலையில் கணக்காயரோடு மற்ற மாணவர் களும் திருவெண்ணெய் நல்லூர் வந்து சேர்ந்தனர். கணக்காயரிடம் மாணவர்கள் கல்வி கற்றனர். ஆனால் என்றும் போலில்லாமல் கம்பனுடைய அறிவு பிரகாச மடைந்து, ஒருமுறை படித்த அளவிலேயே கற்றதை வேகமாகக் கூறத் தொடங்கினான். யாவரும் வியக்க சொல்லாற்றல் திறனைக் கம்பன் பெற்றான். தமிழ் மறை வாக்கியங்களாகிய திருக்குறள் 1330 பாக்களையும் பொருட் தெளிவுடன் இரு நாட்களில் கூறத் தொடங்கினான். யாவரும் போற்ற சிறந்த அறிவாளியாக விளங்கினான், கம்பன். திருவழுந்தூர் அம்மன் கொடுத்த வரமே கம்பனைப் பேரறிவாளனாகத் திகழச் செய்தது. திரு வெண்ணெய் நல்லூர் மக்களும், சடையப்ப வள்ளலும் கம்பனின் கல்வித் திறனை அறிந்து வியந்தனர்.

4. வயிரபுரம் காளியும் கம்பன் கவியாற்றலும் :

திருவழுந்தூர் அம்பாளின் அருளால் கற்றவனாகப் போற்றப்பட்ட கம்பன் அனுதினமும் திருவெண்ணெய் நல்லூருக்குப் பக்கத்திலுள்ள வயிரபுரம் என்னும் கிராமத்

திலுள்ள காளிகோவிலுக்குச் சென்று காளியை வழிபட்டு வந்தான். அவனுடைய நாக்கானது கவியியற்றத் துடித்தது.

திருவெண்ணெய் நல்லூர் கணக்காயரிடம் கற்ற மாணவர்கள் மற்றொரு பொறுப்பையும் ஏற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. கணக்காயருக்கு மானியமாக விடப் பட்டிருந்த நெல் வயலில் பயிர்கள் கதிர்களெடுத்து அறு வடையாகும் பருவத்தில் இருந்தது. ஒவ்வொரு நாளும் அந்நிலத்தைக் காவல் செய்ய ஒவ்வொரு மாணவனை கணக்காயர் அனுப்பி வைத்தார். இதனால் கம்பனுக்கும் காவல் செய்யும் முறை ஒரு தடவை வந்தது. மற்றைய மாணவர்களைப் போல கம்பனும் காவல்புரியச் சென்றான்.

கம்பன் காவல் செய்யச் சென்ற தினம், வயிரபுரம் கிராமத் தலையாரி காளிங்கராயன் என்பவருடைய குதிரை நெல்வயலுக்கு வந்தது. நெற்கதிர்களை மேயத் தலைப் பட்டது. கம்பன் அக்குதிரையை விரட்டினாலும் மறுபடியும் வந்து மேய்ந்தது. மீண்டும் மீண்டும் வந்து மேயத் தலைப் பட்டதால் கம்பன் வெருட்சியடைந்தான். தான் தினமும் வழிபட்டு வந்த வயிரபுரம் காளியை மனதில் தியானித்து அக்குதிரையை நோக்கி உக்கிரமாகப் பாட ஆரம்பித்தான். அப்பாடல் பின்வருமாறு :

"வாய்த்த வயிரபுர மாகாளியம்மையே
யாய்த்த வரையிலணி திகழக் – காய்த்த
கதிரை மாளத்தின்னும் காளிங்கராயன்
குதிரை மாளக் கொண்டுபோ''

என்ற வெண்பாவைக் கம்பன் பாடவும் மேய்ந்து கொண்டிருந்த குதிரை கீழே விழுந்து இறந்தது.

குதிரை துடித்து இறந்த நிலையில் பக்கத்திலுள்ள வயலில் வேலை செய்து கொண்டிருந்த மக்கள் ஓடி வந்து பார்த்தனர். இதனால் கம்பன் குதிரையைக் கொன்று விட்டான் என்ற செய்தி ஊரெங்கும் பரவியது.

குதிரை இறந்த செய்தி தலையாரி காளிங்கராயனுக்கு எட்டியது. அவன் கோபத்துடன் வயலை நோக்கி வந்தான். இதற்குள் கணக்காயருக்கும் செய்தி பரவ, அவர் சடையப்ப முதலியாரை அழைத்துக் கொண்டு வயலுக்கு வந்து சேர்ந்தார். கம்பர் உள்ளவாறு நடந்த சம்பவத்தைக் கூறி னான். எனினும் அச் செய்தியை யாரும் நம்பவில்லை. பள்ளியில் படிக்கும் ஒரு மாணவன் பாடிய பாடலால் குதிரை இறந்தது என்பதை எவரும் ஒப்புக்கொள்ள மறுத்தனர்.

அப்போது கம்பனுடைய ஆசிரியராகிய கணக்காயர், கம்பரின் பாடலின் நுட்பத்தை அறிந்து அனைவரையும் நோக்கி, கம்பன் பாடலால் குதிரை இறந்தது என்பது உண்மையானால், அவன் பாடும் மற்றொரு பாடலால் குதிரை பிழைக்கச் செய்யட்டும் என்று சமாதானப் படுத்தினார்.

பின் கணக்காயரே கம்பனை நோக்கி ''காளிங்க ராயருக்கு நஷ்டம் உண்டாகாதவாறு, கம்பா! இறந்த குதிரையை மீண்டும் பிழைக்கச் செய்ய கவி பாடுவாயாக!'' என்று வேண்டினார். கம்பன் காளி யம்மையை மனதில் தியானித்து கீழ்க்கண்ட வெண்பாவை பாடினான்,

“வாய்த்த வயிரபுர மாகாளியம்மையே
யாய்த்த வரையிலணி திகழக் – காய்த்த

கதிரை மாளத்தின்ற காளிங்கராயன்
குதிரை மீளக்கொண்டு வா!"

என்று வாய்விட்டுப் பாட குதிரை கனைத்துக்கொண்டு எழுந்தது. இதைக் கண்ட சடையப்ப முதலியாரும் கணக்காயரும் மற்றவர்களும் வியந்து கம்பனைப் பாராட்டினர்.

காளிங்கராயன் குதிரை மேய்ந்ததால் ஏற்பட்ட நஷ்டத்தைத் தந்து விடுகிறேன் என்று கூறியதோடு, அக்குதிரையை கம்பனுக்கே பரிசாகக் கொடுத்துவிட்டான். அன்றையிலிருந்து கம்பன் தெய்வப் புலவரானான். தமிழ்மொழியிலுள்ள ஏட்டுப் பிரதிகளையெல்லாம் அறிந்து கற்றுத் தேர்ந்தான் கம்பன். தமிழ்மொழியோடு ஆரிய மொழிகளையும் கற்றுத் தேர்ந்தான்.

மேற்கண்ட சம்பவத்தால் வயிரபுரம் காளியம்மன் அருளால் எளிதில் கவிபாடும் ஆற்றலைக் கம்பன் பெற்றான் என்பதை அறிகிறோம்.

இப்பொழுது க்ஷேத்ர பாலபுரமாகத் திகழ்வது தான் அன்று வயிரபுரம் என்று அழைக்கப்பட்ட கிராமமாகும்.

5. கம்பன் ஓர் அவதார புருஷன் :

கொங்கு நாட்டில் நல்ல மழை. எங்கும் வெள்ளப் பொருக்கு ஏற்பட்டது. காவிரி பெருக்கெடுத்து ஓடியது. வெள்ளப் பெருக்கு அதிகரிக்க, காவேரி உடைப்பெடுத்து நீர் கிராமங்களில் பாய்ந்தது. கிராம மக்களெல்லாம் திரண்டு கதறினார்கள். வெள்ளத்தால் கிராமம் மூழ்கி விடுமோ என்று சடையப்ப வள்ளலும் அஞ்சினார்.

இதைக்கண்ட கம்பன் காவிரியை உலகத் தாயாகப் போற்றி, கிராமத்திற்கு சேதம் ஏற்படாமல் காக்க வேண்டும் என்று வேண்டி கீழ்க்கண்ட வெண்பாவைப் பாடினான்.

"கன்னியழிந்தனள், கங்கை திறம்பினள்
பொன்னி கரையழிந்து போனாளென்று - இந்நீ
ராறை கடக்கலாமோ உலகுடைய தாயே
கரை கடக்க லாகாது காண்!"

என்று பாடவும் பெருக்கெடுத்து ஓடும் வெள்ளம் குறைவு ஏற்பட்டது. வயலுக்கும் எவ்விதத் தீங்குமின்றி நீர் வழிந்தது. இதையறிந்த சடையப்பரும், மக்களும் கம்பனை அவதார புருஷனாகக் கருதிப் போற்றினர்.

6. பயன்கருதாது உதவுபவர்கள் :

பயன்கருதாது உதவுபவர்கள் இருவர். சடையப்ப வள்ளல் ஒருவர். மற்றொன்று காவிரி நதியாகும். நீராடுவதற்கு காவிரி நீர் பயன்படுகிறது.

விருந்துண்ணும்போது குடிப்பதற்குப் பயன்படும் நீர் காவிரி. விருந்துண்ட பிறகு வாயைக் கழுவவும் பயன்படும் காவிரி நீர். அதுபோல் வாய்மையைக் காக்க போர் வாள் ஏந்தி உதவுபவர் சடையப்ப வள்ளல். காவிரியையும் சடையப்பரையும் ஒப்பிட்டு கம்பன் பாலப் பருவத்தில் பாடிய வெண்பா இன்சுவை பயப்பதாகும். அப்பாடல் பின் வருமாறு :

"மெய்கழுவி வந்து விருந்துண்டு மீளுமவர்
கைகழுவு நீர்போலும் காவிரியே – பொய்கழுவும்
போர்வேள் சடையன் புதுவையால் தன் புகழை
யார் போற்ற வல்லார் அறிந்து."

7. பூமாதேவி பெற்ற பேறு :

நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோருக்கும் பெய்யும் மழை என்று ஔவையார் பாடியுள்ளார்.

பூமாதேவி நம்மைத் தாங்குகிறாள். நாம் பூமியைத் தோண்டினாலும் பொறுத்துக் கொள்கிறாள்.

கொடையாலும் உதார குணத்தாலும் சிறந்தவராகிய சடையப்ப வள்ளல் போன்றவர்களை இப்பூமாதேவி பெற்றதனால் அவள் இருவகைச் சிறப்புகளைப் பெறுகின்றாள். பன்றி அவதாரம் எடுத்த திருமால் தன் கொம்பினால் தாங்கும் சிறப்பைப் பெறுகிறாள் பூமாதேவி. மேலும் சூலமேந்திய சிவபெருமான் சிரத்திலும் கங்கையாக அமர்ந்து பெருமையடைகிறாள் பூமாதேவி. பூமாதேவியின் நற்றவப் புதல்வனாக சடையப்ப வள்ளல் திகழ்கிறார் என்பதை கம்பன் கீழ்கண்ட பாடலிலே குறிப்பிடுகிறார் :

"காலப் புயல்நிகர் காராளர் தம்மைக் கடலுடுத்த
தாலக் குலமங்கை பெற்றதனால் சதாகாலமும் மால்
கோலத் திருமுகத்தாலே முகந்தனன் கடலிலே
சூலக்கரம் படையான் தலைமீது சுமந்தனனே!"

திருமாலாலும், சிவபெருமானாலும் பெருமை அடைபவள் பூமாதேவி. அப்பூமாதேவிக்கு நற்புதல்வ

னாய்த் தோன்றி, மக்களுக்குச் சிறப்புச் செய்பவர் சடையப்ப வள்ளல் என்பதைக் கம்பன் பாலப் பருவத்தி லேயே கவியால் உணர்த்தும் திறன் போற்றுதற்குரியதாகும்.

8. திருவெண்ணெய் நல்லூர் சிறப்பும் சடையப்பரின் பெருந்தன்மையும் :

கம்பனை ஆதரித்து, வளர்த்து அவர் கவியாற்றலை உலகுக்கு அறிவித்தவர் சடையப்ப வள்ளல் ஆவார். சடை யப்ப வள்ளலுடைய மாளிகையில் கம்பன் இளைஞனாக இருந்தபோது, ஆண்கள் பலரும், பெண்கள் பலரும் திரளாக அங்கு வருகை தந்து சடையப்பரை வணங்கி நின்றனர்.

''தாங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்கள்?'' என்று சடையப்பர் கேட்டார்.

அப்போது அவர்களில் ஒருவர் ''ஐயா! நாங்கள் மலைநாட்டு மக்கள் உழுதொழிலையே நம்பி வாழ்பவர் கள். சிறிது காலமாக வானம் பொய்த்துவிட்டதால், பசியாலும் பட்டினியாலும் வாடுகின்றோம். எங்களுக்கே உணவு கிடைக்காததால் கோவில்களில் பூஜைகள் நடை பெறவில்லை. தெய்வங்களுக்கும் படையல்கள் போட முடியவில்லை. திருவிழாக்கள் நடத்த முடியவில்லை. ஐயா! தரும பிரவுவே! தாங்கள் மனமிரங்கி நெல்லும் பொருளும் கொடுத்து உதவினால் தெய்வங்களுக்குத் திருவிழா நடத்த முடியும். எங்கள் வறுமையையும் நீங்கள் போக்க வேண்டுகிறோம்!'' என்று கூறினார். அனைவரும் கீழே விழுந்து வணங்கினார்கள்.

இதனைக் கண்ட சடையப்பர் மனமிரங்கினார்.

''பெரியோர்களே! உங்கள் நாட்டில் திருவிழாக்கள் மட்டுமல்ல! உங்கள் நாட்டின் பஞ்சத்தையே போக்க என்னால் முடிந்த அளவுக்கு உதவி செய்கிறேன். வருந் தாதீர்கள்!'' என்று சடையப்பர் கூறினார்.

அப்போது அருகிலிருந்த கம்பன் சடையப்ப வள்ளலின் கருணையைப் பாராட்டி வெண்பாவில் கவியசைத்தான்.

''மோட்டெருமை வாவிபுகமுட்டுவரால் கன்றென்று
வீட்டளவும் பால்சொரியும் வெண்ணெயே – நாட்டில்
அடையா நெடுங்கதவும் அஞ்சலென்ற சொல்லும்
உடையான் சடையப்பனூர்''

இப்பாடலின் பொருள் :

''பெருத்த எருமை ஒன்று பசும்புற்கள் நிறைந்த மேய்ச்சல் காட்டில் மேய்ந்து அதன் வயிறு நிறைந்ததும் உடலைத் தாக்கிய வெப்பம் தாங்காமல் அருகிலுள்ள தடாகத்தில் நீராட இறங்கியது. குளத்திலிருந்த வரால் மீன்கள் துள்ளி அந்த எருமையின் பெருத்த மடிகள் மீது மோதின. தன் கன்றுதான் மடியை மோதுகிறது என்று எண்ணிய எருமை தன் எஜமானனின் வீட்டிற்குச் செல்லும் வரை பால் சொரிந்து கொண்டே சென்றதாம்.

இத்தகைய வளமிக்க ஊர் திருவெண்ணெய் நல்லூ ராகும். அவ்வூரில் சடையப்பர் வாழ்கிறார். அவருடைய மாளிகையின் நெடுங்கதவுகள் எப்பொழுதும் அடையாமல் திறந்தே இருக்கின்றன. ஆதரவு கேட்டு வருபவர்

அனைவரையும் பயப்படாதீர்கள்! என்று கூறி அபயம் அளிக்கின்றன.''

கம்பன் பாடிய பாடலைக் கேட்டதும் சடையப்பர் உட்பட அனைவரும் மகிழ்ச்சியடைந்தனர். தங்கள் சார்பாக, சடையப்பரை வாழ்த்திப் பாடிய கம்பனை மலை நாட்டு மக்கள் போற்றி விடைபெற்றுச் சென்றனர்.

மறுநாள் வண்டி வண்டியாக நெல் மூடைகள் மலைநாட்டுப் பகுதிக்குச் சென்றன. உழவுத் தொழில் வளம் பெற்றது. ஊர் செழித்தது. திருவிழாக்கள் நடைபெற்றன.

தம்மை அண்டிவந்தோர்க்கு உதவி செய்யும் பெருமனம் படைத்த சடையப்ப வள்ளலுடைய வள்ளல் தன்மைக்கு ஒரு சிறு எடுத்துக்காட்டுதான் கம்பன் இசைத்த இப் பாடலாகும்.

9. கம்பன் சோழ சபைக்கு வருதல் :

கம்பனுடைய கவியாற்றலையும் காளி, உலகத்தாயாகிய பராசக்தியின் அருள் பெற்ற நிலையையும் அறிந்த சடையப்ப வள்ளல் கம்பனை சில நாட்கள் தொண்டை நாட்டின் தலைநகராகிய காஞ்சிபுரத்தில் அனுப்பிக் கவிபாடி வருமாறு பணித்தார். காஞ்சிபுரம் சென்றான் கம்பன். உத்தரகோட்டம், புண்ணியகோட்டம், காமகோட்டம், குமரக்கோட்டம் இவைகளின் பெருமைகளை அறிந்தான் ஏகம்பநாதருடைய வரலாற்றைக் காவியமாக்க எண்ணினான். காஞ்சிபிள்ளைத் தமிழ், காஞ்சி குறவஞ்சி, காஞ்சிப்புராணம் முதலான பல பிரபந்தங்களைப் பாடி அரங்கேற்றினான்.

கம்பனுடைய பெருமைகளை சோழ அரசனாகிய குலோத்துங்க சோழன் அறிந்தான். தன்னுடைய சபையில் ஒட்டக்கத்தர், ஔவையார், புகழேந்திப்புலவர்கள் போன் றோர் அவ்வப்போது அவைப்புலவராக வந்து இருந்தனர். கம்பனையும் தன் அவையில் அலங்கரிக்கச் செய்ய வேண்டுமென எண்ணினார். குலோத்துங்க சோழனின் நெருங்கிய நண்பர் சடையப்ப வள்ளல் ஆவார். சோழ அரசன் சடையப்ப வள்ளலிடம் கம்பனை அவைக்கு அழைத்து வருமாறு வேண்டினார். இதனால் சடையப்ப வள்ளல் கம்பனை அவைக்கு அழைத்துச் சென்றார். அப்போது கம்பன் ஒரு கம்பையேந்திச் சபைக்குச் சென் றார் என்று கூறப்படுகிறது.

3

கம்பர் ''ஏரெழுபது'' நூல் இயற்றுதற்கான நிகழ்ச்சி

கம்பர் இராமாயணத்தை அரங்கேற்றுவதற்கு முன் ஸ்ரீ அரங்கநாதரின் அருளால் வைணவத் தொண்டர் நம்மாழ்வாராகிய சடகோபர் மீது 100 பாடல்கள் கொண்ட ''சடகோபரந்தாதி'' நூலை இயற்றி அரங்கேற்றினார் என்பதை அறிவோம்.

அதே போல் கம்பர் தன்னுடைய மகள் காவேரியின் திருமண நிகழ்ச்சியின் போது, சடையப்பரின் குல மரபைப் பாராட்டி ஏரெழுபது என்னும் நூலை இயற்றினார் என்பதை அறிகிறோம்.

1. காவேரியின் திருமண நிகழ்ச்சி :

புலவர் புராணத்தை இயற்றிய ஸ்ரீமத் முருகதாச சுவாமிகள் கூறியுள்ளவாறு ஏரெழுபது எப்படி இயற்றப் பட்டது என்பதை அறிவோம்.

கம்பருக்கு காவேரி என்ற பெயரை உடைய மகளும் அம்பிகாபதி என்ற பெயரையுடைய மகனும் உண்டு என்பதை அறிவோம்.

கம்பர் தன்னுடைய மகள் காவேரியின் திருமணத்தை நாடு முழுவதும் அறிவித்து சிறப்பாக நடத்த ஏற்பாடு செய்தார். திருமண மண்டபத்தில் பல முடி மன்னர்கள் முன்னிலையில் காவேரியின் திருமணம் நடைபெற்றது. திருமண வைபவ நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் சடையப்ப முதலியார் வருகை தரவில்லை. நேரம் கழித்து வந்த காரணத்தினால் மண்டபத்தின் சுவரை ஒட்டிய ஜலதாரை வாய்க்கால் ஓரத்தில் பலரோடு நின்று கொண்டிருந்தார். கம்பர் அதைக் கவனிக்கவில்லை.

மணப்பெண்ணாகிய காவேரி அலங்காரத்தோடு வேள்விக்கு முன் வரும் போது, நேரே வாய்க்கால் ஓரத்தில் நின்று கொண்டிருந்த சடையப்ப வள்ளலைக் கண்டு, பக்கத்தில் வந்து கொண்டிருந்த தன் தந்தையை நோக்கி ''அப்பா! அதோ அங்கு யாவரும் கவனிக்கப்படாத நிலையில் முதலியார் நிற்பதைச் சுட்டிக் காட்டினாள்.

பல அரசர்களும் சடையப்பரைக் கண்டும் காணாதது போல் இருந்தனர். கம்பர் தன் மகளை நோக்கி, ''மகளே! நீ வருத்தப்பட வேண்டாம்! எல்லோரும் அவரைக் காணும் வகையில் முன் கொண்டு வந்து சிறப்பிக்கிறேன்!'' என்று கூறியவராய் சடையப்பரை அழைத்து வந்து அவருடைய குலப் பெருமையைப் போற்றி எழுபது பாடல்கள் கொண்ட ஏரெழுபது என்ற நூலைப் பாடினார் கம்பர்.

2. சடையப்பருக்கு ஏற்பட்ட துன்பம் :

உழவர் பெருமையை விளக்கும் ''ஏரெழுபது'' என்ற நூலைக் கம்பர் பாடிக் கொண்டிருக்கும் போது, ஊர்ந்து வந்த பாம்பு ஒன்று முன்னால் அமர்ந்திருந்த சடையப் பரைத் தீண்டிச் சென்றது. கம்பர் பாடிய பாடல்களுக்குத் தடை ஏற்படக் கூடாதென்று கருதிய சடையப்பர் அதை யாருக்கும் வெளிப்படுத்தவில்லை. கம்பர் பாடி முடிக்குந் தறுவாயில், கடியுண்ட பாம்பின் விஷம் சடையப்பரின் தலைக்கேறுவதை, சரஸ்வதியின் அருளால் கம்பர் அறிந்தார்.

உடனே கம்பர் பாம்புகளுக்கு அரசனான ஆதிசேட னைப் பிரார்த்தித்து மூன்று வெண்பாக்கள் பாடினார். அப்பாடல்களும், அவைகளின் கருத்தும் பின்வருமாறு :

அ. "ஆழியான் பள்ளியணையே! அவன் கடைந்த
வாழி வரையின் மணித்தாம்பே! – யூழியான்
பூணே! புரமெரித்த பொற்சிலையிற் பூட்டுகின்ற
நாணே! அகல நட."

கருத்து :

திருமாலின் படுக்கையாய்த் திகழ்பவனே! அவர் பாற்கடல் கடைந்த மத்தாகிய மந்தர மலைக்கு உரிய தாமணிக் கயிறே! உலகிற்கு அணிகலனே! திரிபுரம் எரிக்க முதலில் சிவபெருமான் பயன்படுத்தவிருந்த வில்லின் நாணே! துன்பத்தை நீக்கிவிட்டு நடப்பாயாக!

ஆ. "மங்கையொரு பாகன் மணி மார்பில் ஆரமே!
பொங்கு கடல் கடைந்த பொற்கயிறே – திங்களையும்
சீறிய தன் மேல் ஊருந் தெய்வத் திருநாணே!
சீறியதன் மேல் ஊருந் தெய்வத் திருநாணே!
ஏறிய பாம்பே இறங்கு"

கருத்து :

உமாதேவியை இடப்பாகமாகக் கொண்ட சிவபெருமானின் மார்பிலணிந்த ஆபரணமே! பாற்கடலைக் கடையப் பயன்பட்ட பொற்கயிறே! பிறைச் சந்திரனைச் சூடிய சிவபெருமானின் தேகத்தில் ஊர்ந்து செல்லும் பாம்பே! சடையப்பரைத் தீண்டிய நஞ்சினை அவர் உடலிலிருந்து திரும்பப் பெறுவாயாக!

இ. "பாரைச் சுமந்த பரவரவே! பங்கயக்கண்
வீரன் கிடந்துறங்கும் மெல்லணையே – ஈரமதிச்
செஞ்சடையின் பூணுந்திரு ஆபரணமே!
நஞ்சுடையாய் தூர நட"

கருத்து :

பூமியைத் தாங்கும் ஆதிசேடனே! தாமரை மலர் போன்ற கண்களையுடைய திருமால் படுத்துறங்கப் பயன் படும் மென்மையான படுக்கையே! குளிர்ந்த சந்திரனை சிவந்த சடையில் சூடிய சிவபெருமான் அணியும் ஆபரணமே! நீ கொடுத்த நஞ்சைத் திரும்ப வாங்குவாயாக!

மேற்கண்ட மூன்று வெண்பாக்களைப் பாடி நாகங் களுக்கெல்லாம் அதிபதியாகிய ஆதிசேடனைக் கம்பர் பிரார்த்தித்தார். அப்போது அருகாமையில் வெளிப்புறமிருந்த

ஒரு புற்றிலிருந்து ஒரு நாகம் வெளியே வந்து, யாவரும் அதிசயிக்கும் வண்ணம் சடையப்ப வள்ளலைத் தீண்டிய உடலின் பாகத்திலிருந்த நஞ்சை உறிஞ்சி மீட்டுக்கொண்டு சென்றது. அப்போது சடையப்ப வள்ளல் மூர்ச்சை தெளிந்து உயிர் பெற்றெழுந்தார்.

கம்பரின் சரஸ்வதி அருள் ஆற்றலை அரசர்கள் வியந்து பாராட்டினர். தாங்களும் சடையப்பரைத் தகுந்த முறையில் வரவேற்காமலிருந்ததற்கு மன்னிப்புக் கேட்டனர். பின்னர் தொடர்ந்து காவேரியின் திருமணச் செயல்கள் நடைபெற்றன.

மேற்கண்ட செய்தியை புலவர் புராணத்தை இயற்றிய ஸ்ரீமத் முருகதாச சுவாமிகள் கூறியுள்ளார்.

இதற்கு மாறாக சடையப்ப வள்ளலைப் பாம்பு தீண்டவில்லை. சடையப்ப வள்ளலின் மகன் சேதிராயன் என்பவனைப் பாம்பு தீண்டியதாக கவிச் சக்கரவர்த்திகளின் கதைகளில் சிவகாமி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

3. காவேரியின் இறுதி நிலை :

ஸ்ரீமத் முருகதாச சுவாமிகள் கூறிய மேற்கண்ட செய்தியைத் தொடர்ந்து மற்றொரு நூலில் கம்பரின் மகள் காவேரியின் இறுதிநிலை கீழ்க்கண்டவாறு குறிக்கப் பட்டுள்ளது.

குலோத்துங்க சோழனுடைய மகன் கம்பருடைய மகளாகிய காவேரியின் அழகில் சொக்கி, எப்படியாவது அவளை அடையவேண்டும் என்று விரும்பினான். மோகம் தலைக்கேறவே, அவளைப் பலாத்காரமாகப் புணர விரும்பித் தொடர்ந்தான். காவேரி தப்பி ஓடினாள். அங்கே உயரமாக அமைக்கப்பட்டிருந்த கம்பங் குதிரில் விழுந்து ஆழ்ந்து முழுகி உயிரை மாய்த்துக் கொண்டாள்.

இச் செய்தியைக் கேள்விப்பட்ட கம்பர் மனம் சோர்ந்து சோழநாட்டைத் துறந்து சென்றார்.

4

கம்பரின் ஏரெழுபது அரங்கேற்றமும் கவிச்சிறப்பும்

கம்பரின் மகள் காவேரியின் திருமண நிகழ்ச்சியின் போது ''ஏரெழுபது'' கம்பரால் பாடப்பெற்றது என்று ஸ்ரீமத் முருகதாச சுவாமிகள் கூறியுள்ளார். எனினும் அதற்கும் ஓர் மறுப்பு உண்டு. திருமண நிகழ்ச்சி ஒரு நாளில் ஒரு நூலை அரங்கேற்ற உறுதியாக முடியாது என்று பலரும் மறுப்பு தெரிவித்துள்ளனர்.

தமிழக அரசு வளர்ச்சித் துறையில் சிறப்புப் பெற்ற கலைமாமணி இரா. பழனிச்சாமி அவர்களின் துணையால் கிடைத்த கம்பரின் ஏரெழுபது நூலிலுள்ள விநாயகர் காப்பு உட்பட 26 பாடல்களைக்கொண்டு, அரங்கேற்றம் பின்னர் தனித்து நடந்தது என்பதை அறிகிறோம்.

கம்பரின் ஏரெழுபது என்ற சிறு காவியம் பின்னர் எவ்வாறு அரங்கேற்றப்பட்டது என்பதைக் கலைமாமணி இரா. பழனிச்சாமி வழிநின்று இப்பொழுது அறிவோம்.

1. வேலை தேடிவந்த நால்வர் :

உழவுத் தொழில் செய்யும் குடும்பத்தில் பிறந்தவர்கள் நால்வர் இணைபிரியாத நண்பர்கள். அவர்கள் பொன்னன், முத்தன், மருதன், வாணன் என்பார்கள். அவர்கள் நால்வரும் முறையே உழவுத் தொழில் குடும்பத்தைச் சேர்ந்த பூங்குழலி, மருதி, மரிக்கொழுந்து, சண்பகம் ஆகிய

நங்கையர்களைக் காதலித்தனர். பொன்னன் வாள்வித்தையில் வல்லவன். முத்தன் பிறரோடு வாதிடும் தர்க்க சாத்திரத்தில் வல்லவன். மருதன் சிற்ப சாத்திரத்தில் வல்லவன். வாணன் வண்டமிழில் கவிபாடுவதில் வல்லவனாயிருந்தான்.

நங்கையர் நால்வரும் தங்களைக் காதலித்த நான்கு காதலர்களும் தங்களின் புலமைத் திறத்திற்கேற்ப சோழனுடைய சபையில் பணிபுரிந்தால் அவர்களை திருமணம் செய்து கொள்வதாக வாக்களித்தனர்.

இதனால் பொன்னன், முத்தன், மருதன், வாணன் நால்வரும் அப்பொழுது சோழநாட்டை ஆட்சி செய்து கொண்டிருந்த மூன்றாம் குலோத்துங்கன் சபையில் தத்தம் தகுதி புலமைக்கேற்ப பணிபுரிய வேலை வேண்டி அரசனிடம் வந்தார்கள்.

அரசன் அந்த நால்வருடைய திறமையை கேட்டு அறிந்தான். அவர்களுடைய பூர்வீகத் தொழில் உழவுத் தொழில் என்பதையும் அவர்களுடைய காதலியர்களின் தூண்டுதலையும், அரசபையில் தங்களுடைய திறமைக்கேற்ப பணிபுரிந்தால் அவர்களைத் திருமணம் புரிந்து கொள்வோம் என்று கூறிய உறுதியாலும் வேலைகேட்டு வந்துள்ளனர் என்பதையும் அரசர் அறிந்து கொண்டார்.

2. ஏவலன் கொண்டு வந்த செய்தி :

அப்பொழுது அரச வேலையாள் ஒருவன் அங்கு வந்து, அரசரைப் பணிந்து ஓர் ஓலையைக் கொடுத்து "அரசே! இவ்வோலையை ஐயா, சடையப்ப வள்ளல் தங்களிடம் கொடுக்கச் சொன்னார்" என்றான்.

அரசர் ஓலையைப் பிரித்துப் படித்தார். சடையப்பருடைய மாளிகையில் அடுத்த நாள் காலை 10 மணியிலிருந்து இரண்டு அல்லது மூன்று நாட்கள் கம்பர் எழுதிய ஏரெழுபது என்னும் நூல் அரங்கேற்றம் செய்யப்படுவதாகவும் அவசியம் வருகைதர வேண்டுமென்றும் அவ்வோலையில் செய்தி குறிப்பிடப்பட்டிருந்தது.

3. அரசர் நால்வரிடமும் கூறியவை :

ஓலையில் எழுதப்பட்டிருந்த செய்தியை அறிந்தார் அரசர். ஏரெழுபது என்ற நூல் உழவுத் தொழிலைப் பற்றிய காவியமாக இருக்கும் என்று அறிந்த அரசர் தம் முன் வந்து நின்ற நால்வரையும் அடுத்த நாள் நடைபெறவிருக்கும் நூல் அரங்கேற்றத்தில் பங்கு கொள்ளும்படி கூறி அதன் பிறகு அரசாங்கத்தில் வேலை தருவதாகவும் சொல்லி அனுப்பினார்.

ஏரெழுபது என்ற நூல் கம்பரால் உழவுத் தொழிலின் சிறப்பைப் பற்றி எழுதப்பட்ட எழுபது பாடல்கள் அடங்கிய நூலாகும். அந்நூலில் உழவுத் தொழிலின் உயர்வு விளக்கப் பெற்றிருக்கிறது.

4. ஏரெழுபது அரங்கேற்றம் :

சடையப்ப வள்ளலின் மாளிகையின் முன்புறம் விசாலமான இடத்தில் பந்தல் போடப்பட்டிருந்தது. ஒரு பக்கத்தில் மேடை ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது. அம்மேடையில் தான் ஏரெழுபது என்னும் நூல் அரங்கேற்றம் செய்ய ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தது. சடையப்பர் பல நாட்டு அரசர்களுக்கும் பெரியோர்களுக்கும் செய்தியை அறிவித்து அவர்கள் அமர்வதற்கு தகுந்தவாறு ஆசனவசதி

செய்திருந்தார். பொது மக்கள் வந்து அமர்ந்து கேட்க ஒரு பகுதி ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தது.

அடுத்த நாள் அரசர் குறிப்பிட்டபடி பொன்னன், முத்தன், மருதன், வாணன் ஆகிய நால்வரும் பொது மக்களுக்காக அமர ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இடத்தில் வந்து அமர்ந்தனர். அவர்கள் காதலிகள் பூங்குழலி, மருதி, மரிக்கொழுந்து, சண்பகம் ஆகியோரும் ஒருபுறம் அமர்ந் திருந்தனர். அரசர் பலரும் தனவந்தர்களும் பிரபுக்களும் வருகை தந்து உரிய இடத்தில் அமர்ந்திருந்தனர். சோழ அரசனும் சடையப்ப வள்ளலும் உரிய இடத்தில் வந்து அமர்ந்திருந்தனர்.

முதல்நாள் நிகழ்ச்சி :

அரங்கேற்ற மேடையில் கம்பர் எளிய உடையணிந்து கொண்டு, தன்னுடைய சீடர்களாகிய கற்றுச்சொல்லிகளுடன் வந்து அனைவருக்கும் வணக்கம் செலுத்தினார். கற்றுச் சொல்லி ஒருவன் கொண்டு வந்து ஏரெழுபது சிற்றிலக்கிய ஏட்டுச் சுவடிகளை அங்கு அமைக்கப்பட்டிருந்த சரஸ்வதி சிலையின்முன் வைத்தான்.

கம்பர் சரஸ்வதியை வணங்கி, நூலின் முதல் செய்யுள் விநாயகரின் அருளை வேண்டிப் பாடிய ''கணபதி வாழ்த்து'' பாடலை இசையுடன் நிறுத்திப் பாடினார்.

கணபதி வாழ்த்து

1. ''கங்கை பெறுங் காராளர்
கருவி எழுபதும் உரைக்க
அங்கை பெறும் வளைத் தழும்பும்
முலைத்த ழும்பும் அணியமலை

மங்கை பெறும் திருவுருவாய்
வந்துரைந் தார்தமை வலஞ்செய்
கங்கை பெறும் தடவிகடக்
களிற்றா னைக்கழல் பணிவாம்."

பாடலின் கருத்து :

கங்கா தேவியின் திருவயிற்றில் அவதரித்த காராளர் எனப்படும் வேளாளர்களைப் பற்றி எழுந்த ஏரெழுபது என்னும் சிற்றிலக்கியத்தை எடுத்துரைக்க அழகிய கைகளில் வளையல்களின் தழும்பும், எழிலுடைய மார்பகமும் கொண்டவளாகிய மலைமகளாகிய பார்வதியின் திருக் குமரனாய் அவதரித்தவனும், கங்கா தேவியின் செல்வ மகனும், கருணை நிறைந்தவனுமாகிய விகடங்கள் புரியும் கணபதியின் கமல பாதங்களைப் பணிந்து போற்று கின்றேன்.

கார்மேகங்களின் சிறப்பறிந்து உழுதொழிலை வேளாளர்கள் செய்வதால் அவர்களைக் காராளர் என்று கம்பர் குறிப்பிடுவது போற்றுதற்குரியதாகும். இப்பாடலில் ''கருவி'' என்று குறிப்பிடுவது ஏரெழுபது என்னும் சிற்றிலக்கியமாகும். சிவபெருமான் கங்கையைத் தலை யிலணிந்தவர். பார்வதி தேவியாரை உடலின் இடப்பாக மாகக் கொண்டவர். கங்கா தேவி, மலைமகளாகிய பார்வதி இருவரையும் கொண்ட சிவனாரின் தவப்புதல்வன் விநாயகர். விநாயகர் யானைத் தலையை உடையவர். விகடம் புரியக் கூடியவர். ஏரெழுபது என்னும் நூல் சிறக்க கணபதியின் கழலணிந்த பாதங்களைப் பணிந்து போற்றுகிறேன் என்று கம்பர் குறிப்பிடுவது போற்றுதற் குரியதாகும்.

கணபதி வாழ்த்துப் பாடலின் கருத்தையும் அதன் விளக்கத்தையும் கம்பர் சபைக்கு எடுத்துக்கூறி, விளங்க வைத்தார். கம்பரின் கவிதைத் திறத்தையும், பொருளழகையும் கேட்டு மக்கள் கைதட்டினார்கள்.

அடுத்து மும்மூர்த்திகளின் துதியாகக் கீழ்க்கண்ட பாடலை பாடுகின்றேன். கேட்பீர்களாக!

2. "நிறைக்குரிய அந்தணர்கள்
நெறிபரவ மநுவிளங்க
தறைக்குரிய காராளர்
தமது வரம் பினிதோங்க
மறைக்குரிய பூமனையும்
வண்டுளபத் தாமனையும்
பிறைக்குரிய நெடுஞ்சடிலப்
பெம்மானையும் பணிவாம்"

என்று கம்பர் இசைத்துப் பாடினார். உடன் பொருளைக் கூறினார்.

பாடலின் கருத்து :

நிறைவான குணங்களையுடைய அந்தணர்களால் தருமம் தழைத்தோங்கவும், நீதி நூல்களில் கூறப்பட்டபடி அறம் ஓங்கவும், நிலத்தை வளமுடையதாகச் செய்யும் காராளராகிய உழவர்களின் குலம் மாண்பு பெற்று ஓங்கவும், நான்மறைகளுக்குத் தலைவனான பிரம்மனையும், வண்டுகள் மொய்க்கும் தேன் மலர் மாலையணிந்த நாராயணனையும் பிறையணிந்த சடையையுடைய பெம்மானாகிய சிவ பெருமானையும் வணங்குவோம்.

முதலடியில் அந்தணர்களின் நீதி வழுவா நெறிமுறைகளையும் இரண்டாவது அடியில் பூமியைச் செழிக்கச் செய்யும் குலத்தினராகிய உழவர்களின் பெருமைகளையும் எளிய சொற்களால் தொகுத்துத் தந்துள்ளார் கம்பர். மூன்றாம் நான்காம் அடிகளில் மும்மூர்த்திகளுடைய பெருமையை குறிப்பிட்டுள்ளார். நான்முகனைப் பூமன் என்றும் திருமாலைத் தாமன் என்றும் குறிப்பிடுகிறார். தாமன் என்ற சொல் கதிரவனையும் குறிக்கும். எனினும் திருமாலைக் குறிப்பதற்காக வண்டுளபத் தாமன் என அடைமொழிச் சிறப்பு கொடுத்துள்ளார் கம்பர். பெம்மான் என்ற சொல் கடவுளர் மூவரையும் குறிக்குமாதலால், பிறைக்குரிய நெடுஞ்சடிலப் பெம்மான் என்று கூறி சிவ பெருமானைக் காணவைக்கிறார் கம்பர்.

இப்பாடலின் கருத்தைப் பலரும் விளங்க விரித்துரைத்த கம்பரின் கவிநயத்தை மக்களறிந்து பாராட்டினர் :

அப்போது சபையோர்களை நோக்கிக் கம்பர் ''பெரியோர்களே! முதல் பாடலில் கணபதி வாழ்த்தும், இரண்டாவது பாடலில் மும்மூர்த்திகளின் அருளும் வேண்டிப் பாடிய நான் இப்பொழுது அனைவர்களுடைய நாவிலும் நடமாடும் கலைமகளின் அருளை வேண்டி மூன்றாவது பாடலைப் பாடுகிறேன்! கேளுங்கள்!'' என்று கூறி அடுத்த பாடலை இசையுடன் பாடினார் கம்பர்.

3. “திங்கள் மும்மாரி பெய்ய
 செகத்தி லுயிர் தழைத் தோங்க
கங்க குலாதிபர் வயலில்
 கருவீறத் தொழு குலத்தோர்

துங்க முறமநு நீதி
துளங்கிட வையம் படைத்த
பங்கயன் றன்நா விலுறை
பாமடந் தைப்பதம் பணிவோம்.''

பாடலின் கருத்து :

''மாதந்தோறும் மூன்று முறைகள் மழை பெய்யவும், உலகத்திலுள்ள உயிரினங்கள் அனைத்தும் தழைத்து ஓங்கவும், கங்கா தேவியின் புத்திரர்களான காராளர் குல மரபில் வந்த வேளாளர்களுடைய வயலில் விளைந்த நெற்கதிர்கள் கருக்கொண்டு உருப்பெற்று வீரியமும் பெறும்.

காராளர் குலத்தவர்கள் மேன்மை பெறவும், தரும நீதி நிலைத்திடவும் இவ்வுலகைப் படைக்கும் நான்முகன் துணைவியும், வெள்ளைத் தாமரையில் வீற்றிருப்பவளும் நாவில் வசிப்பவளும் என் கவிதைக்குத் துணையாக இருப்பவளுமாகிய வாணியின் பொற்பாதங்களைப் பணிவோமாக!''

இப்பாடலில் நெற்பயிர் தழைத்து வளர மழையும் பெய்ய வேண்டும், உழவர்களின் உழுதொழிலும் நடைபெற வேண்டும்.

''வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று''

(குறள் – *11*)

என்று வள்ளுவரும் கூறியுள்ளார். அதோடு மட்டுமல்ல உழுதொழில் சிறப்படையவும், மனுநீதி இவ்வுலகில்

தழைத்து ஓங்கவும், உழுதொழில் சிறப்பை விளக்கும் ஏரெழுபது என்னும் நூல் வளம்பெறவும் கலைமகளின் அருளும் நல்கவேண்டும் என்று கம்பர் சபையோர்களைப் பார்த்து விளக்கிப் பேசினார்.

கம்பர் கூறிய உரையைக் கேட்ட அவையில் அமர்ந் திருப்போர் அனைவரும் ஆனந்தத்துடன் கைதட்டினார்கள்.

''வேளாளர் குலத்தை உயர்த்திப்பாடும் கம்பரின் கவியினைக் கேட்ட சோழ அரசன், இன்னும் சோழர் குலத்தைப் பற்றிப் பாடவில்லையே!'' என்ற எண்ணத் துடன் குலோத்துங்க சோழன் சற்று முகம் வேறுபட்டான்.

இதைக் குறிப்பால் அறிந்த கம்பர் சபையோர்களைப் பார்த்து ''அவையோர்களே! இதுவரை நான் பாடிய மூன்று பாடல்களில் கடவுள் வாழ்த்தோடு, காராளர், அந்தணர் இவர்களுடைய பெருமையை எடுத்துக் கூறினேன். இப் பொழுது மருத நிலமாகிய சோழ நாட்டினை ஆளும் மன்னர் குலத்தின் மாட்சியை அறிவோமாக!'' என்று கூறி அடுத்த பாடலை இசைத்தார் கம்பர்:

4. ''ஈழ மண்டலம் முதலென உலகத்
தெண்ணு மண்டலத் தெறிபடை வேந்தர்
தாழு மண்டலக்கும் செம்பியன் மரபோர்
தரமெலாம் பிறந்தி ரியபல் வளத்தின்
வாழ மண்டலம் கனகமு மணிகன்
வரம்பில் காவிரிக் குரம்பினில் கொழிக்கும்
சோழமண்டலம் இதற்கி ணையாமென்று
சொல்லு மண்டலர் சொல்வதற் கிலையே.''

பாடலின் கருத்து :

ஈழ மண்டலமாகிய இலங்கை உட்பட உலகில் உள்ள எல்லா மண்டலங்களையும் தன்வயப்படுத்தி, எதிர்க்கும் பகைவர்களை சிதறி ஓடச் செய்யும் படை பலத்தோடு ஆள்பவர்களும், செம்பியன் மரபோரும், காவிரியின் அலைகளில் தெறித்து விழும் பொன்னையும் மணிகளையும் மற்றும் தரமான பெருவளங்களையும் கொண்ட சோழ மண்டலத்திற்கு இணையாக வேறு மண்டலங்களைச் சொல்வதற்கில்லை. அத்தகு சிறப்புப் பெற்றது சோழ மண்டலமாகும்.

செம்பியன் மரபோர் என்று சொல்லப்படும் சோழ மண்டலத்தின் பெருமையையும், காவிரியாற்றின் சிறப்பை யும் கவித்திறத்தால் விளக்கிக் காட்டிய கம்பரின் சொல் லாற்றலைக் கேட்ட குலோத்துங்கனின் உள்ளம் மகிழ்ச்சிக் கடலில் திளைத்தது.

தொடர்ந்து கம்பர் ''சபையோர்களைப் பார்த்து இப்பொழுது சோழ மண்டலத்தின் பெருமையை அறிந் தோம். அடுத்து சோழ மன்னர்களின் ஆட்சிச் சிறப்பை அறிவோம்!'' என்று கூறி அடுத்த பாடலை இசைத்தார். ஆர்வம் மிக்கோங்க, மூன்றாம் குலோத்துங்க சோழனும் சபையோரும் அடுத்து கம்பர் பாடும் பாடலைக் கேட்கத் தயாரானார்கள்.

5. ''முடியுடை மன்னவரின்
மூவுலகும் படைத்துடைய
கொடியுடை மன்னவரிற்
குலமுதற் பெயருடையான்

இடியுடையொ லிகெழநீர்
எழுபத்தொன்பது நாட்டு
முடியுடையான் சென்னிபிறர்
என்னுடையார் கூறீரே.''

பாடலின் கருத்து :

''மூவுலகையும் ஆளுகின்ற முடியுடைய மன்னவர்கள் எல்லோரையும் விட செம்மையுடைய மன்னவர்களும் செம்பியன், வளவன், சென்னி என்னும் குலப் பெயரை முதலாகக் கொண்டவர்களும் இடியெனப் பொங்கி முழங்கும் கடலையும், காவிரியையும் தன்னுள் அடக்கிய எழுபத் தொன்பது கோட்டங்களைத் தன்னகத்தே கொண்டவர் களுமாகிய சோழ மன்னர்களே சிறப்புடையவர் ஆவார்கள். இப்படிப்பட்ட பரந்த நிலப்பரப்பை ஆளும் சோழர்களைக் காட்டிலும் மற்ற மன்னர்கள் விரிந்த பரப்பையுடைய இடத்தை ஆளுகிறார்களா? நீங்களே சொல்லுங்கள்! இல்லை என்றே சொல்லலாம் அல்லவா!'' என்று பாடலின் கருத்தைக் கூறினார் கம்பர்.

செம்பியன், வளவன், சென்னி என்ற குலப் பெயரை முதலாகக் கொண்டவர்கள் சோழ மன்னர்கள் ஆவார்கள். மேலும் எழுபத்தொன்பது கோட்டங்களை கொண்டவர்கள் சோழ அரசர்கள். இப்படிப்பட்ட பரந்த இடத்தை மற்ற மன்னர்கள் தம்முள் கொண்டிருக்கிறார்களா? இல்லை என்றே சொல்லலாம் என்று சவால் விட்டுக் கூறுகிறார் கம்பர்.

சோழ நாட்டின் பெருமையை அடுத்த பாடலிலும் கம்பர் கூறுவதைக் கேட்கத் தயாரானார்கள் சபையோர்.

6. ''மந்திரம் அணையத் திண்டோள்
மணிமுடி வளவன், சேரன்
சுந்திரப் பாண்டியன் தன்
சுடர்மணி மகுடஞ்சூட
அந்தணர் குலமும் எல்லாமம்
அறங்களும் விளங்க வந்த
இந்திர ஓலக்கம் போல்
இருந்தது பெரிய நாடே!''

பாடலின் கருத்து :

யானையைப் போன்ற தோளாற்றல் மிக்கவர்களும் மணிமுடி தரித்த வளவன் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றவர்களுமாகிய சோழ அரசர்கள் மட்டும் இந்த நாட்டை ஆளவில்லை. ஒரு காலத்தில் இந்நாட்டைக் கைப்பற்றிய சேரர்களும், சுந்தரமிகு பாண்டியர்களும் கூட விரும்பி இங்கு வந்து முடிசூட்டிக் கொண்டார்கள். மேலும் அந்தணர் கூட்டத்தாரும் இங்கு விரும்பி வாழ்கிறார்கள். எல்லா அறச்செயல்களும் இங்கு நடைபெற்று வருகின்றன. அதோடு மட்டுமல்ல சோழ நாடு வானுலக இந்திரனது அத்தாணி மண்டபம் போல வனப்புடன் காட்சியளிக்கிறது.

சோழர் பெருமை, சோழ நாட்டின் பெருமையைப் பாடிய கம்பர் தொடர்ந்து உழு தொழிலின் மாண்பினைக் கூறப் போவதாக அறிவித்து அடுத்த பாடலைப் பாடினார் கம்பர்.

7. ''வேத நூல் முதலாகி
விளங்குகின்ற கலையனைத்தும்
ஓதுவார் எல்லோரும்
உழுவார் தம் தலைக்கடைக்கே

கோதை வேன்மன் னவர்தம்
குடைவளமும் கொழுவாலே
ஆதலால் அவர் பெருமை
யாருரைக்க வல்லாரே''

பாடலின் கருத்து :

வேத சாத்திரங்களைக் கற்றவர்கள் முதலாக, இவ்வுலகில் விளங்குகின்ற கலைகள் அனைத்தையும் கற்றுத் தேர்ந்த வித்தகர்களும், விற்பன்னர்களும், உணவுக்காக உழவர்களின் வீட்டு வாசலிலே சென்று நிற்பார்கள்.

அது மட்டுமல்ல! மார்பில் மாலையாகிய கோதை அணிந்த பெருமைமிக்க மன்னர்களின் வெண்கொற்றக் குடையும், உழுது உணவளிக்கும் உழவர்களின் ஏரிலிருக்கும் கொழுவில்லாவிட்டால் நிலைத்து நிற்காது.

மேற்கண்ட பாடலின் பொருளைக் கூறிய கம்பர் திறத்தை அறிந்த சடையப்பர் முதலாக அரசன் உட்பட சபையோர் அனைவரும் கைதட்டி ஆரவாரம் செய்து பாராட்டினார்கள்.

அப்போது இரவு நெடுநேரம் ஆகிவிட்டதால் கம்பர் சபையை நோக்கி காவிய அரங்கேற்றத்தைத் தொடர்ந்து நாளை ஏற்போம். அனைவரும் நாளைக் காலை வருகை தர வேண்டுகிறேன், என்று கூறி வணக்கம் தெரிவித்தார். கம்பருடைய கவிநயத்தை வியந்து பாராட்டி சபையோர் யாவரும் அமுதுண்டு கலைந்து சென்றனர்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சி :

மறுநாள் திருவெண்ணெய் நல்லூரில் சடையப்ப வள்ளலின் மாளிகை முன்புறம் அமைக்கப் பெற்ற உறுதி யான பந்தல் மேலும் பொலிவுற்று விளங்கியது. ஏரெழுபது காவியம் அரங்கேற்றத்தின் நிமித்தம் வருகை தந்த அனை வரும் செவியிற் சுவையுணரச் செய்ததோடு வாய்ச்சுவை யமுதும் பெற்றிட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அரசபை யில் பணிபுரிய விண்ணப்பம் செய்திருந்த பொன்னன், முத்தன், மருதன், வாணன் ஆகியோரும், அவர்களுடைய காதலியர்களான பூங்குழல், மருதி, மரிக்கொழுந்து, சண்பகம் ஆகியோரும் வருகை தந்து முன்பு அமர்ந்திருந்த இடத்தில் வந்தமர்ந்தனர். அரசர்கள், பிரபுக்கள், கற்றோர், கலைஞர், புலவர்களும் வந்து குழுமியிருந்தனர்.

கம்பர் தன் கற்றுச் சொல்லிகளுடன் மேடைக்கு வந்து கலைமகளை வணங்கி முன்தினம் பாடி அரங் கேற்றிய ''வேதநூல் முதலாகி'' என்ற பாடலுக்கு அடுத்த பாடலை இசையுடன் பாடினார்.

8. "வெங்கோபக் கலி கடந்த
வேளாளர் விளை வயலுள்
பைங்கோல முடி திருந்தப்
பார்வேந்தர் முடி திருந்தும்
பொங்கோதைக் கடற்றாணை
போர் வேந்தர் நடத்தும் பெருஞ்
செங்கோலை நடத்துவதே
ஏரடிக்கும் சிறுகோலே!"

பாடலின் கருத்து :

வேளாளர்களுடைய உழவுத் தொழில் வயலில் நடந்தால்தான் கொடிய சீற்றத்தால் நாட்டில் உண்டாகும் வறுமை நீங்கும். பசுமையான பயிர்த்தொழிலை உழவன் நடத்தினால்தான் நாட்டையாளும் அரசனின் ஆட்சி சிறக்கும், பொங்கிவரும் ஆரவாரமுடைய கடல் போன்ற படையினால் போர்த் தொழிலை நடத்தும் அரசர்களுடைய செங்கோல் சிறப்பதற்கு, ஏர்த் தொழிலை நடத்தும் உழவனுடைய கையிலுள்ள சிறுகோலே வேண்டுவதாகும்.

மேற்கண்ட பாடலின் கருத்தைக் கூறிய கம்பர் சபையோர்களைப் பார்த்து "உழவுத் தொழிலை நடத்தும் உழவனுடைய கையிலுள்ள சிறுகோல்தான், அரசனுடைய செங்கோலுக்கு உறுதுணையாய் நிற்கும் என்றும், ஏர்த் தொழில் நடக்காவிட்டால் அரசனால் போர் நடத்தவும் முடியாது!" என்று விளக்கிக் கூறினார்.

தொடர்ந்து அடுத்த பாடலையும் இசையோடு பாட ஆரம்பித்தார் கம்பர்.

9. "வான மழை பொழிந்தாலும்
 வளம் படுவது யாராலே?
ஞான மறையவர் வேள்வி
 நலம் பெறுவது யாராலே?
சேனை கொடு பொருமன்னர்
 செரு களத்தில் செருக்குமத
யானை வலி யாராலே?
 இவர் எருதின் வலியாலே!"

என்று இசையுடன் பாடலைப் பாடினார் கம்பர்.

பாடலின் கருத்து :

வானத்திலிருந்து மழை பெய்தாலும் பயிர்கள் வளம் பெறுவது யாரால் என்றால், ஞானத்தையுடைய அந்தணர்கள் செய்யும் வேள்வி சிறப்புப் பெறுவது யாரால் என்றால், படைவலிமை கொண்டு பகைவரைத் தாக்கும் மன்னர்களின் போர்க்களத்தில் போர் செய்யும் யானைகள் வலிமை பெறுவது யாரால் என்றால் உழவர்கள் ஏரில் பூட்டும் எருதினால்தான் வலிமை பெறுகின்றன என்று கம்பர் கூறினார்.

அப்போது பெண்கள் பக்கம் அமர்ந்திருந்த சண்பகம் தன்னையறியாமல் வாய்விட்டு, ''ஆகா – அருமை – அருமை'' என்று பாராட்டினாள்.

அதைக்கேட்ட கம்பர் பெண்கள் பக்கம் திரும்பி ''இப்பொழுது கவியின் சிறப்பைப் பாராட்டிய பெண்மணி எழுந்திருக்கவும்'' என்று வேண்டினார்.

அப்போது வெட்கப்பட்ட சண்பகத்தை நோக்கி, பக்கத்திலிருந்த பூங்குழலி, மருதி, மரிக்கொழுந்து மூவரும் உற்சாகத்துடன் எழுந்து நிற்கும்படி கூறினார்கள். உடனே சண்பகம் சற்றுத் துணிவோடு எழுந்து நின்றாள். ஆண்கள் வரிசையில் அமர்ந்திருந்த சண்பகத்தின் காதலனான வாணன் பெருமிதமுடன் காதலியைப் பார்த்தான்.

கம்பர் சண்பகத்தை நோக்கி ''பெண்ணே! நீ என் கவித்திறத்தைப் பாராட்டினாய்! நான் கூறிய இரு பாடல்களுக்கும் உள்ள கருத்தை சிறப்பித்துக் கூறுவாயாக! தயக்கம் வேண்டாம். உன்னால் கூற முடிந்த சிறப்பைக் கூறுவாயாக!'' என்று அன்புடன் பணித்தார்.

அப்போது யாவரும் எதிர்பாராத வகையில் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, கம்பரை நோக்கி ''ஐயா! இப்பொழுது வறுமைமிக்க கலிகாலம். இக் காலத்தில் உழவர்களுடைய முயற்சி இருந்தால் தான் வயலில் விளைச்சல் பெருகி வறுமை நீங்கும். சட்டங் களை விதித்து உலகை ஆளும் மன்னர்களின் மணிமுடிகள் சிறந்து விளங்கும். நாட்டைக் காக்கும் பொருட்டு போர் தொடுத்துச் செல்லும் வீரர்களின் கைகளை அலங்கரிக்கும். வேல், வாள், ஈட்டி போன்ற கருவிகள் எல்லாம் உழவர் களின் கையிலுள்ள சிறுகோலுக்கு ஈடாகாது என்று இன்று பாடிய முதல் பாடலின் கருத்து என் உள்ளத்தைக் கவர்ந்தது. உழவர்களின் கையிலுள்ள சிறுகோல் மன்னரின் செங்கோலுக்கு ஒப்பாகும் என்று அருமையாகக் கூறியுள்ளீர்கள்.

அய்யா! புலவர் ஏறே! வான் மழையை நமக்கு வரப்பிரசாதம் போல் கிடைக்கும் அமிழ்தம் என்று கூறினார் வள்ளுவர். அப்படிப்பட்ட பருவமழை தவறினாலும் உலக வளத்தைப் பெருக்குவது யாராலே என்ற கேள்வியைக் கேட்டு அதற்கு விடையாக, உழவுக்குப் பயன்படும் எருது களின் வலிமையே! என்று கூறியது உண்மை விளக்க மாகும். ஞானமுள்ள அந்தணர்கள் இயற்றுகின்ற வேள்விக்குப் படைக்க வேண்டிய தானிய வகைகள் கிடைப்பது உழவர்களின் தொழிலால்தான் என்று உலக உண்மையை எடுத்துக் கூறியுள்ளீர்கள். அதோடு மட்டு மல்ல போர் புரியும் யானைகள் வலிமை பெறுவது உழவர்கள் விளைவிக்கும் தானியத்தாலே என்று கூறி இரண்டாவது பாடலையும் நீங்கள் சிறப்பித்துள்ளீர்கள். இதையெல்லாம் மனதில் பதித்த நான் என்னையறியாமல்

தங்கள் பாடலின் சிறப்பை அருமை! அருமை என்று கூறிவிட்டேன். எளிய கவியால் உழவுத் தொழிலைச் சிறப்பித்துள்ளீர்கள். நான் கூறுவதில் தவறு இருந்தால் மன்னித்து விடுங்கள்!'' என்று சண்பகம் கூறி முடித்தாள்.

சண்பகம் கூறுவதைக் கேட்ட அவளுடைய காதலனான வாணன் ஒரு கூடைப் பூக்களை அவள் தலையில் கொட்டி அன்பைக் காட்டலாமா? என்று எண்ணி உவகை யடைந்தான். கவியில் ஆர்வம் கொண்டு கருத்துக்களை சபைக்கு எடுத்துக்கூறிய உன்னை நான் பாராட்டுகிறேன் என்று கம்பர் கூறினார். சண்பகத்தின் சொல்லாற்றலைப் பாராட்டி குலோத்துங்க சோழன் ''பெண்ணே உனக்கு அரங்கேற்றத்தின் நிறைவு நாளில் ஒரு பரிசு தர இருக்கிறேன். நன்றி'' என்று கூறினான். சபையிலுள்ள அனைவரும் சண்பகத்தின் திறமையைப் போற்றினார்கள்.

கம்பர் அவையோர்களை நோக்கி ''இனித் தொடர்ந்து ஏரெழுபதின் அடுத்த பாடலைக் கேட்பீர்களாக!'' என்றார்.

10. "சீர்மங்கலம் பொழியும்
தெண்டிரைநீர்! கடல் சூழ்ந்த
பார் மங்கலம் பொழியும்
பல்லுயிரும் செழித்தோங்கும்!
கார் மங்கலம் பொழியும்
பருவத்தே காராளர்
ஏர் மங்கலம் பொழியும்
இனிது உழ நாட் கொண்டிடினே!"

பாடலின் கருத்து :

சிறப்பான இந்திர விழா போன்ற விழாக்களை கடல் நீர் வழங்கும். கடல் சூழ்ந்த பூமியில் பற்பல திருவிழாக்கள்

நடைபெறும். இதனால் மக்கள் மட்டுமின்றி பல உயிர் களும் செழித்தோங்கும். மழை பெய்வதால் பல விழாக் களும் நடைபெறும். பருவமறிந்து உழவர்கள் ஏர்த்தொழி லுக்கு விழாக்கள் நடத்துகின்றனர். வயலை உழுவதற்கு உழவர்கள் நல்ல நாளைத் தேர்ந்தெடுப்பர்.

இப்பாடலில் கம்பர் மங்கலம் என்ற சொல்லை நான்கு இடங்களில் குறிப்பிட்டுள்ளார். சிறப்பு, மேன்மை, விழா, பெருமை, தலைமை என்று பல பொருளில் மங்கலம் என்ற சொல் தொனிக்கக் காணுகின்றோம். கடல்நீர் பெருக்கு விழா, மழைநீர் வெள்ளப் பெருக்கு விழா நடைபெறுவது போல ஏர்த்தொழிலுக்காக விழாக்கள் நடைபெறுகின்றன. ஏர்த்தொழில் விழா நடத்த நல்ல நாளைத் தேர்ந்தெடுப்பதைத் தமிழகத்தில் காணுகின்றோம். இதனை அடுத்த பாடலில் தொடர்ந்தறிவோம். இப்பொழுது அடுத்த பாடலைப் பாடுகின்றேன் கேளுங்கள் என்று கம்பர் தொடர்ந்து பாடினார்.

11. "கார் நடக்கும்படி நடக்கும்
காராளர் தம்முடைய
ஏர் நடக்கும்படி நடக்கும்
இயலிசை நாடகம் நடக்கும்!
சீர்நடக்கும் திறன் நடக்கும்
திருவறத்தின் செயல்நடக்கும்
பார் நடக்கும் படை நடைக்கும்
பசி நடக்க மாட்டாதே!"

என்று பாடிச் சுருக்கமாகப் பொருள் கூறினார் கம்பர்.

பாடலின் கருத்து :

மழை பெய்வதால் நடைபெறும் தொழில்களை உழவர் தவறாமல் நடத்துகின்றனர். ஏர்த்தொழில் சிறப்பாக நடைபெறுவதினால் இயல் இசை நாடகம் என்று சொல்லப்படும் தமிழின் முப்பகுப்பும் சிறப்புப் பெறும். திறமிகு தமிழ்க் கலைகளும் வளர்ந்தோங்கும். அன்ன தானம் போன்ற தருமச் சிறப்புகளும் நடைபெறும். பசிப்பிணி இன்றி மக்கள் சுகமாக வாழ்வர் என்று பொருள் கூறி கம்பர் மேலும் அடுத்த பாடலைப் பாட எண்ணினார்.

இத்தருணத்தில் பொது மக்கள் அமர்ந்திருந்த பகுதியிலிருந்து ஒருவர் எழுந்து அற்புதம்! அற்புதம்! என்று கூறிக் கை தட்டினார்.

அதைக் கண்ட கம்பர் ''ஐயா! தாங்கள் யார்? தாங்கள் என் கவியில் கண்ட சிறப்பைக் கூறுங்கள்'' என்றார்.

அப்பெரியவர் பணிவோடு கம்பரைப் பார்த்து ''அய்யா! கவிஞர் பெருமானே! நான் பல இடங்கள் சென்று கூத்துகள் நடத்தும் குழுவின் தலைவன். தொண்டை நாட்டைச் சார்ந்தவன். இயலிசை நாடகம் என்னும் முக்கலைகளையும் ஓரளவு அறிந்தவன். தாங்கள் எதுகைச் சிறப்போடு சீர்மங்கலம், பார்மங்கலம், கார்மங்கலம், ஏர்மங்கலம் என்ற சொற்களால் தமிழ் இசைத்தீர்கள். அடுத்து கார் நடக்கும், ஏர் நடக்கும், சீர் நடக்கும், பார் நடக்கும் என்ற சொற்களால் ஏர்த்தொழிலின் சிறப்பைக் கூறினீர்கள். மேலும் கார் நடக்கும்படி நடக்கும் காராளர் செயலால் ஏர்நடக்கும்படி நடக்கும் இயலிசை நாடகம் என்று பொருத்தமாகக் கூறியதை நான் வரவேற்கிறேன். வரகவிபாடும் தங்கள் ஆற்றலைப் போற்றுகின்றேன்'' என்றார் அவர்.

உடனே என் கவியின் சிறப்பால் தாங்கள் அடைந்த பயன் யாது? என்று கேட்டார் கம்பர். உடனே அக்கூத்தர் ''ஐயா! கார்நடக்கும்படி நடக்கும் வான்மழை பொய்த்து விட்டதால் தொண்டை நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது. இதனால் நாடகத் தொழிலை நடத்த பக்கத்து நாடான தெலுங்கு நாட்டிற்குச் சென்றோம். அங்கு எங்களுக்கு வரவேற்புக் கிடைத்தது. கொஞ்ச நாட்களில் அருவர் என்றும் தமிழர் நாங்கள் என்றும் நையாண்டியும் செய்ததால் இப்பொழுது சோழநாட்டிற்கு வந்து தொழிலை நடத்திக் கொண்டிருக்கிறோம்'' என்று பணிந்து கூறினார்.

அப்போது குலோத்துங்க சோழன் கூத்தரைப் பார்த்து ''ஐயா! நான் தலைநகருக்குத் திரும்பியதும் தங்கள் கலைத் தொழிலை அரண்மனையிலும் பிற இடங்களிலும் தொடர்ந்து நடைபெற ஏற்பாடு செய்கிறேன்'' என்றார்.

அதைக்கேட்ட சபையோர் அனைவரும் வியப்படைந் தனர். தொடர்ந்து கம்பர் அடுத்த பாடலைப் பாட ஆரம்பித்தார்.

12. ''நீர்விழாக் கொள வளர்ந்த
நிலமெலாம் தம்முடைய
சீர்விழாக் கொள விளங்கும்
திருவிழாப் பெருக்காளர்
ஏர்விழாக் கொளலன்றி
ஏறுள் கரிதேர் மாப்படையால்
போர்விழாக் கொளமாட்டார்
போர் வேந்த ரானோரே!''

பாடலின் கருத்து :

நீர்விழாக் கொண்டாடுவதற்காக நிலத்தில் பயிர்களை விளைவித்து அதனை ஏர்த்திருவிழாவாக உழவர்கள் கொண்டாடுகிறார்கள்.

உழவர்கள் கொண்டாடும் ஏர்த்திருவிழா நடக்க வில்லையென்றால், மன்னர்கள் யானைப்படை, தேர்ப்படை, குதிரைப்படைகளுக்காக நடத்தும் போர்ப்படை விழாவைக் கொண்டாட மாட்டார்கள்.

இவ்வாறு கம்பர் பாடலுக்கு பொருள் கூறி தொடர்ந்து அடுத்த பாடலைக் கேளுங்கள் என்று கூறிய வாறு அடுத்த பாடலை இசையுடன் பாட ஆரம்பித்தார்.

13. ''குடையாளும் முடிமன்னர்
கொல்யானை தேர் புரவி
படையாளும் இவை நான்கும்
படைத்துடைய ரானாலென்?
மடைவாளை வரும் பொன்னி
வள நாடார் தங்கள் அலப்
படைவாளைக் கொண்டன்றி
பகையறுக்க மாட்டாரே!''

பாடல் கருத்து :

''வாளை மீன்கள் துள்ளிப் பாயும் மடைகளைக் கொண்ட காவேரி நதி பாயும் சோழ நாட்டிலுள்ள உழவர் கள் ஏர்ப்படையை ஏந்தினால்தான், குடை, படை சிறப் பேற்ற மன்னர்கள் யானைப் படை, தேர்ப் படை, குதிரைப் படை, வாட்படை என்ற நான்கு படைகளைக் கொண்டு

பகை மன்னர்களை வெல்ல முடியும்'' என்று பொருள் கூறினார் கம்பர். அப்போது ஆண்களின் பக்கமிருந்து ''சபாஷ்! சபாஷ்!'' என்ற பெருத்த ஒலியுடன் கைதட்டல் ஓசையும் கேட்டது. எல்லோரும் அப்பக்கம் திரும்பிப் பார்த்தனர்.

அங்கு வாள்வித்தையில் வல்லவனான பொன்னன் மகிழ்வுடன் நின்று கொண்டிருந்தான். அரசர் குலோத் துங்கன் அவனை உற்று நோக்கினார். இரண்டு நாட்களுக்கு முன் வேலை கேட்டு வந்த நான்கு பேர்களில் வாளாற்றல் பெற்ற பொன்னன் என்பதை அறிந்து கொண்டார்.

''தம்பி! நீ நான் பாடிய கவியால் அறிந்த சிறப்புக் கருத்து யாது?'' என்று கம்பர் கேட்டார்.

''ஐயா! உழவென்று ஒன்று இல்லாவிட்டால் உலகில் சீரேது? திருவிழாக்கள்தான் ஏது? என்பதை அருமையாக இருபாடலிலும் கூறியுள்ளீர்கள். நீரைக் கொண்டு நிலத்தில் விளைவித்து உழவர்கள் உலகெங்கும் சீர்கொள்ளச் செய்துள்ளார்கள். தமிழர்கள் விழாவாம் உழவர் திருவிழா சிறப்பாகக் கொண்டாடக் காணுகின்றோம். அதோடு மட்டுமல்ல! ஆடிவிழா, சித்திரை விழா, ஐப்பசி ஓணவிழா என்று எத்தனையோ விழாக்களைப் பெருக்கி உழவர்கள் நடக்கச் செய்கின்றனர். ஐயா! நான் வாள்வித்தையில் வல்லவன்தான். அந்த வாள்வித்தை, யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை இவைகளை நடத்துகின்ற மன்னனின் போர்ப்படைக்கு ஆதாரம் ஏர்ப்படையே என்பதை அறிந்து உங்கள் கவித்திறனைப் பாராட்டுகிறேன்'' என்று பொன்னன் கூறினான்.

அப்போது கம்பர், இளைஞனே! நான் எண்ணிய கருத்தை நீ விளக்கிக் கூறிவிட்டாய். நிலத்தில் நடைபெறும் விழாக்கள் எவையென்றும் அறிவித்து விட்டாய். மனிதர்கள் மட்டும் நிலத்தில் விழாக்கள் கொண்டாடவில்லை. ஈசல்களுக்கும், தவளைகளுக்கும் மழைக்காலத்தில் திருவிழா. எறும்புகளுக்கு வெய்யில் காலத்தில் கொண்டாட்டம். மேய்ச்சல் நிலம் செழிப்பதால் ஆடு மாடுகளுக்குப் பண்டிகை. மாடுகளின் உழைப்புக்கு நன்றி சொல்ல மாட்டுப் பண்டிகை. மழையைத் தரும் இந்திரனுக்குப் போகிப் பண்டிகை. இதையெல்லாம் எனக்கு நினைவூட்டிக் கூறவைத்தாய். சபையின் சார்பாக உனக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றார் கம்பர்.

அப்போது அரசன் பொன்னனை நோக்கி, ''வாள் வித்தை பயின்றவனாகிய நீ அரசாங்கத்தில் வேலை கேட்டு வந்தாய்! இந்த அரங்கேற்ற விழா முடிந்ததும் உழவுத் தொழிலில் நீயும் குடும்பத்தாரும் முன்னேற மேலும் வசதிகளைச் செய்து கொடுக்கிறேன். மகிழ்ச்சி!'' என்று கூறினார்.

அப்போது கம்பர் அவையைப் பார்த்து ''இன்றும் இரவு நேரம் அதிகமாகி விட்டதால், காவிய அரங்கேற்றத்தை நாளைக் காலை தொடர்ந்து நடத்துவோம். இப்பொழுது உணவருந்திச் செல்லலாம்!'' என்று கூறி அனைவருக்கும் வணக்கம் தெரிவித்து எழுந்தார். சபை கலைந்தது.

மூன்றாம் நாள் நிகழ்ச்சி :

அடுத்த நாள். ஏரெழுபது அரங்கேற்றத்தின் மூன்றாம் நாள். அரங்கேற்ற மண்டபத்தில் முன்னிரண்டு நாட்களைப் போலவே குலோத்துங்க சோழனும் சடையப்பரும்,

அமைச்சர்களும் பெருங்குடி மக்களும் பொன்னன் உட்பட நான்கு தோழர்களும், அவர்களுடைய காதலிகளும் அமர்ந்திருக்க, கம்பரின் கவிதைகளைக் கேட்க பெருவாரி யாக மக்கள் கூடியிருந்தனர்.

கம்பர் தன் கற்றுச் சொல்லிகளுடன் மேடை மீது ஏறி நின்று அவையினரை வணங்கிவிட்டு, கலைமகளைத் துதித்துவிட்டு அமர்ந்து காவிய அரங்கேற்றத்தைத் தொடர்ந்தார்.

14. "நீற்றோனும் மலரோனும்
நெடியோனும் என்கிற
தோற்றாளர் இவராலே
தொல்லுலகம் நிலைபெறுமோ?
மாற்றாத காவேரி
வளநாடர் உழுங்கலப்பை
ஊற்றாணி உளதாயின்
உலகுநிலை குலையாதே"

பாடலின் கருத்து :

திருநீற்றுத் தலைவர் சிவபெருமானும், தாமரை மலரில் அமர்ந்திருப்பவராகிய பிரம்மாவும் நெடியோனாகிய திருமாலும் இவ்வுலகைப் படைத்தும் காத்தும் அழித்தும் வருகிறார்கள். அப்படிப்பட்ட மும்மூர்த்திகளாகிய தோற் றாளர்களால் இவ்வுலகம் நிலை பெறுவதில்லை. எவருக்கும் மாறுபாடில்லாத காவிரியினால் வளம் அடையும். உழவர்களின் உழும் கலப்பையின் நுனியாகிய ஊற்றாணியின் பயனாலே இந்த உலகநிலை உருக்குலையாமல் இருக்கிறது.

இவ்வாறு பொருள் கூறிய கம்பர் ''அகல உழுவதை விட ஆழ உழு'' என்ற பழமொழியை நினைவூட்டுவதோடு மட்டுமல்ல! கலப்பையிலுள்ள ஊற்றாணியின் மகத்துவத்தை, மும்மூர்த்திகளின் சக்தி ஆற்றலுக்கு ஒப்பிடுவதைக் காணுகின்றோம்.

தொடர்ந்து அடுத்த பாடலைப் பாடுகிறார் கம்பர்.

15. ''நாட்டுகின்ற சோதிடத்தின்
நாண்பொருத்தம் நாட்பொருத்தம்
காட்டுகின்ற கயிறிரண்டும்
கயிரல்ல! கடைப்புவியில்
தீட்டுகின்ற பெருக்காளர்
செழும் நுகத்தோடுழும் பகடு
பூட்டுகின்ற கயிறிரண்டும்
புவிமகள் மங்கலக் கயிறே!''

என்று பாடிப் பொருளும் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

பாடலின் கருத்து :

''வாழ்க்கையை நிலை நிறுத்தும் சோதிடத்தில், கயிறு பொருத்தம், நாள் பொருத்தம் காட்டுகின்ற கயிறிரண்டும் உண்மையான கயிறல்ல! பூமியின் உருவத்தோற்றத்தைத் தீட்டுகின்ற உழவர்கள் தங்கள் வளமிக்க ஏரின் நுகத்தடியில் எருதுகளைப் பூட்டுவதற்குப் பயன்படும் கயிரண்டுமே, நிலமகளின் கழுத்தை அலங்கரிக்கும் மங்கலக் கயிறாகும்'' என்று பொருள் கூறி, ஒரு பெண்ணின் மங்கல வாழ்வை எடுத்துக் காட்டுவது அவளின் கழுத்திலிருக்கும் மஞ்சள்கயிறு. அதுபோல பூமாதேவியின் திருமாங்கல்யமாக விளங்குவது பொன்னி நாட்டிலுள்ள உழவர்கள் ஏரில்

எருதுகளை இணைத்தும் பூட்டும் கயிறேயாகும் என்று கம்பர் விளக்கம் தந்தார்.

தொடர்ந்து கம்பர் அடுத்த பாடலைப் பாடினார்.

16. "சீர்வளரும் மறைவளரும்
திறல்வேந்தர் முடிவளரும்
பேர்வளரும் வாணிபத்தின்
பெருநிதியம் மிக வளரும்
ஏர்வளரும் திருவளரும்
இசைவளரும் கடல்சூழ்ந்த
பார்வளரும் காராளர்
பயிர்வளரும் திறத்தாலே!"

என்று பாடிக் கம்பர் பொருள் கூறினார்.

பாடலின் கருத்து :

"உழவர்கள் விளைவிக்கும் பயிர்வளத்தில் திறத்தாலே, இவ்வுலகில் நன்மைகள் பெருகும், வேதம் வளப்பமடையும், திறமைமிகு வேந்தர்களின் ஆட்சி சிறக்கும், புகழ் பெருகும், வணிகத்தினால் பெருநிதியும் குவியும். உழவு சிறக்கும், செல்வம் பெருகும், இசை வளரும், கடல் சூழ்ந்த இப்பூமி செழிப்படையும்" என்று கூறி காராளர் பயிர் வளரும் திறத்தை மிகைபடக் கூறினார் கம்பர்.

தொடர்ந்து அடுத்த பாடலைப் பாடினார் கம்பர்.

17. "வளைகளையும், மணிகளையும்
மலர்களையும், வரும்பலவின்
சுளைகளையும் கொடுகரைக்கே
சொரி பொன்னித் திருநாடர்

விளைகளையுள் செஞ்சாலி
வேரூன்றி கோடுகொள்ளக்
களை களையா விடில் வேந்தர்
கலிகளைய மாட்டாரே!''

என்று கம்பர் பாடிக் கருத்தும் கூறினார்.

பாடலின் கருத்து :

சங்குகளையும், மணிகளையும், மலர்களையும், பலாப் பழத்தின் சுளைகளையும் கொண்டுவந்து ஒதுக்குகின்ற காவிரி நதி பாயும் வள நாடாகிய சோழநாட்டின் விளை நிலத்தில் செஞ்சாலி நெற்பயிர் வேரூன்றி கதிர் திரட்சி கொள்ள வேண்டுமென்றால், உடன் வளரும் களைகளை நீக்க வேண்டும். களைகளை நீக்காவிட்டால் அரசர்களும் மக்களின் வறுமையைப் போக்க முடியாதே!

என்று கம்பர் பொருள் கூறி உழவர்கள் பயிர் விளைச்சல் பெற களைகளை நீக்க வேண்டுமென்று கூறியதோடு, அரசன் மக்களின் வறுமையைப் போக்க உழவர்களையும் பாதுகாக்க வேண்டும் என்று விளக்கிப் பேசினார்.

அவையினர் அனைவரும் கம்பரின் கவிதைப் பொருள் நயத்தை ரசித்துக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

அதுசமயம், ''கம்பரே! நிறுத்தும் உமது வியாக்கியானத்தை என்று உரத்த குரலில் ஒருவர் ஒலித்ததை அனைவரும் கேட்டனர். குரல் வந்த திசையை எல்லோரும் நோக்கினர்.

புலவர்கள் அமர்ந்திருந்த வரிசையில், நெற்றியிலும், தோள்களிலும் திருநீறு துலங்க, வெள்ளிப் பூண்போட்ட

கைத்தடியுடன் ஒரு பண்டிதர் நின்று கொண்டிருந்தார். அவர் பெயர் நமசிவாயப் பண்டிதர்.

கம்பர் பொருள் சொல்லியதைத் தடுத்தவர் நமசிவாயர்தான் என்பதை அறிந்த பலரும் புத்துணர்ச்சி பெற்றவர்களைப் போல நிமிர்ந்து உட்கார்ந்தனர். அரசரும், சடையப்ப வள்ளலும், அவருடைய கம்பீரமான தோற்றத்தைக் கண்டு அவர் ஒரு புலவர் என்பதை அறிந்து அதிர்ச்சி அடைந்தனர்.

கம்பர் அப்புலவரைப் பார்த்து நிதானமாக, ''அய்யா... என் கவிதைகளில் என்ன பிழை கண்டீர்கள்! திடீரெனத் தடுக்கக் காரணம் யாது?'' என்று கேட்டார்.

உடனே நமசிவாயர் ''ஏனய்யா கம்பரே! தாமரை மலரில் அமர்ந்திருப்போனாகிய பிரம்மன், நெடியோனாகிய திருமால், நீற்றோனாகிய சிவபெருமான் ஆகிய மூவருந்தான் இந்த உலகைப் படைத்தும், காத்தும், அழித்தும் வருகிறார்கள். அந்தத் தோற்றாளர்களால்தான் உலகம் நிலைத்திருக்கிறது. அப்படியிருக்க உழவர்களின் ஊற்றாணியால்தான் உலகம் நிலைபெறுகிறது என்று பாடினீரே!'' அது சரிதானா?

மும்மூர்த்திகள் இல்லாவிட்டால் நீங்களேது? நானேது? உழவர்கள் ஏது? அவ்வாறு தர்க்க ரீதியில் பார்த்தால் உமது பாடல்கள் அபத்தமானது! கருத்துக்குற்றம் உள்ளது!'' என்று கோபமாகக் கூறினார்.

நமசிவாயரின் விதண்டாவாதக் கேள்விக்குக் கம்பர் விடை சொல்ல முயன்றார்.

அப்போது தர்க்க சாத்திரத்தில் வல்லவனான முத்தன் எழுந்து, ''ஐயா! கம்பர் கூறிய கருத்தைத் தாங்கள் புரியாமல் கோணல் மாணலாகக் கேள்வி கேட்பது சரி யில்லை! உட்காருங்கள்!'' என்றான்.

இதைக் கேட்டதும் நமசிவாயர் ''இளைஞனே! நான் உன்னிடம் கேள்வி கேட்கவில்லை. அவரே விடை கூறட்டும் நீ தலையிடாதே! உட்கார்!'' என்று சீற்றத்துடன் கூறினார்.

அப்போது முத்தன் புன்னகையுடன் ''ஐயா! பெரிய வரே! இது பொது சபை. இங்கே கேள்வி கேட்க உமக்கு எவ்வளவு உரிமையுண்டோ, அதேபோல விடை சொல்ல எனக்கும் உரிமை உண்டு. ஐயா! மும்மூர்த்திகளில்லாமல் இந்த உலகம் உழவர்களால் மட்டுமே நிலைநிறுத்த முடியும் என்று கம்பர் பாடவில்லை. நீர் தவறாகப் புரிந்து கொண்டு வாதாட எண்ணிவிட்டீர்!

மும்மூர்த்திகளால்தான் இந்தவுலகம் படைத்தும், காத்தும், அழிக்கப்படுகிறது. உண்மைதான். அதோடுமட்டு மல்ல. வருணன் மழை பெய்விக்கிறான். வாயு காற்றை வீசச் செய்கிறான். அக்னி நெருப்பைத் தருகிறான். மும் மூர்த்திகள் தங்கள் சக்தியால் உதவினாலும், பருவமறிந்து உழவர்கள் பயிர் செய்து. உணவை உற்பத்தி செய்யவில்லை என்றால் இவ்வுலகில் இயற்கை தரும் சீர் மங்கலங்கள் யாவும் பயனற்றுப் போய்விடும். தெய்வங்கள் தரும் செல்வங்களை நாம் அனுபவிக்க வேண்டுமென்றால், உயிர்களைக் காக்கும் உணவைப் பெருக்கித் தரும் உழவர் பெருமக்கள் தேவை என்று கம்பர் பெருமான் பாடினார். அவர் பாடிய கவியில் தவறில்லை! என்று முத்தன் கூறினான்.

இதைக் கேட்டதும் நமசிவாயர் வாயடைத்து நின்றார். பின் முத்தனை நோக்கி இளைஞனே! நீ இப்பொழுது என்னை சமாதானப்படுத்தி விட்டாய்! மற்றொன்றைக் கேளும்,

"வேத நூல் முதலாகி
விளங்குகின்ற கலையனைத்தும்
ஓதுவார் எல்லோரும்
உழுவார் தலைக்கடைக்கே..."

என்று கம்பர் பாடினார் அல்லவா!

வேத அந்தணர்கள், கலைஞர்கள், ஓதுவார்கள் எல்லாம் உழவர் வீட்டு வாசலுக்கு உணவுக்காகச் சென்று கையேந்து கின்ற இரவலர்களாகச் சித்தரித்துப் பாடினாரே! அவ்வாறு பாடியது வேதத்தையே அவமதிப்பதாகும்! நீர் இக்கருத்தை ஒப்புக் கொள்ளுகிறாயா? என்று ஆத்திரத்துடன் கூறினார் நமசிவாயர்.

நமசிவாயரின் கேள்வியைக் கேட்டுப் புன்னகை பூத்தான் முத்தன். உடனே பதில் கூற ஆரம்பித்தான்.

"அய்யா! பெரியவரே! வேத நூல் கற்ற வேதியர்கள் மட்டுமல்ல! ஓதுவர் மற்றும் கலைகளைக் கற்றவர்கள் உழவர்களின் வாசலுக்கு வரவேண்டும் என்று கம்பர் பாடியுள்ளது உண்மைதான். காரணம் அந்தணர்கள் செய்கின்ற வேள்விக் குண்டத்தில் போடவும், தேவர்களுக்கு அவியுணவு படைத்து வைக்கவும், அந்த சமித்துக்கள், வேதவித்துக்கள், தானியங்கள் இவற்றிற்கு உழவர்களின்

விளைச்சலுக்கு நாடித்தான் செல்ல வேண்டியதிருக்கிறது. இப்பொழுது கவிஞர் பெருமானின் கவித்திறத்தை தெளிவாக அறிந்திருப்பீர்! என்று எண்ணுகிறேன்!'' என்று முத்தன் கூறி முடித்தான்.

அப்போது அரசர் முத்தனை நோக்கி, ''சபாஷ்! நீ கம்பர் கூறவேண்டிய கருத்தை அழகாகக் கூறிவிட்டாய்! உனக்கும் இந்த கவியரங்கம் நிறைவேறியதும் பரிசு உண்டு. பாராட்டுகிறேன்'' என்றார்.

சடையப்பர் வாதமிட வந்த நமசிவாயரைப் பார்த்து, ''வேறு ஏதேனும் சந்தேகம் இருந்தால் கேளுங்கள். அமைதியாக அரங்கேற்றத்தை நடத்த உதவிச் செய்யுங்கள்!'' என்று கேட்டுக் கொண்டார்.

தோல்வியை ஒப்புக்கொள்ள மனமில்லாவிட்டாலும், சடையப்ப வள்ளலின் வேண்டுகோளுக்கு இணங்கி நமசிவாயர் அப்படியே அமர்ந்துவிட்டார்.

கம்பர் தனக்குப் பதில் வாதிட்ட முத்தனுக்கு நன்றி தெரிவித்துவிட்டு, தொடர்ந்து பாட ஆரம்பித்தார்.

18. “திருவடையும் திறலடையும்
சீரடையும், செறிவடையும்
உருவடையும், உயர்வடையும்
உலகெலாம் உயர்ந்தோங்கும்
தருவடையும் காராளர்
தண்வயலில் பெருஞ்சாலி
கருவடையிற் பூதலத்திற்
கலியடைய மாட்டாதே.”

பாடலின் கருத்து :

''செல்வம் பெருகும். ஆக்கம் பெருகும். பெருமை உண்டாகும். சுற்றச் செறிவு பெருகும். உடல் வளம் பெருகும். மனநலம் உயர்ந்தோங்கும். உலகோர் உயர்ந்து போற்றும் செழிப்பைக் கொடுக்கும். உழவர்களின் குளிர்ச்சி பொருந்திய வயலில் நெற்பயிர்கள் கருக்கொண்டு வளர்வதால் பூமியில் வறுமை தோன்றாதே!''

என்று கம்பர் பொருள் கூறி உடல், மனம் மாண்புடைய உழவர்களால் உலகோர் மனமும், உடலும் நல்லதையே நாடும். உறவு, சுற்றம் தழைத்தோங்கும். நெல் விளைச்சலால் வறுமை நீங்கும் என்பதையும் விளக்கிக் கூறினார்.

அதுசமயம் ஒரு பெரியவர் எழுந்து கம்பரை நோக்கி வணங்கி, ''அய்யா! புலவரே! இந்த அரங்கேற்றம் ஆரம்பித்த மூன்று நாட்களில் இரண்டாம் நாள் ஒரு பெண்ணும், ஒரு இளைஞனும் தங்கள் கவிதைகளுக்குப் பொருள் சொன்னதையும் மூன்றாம் நாளாகிய இன்று, தங்கள் கவித்திறனை எதிர்த்தவரை மடக்கி வாதிட்ட மற்றொரு இளைஞன் திறத்தையும் கண்டோம். கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும் என்று பலரும் சொல்ல நான் கேள்விப்பட்டிருக்கிறேன். தங்களுடன் பணியாற்றும் கற்றுச் சொல்லிகள் கவிதைப் பாடிப் பொருள் கூறுவார்களா?'' என்று கேட்டார்.

அந்த முதியவரின் ஆவலை அறிந்த கம்பர், ''ஐயா! என்னுடைய சீடர்கள் சொன்னதைக் கேட்டு எழுதுகின்ற கிளிப்பிள்ளைகள் அல்ல! அவர்களும் நான் சொல்லும் பாடலின் கருத்தை அறிந்து சொல்வதோடு, பாடுவதிலும்

வல்லவர்கள்தான். இப்பொழுது அடுத்த பாடலை என்னு டைய கற்றுச் சொல்லிகளில் ஒருவனைப் பாடவும், கருத்துக் கூறவும் பணிக்கிறேன் கேளுங்கள்!'' என்று கூறினார்.

சீடர்களின் பெருமை :

பின் தனக்குப் பின்புறம் நின்று கொண்டிருந்த கற்றுச் சொல்லிகளின் ஒருவனாகிய திருவுடையான் என்பவனை நோக்கினார் கம்பர்.

திருவுடையான் முன்னால் வந்து சபையோரை வணங்கி அடுத்த பாடலைப் பாடி பொருள் கூறினான்.

19. ''அலைவளையும், புவிவேந்தர்
அங்கையில் தாங்கிய வீரச்
சிலைவளையும், தேன் கருப்பச்
சிலைவளையும் கொடுங்கலியின்
தலைவளையும் காராளர்
தண்வயலில் செஞ்சாலி
சிலை வளையும் பொழுதினில்செங்
கோல் வளைய மாட்டாதே''

என்று பாடிக் கருத்தைக் கூறினான்.

பாடலின் கருத்து :

''கடலிலும் நதியிலும் அலைகள் வளைந்து வளைந்து சென்று அழகைக் கொடுக்கும். அரசர்கள் கையில் பற்றிய வில்லாகிய சிலையை வளைத்து அம்பு எய்வது வீரத்திற்கு

அழகாகும். காதலைத் தூண்டுவதற்காக மன்மதன் கையிலேந்தும் தேன் கரும்பு வில்லாகிய சிலையை வளைப்பான். கலியுகத்தின் கொடுமைகளின் உச்சியாகத் திகழும் பசிப்பிணியின் தலை வளைய வேண்டுமானால் உழவர்களின் வயல்களில் கதிர்கள் முற்றி நெற்பயிர்கள் தலை வளைந்து நிற்க வேண்டும். அப்படி நின்றால்தான் ஒரு சிறந்த ஆட்சியின் செங்கோல் வளையாமல் நேர்மையை நிலைநாட்டும்''

என்று திருவுடையான் பாட்டிற்குப் பொருள் கூறி தன்னிடத்திற்குச் சென்றான்.

அடுத்து கம்பர் சபையோர்களைப் பார்த்து ''இப் பொழுது என்னுடைய மாணவனாகிய கற்றுச் சொல்லி பாடலைப் பாடி பொருள் கூறியதைக் கேட்டீர்கள். அடுத்து மற்றொரு கற்றுச் சொல்லியாகிய தேவர்க்கடியான் என்பவன் அடுத்த பாடலைப் பாடிப் பொருள் கூறுவான்'' என்று கூறினார்.

அதைக் கேட்டதும் தேவர்க்கடியான் எழுந்து சபை யோர்களை வணங்கி அடுத்த பாடலைப் பாடினான்.

20. ''உழுதுண்டு வாழ்வாரே
வாழ்வார் மற்றெல்லோரும்
தொழுதுண்டு பின்செல்பவர்
என்றே இத் தொல்லுலகில்
எழுதுண்ட மறைசொன்னால்
இவர் ஏவண்-மன்னர்க்கும்
பழுதுண்டோ பார்வேந்தர்
படைமன்னர் ஒப்பாரோ?''

என்று பாடலைப் பாடி பொருள் கூறினான்.

பாடலின் கருத்து :

வயலில் உழுது பயிர்விளைவித்து மக்களை வாழச் செய்யும் உழவர்களின் நெல்லைக் கொண்டுதான் மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்கு மக்கள் வணக்கம் செலுத்தி போற்றுகிறார்கள். எனவே ஏரடிக்கும் சிறுகோல் தடையின்றி இயங்கவேண்டும். இதனை வள்ளுவர் கூறியுள்ளார். அவர்களுக்குப்பின் கம்பர் ஒருவர் தான் உழவின் சிறப்பைக் கூறியுள்ளார். உழவர்கள் பெருகி வாழும் நாட்டில் வாழ்வுக்கு பழுதில்லை. நாட்டை ஆளும் அரசனுடைய மக்கள் வாழ்க்கை உழவர்களால் சிறப்பதால், உழவர்களும் நாட்டை ஆளும் அரசனுக்கு ஒப்பாகக் கருதப்படுகிறார்கள் என்று தேவர்க்கடியான் பொருள் கூறி தன் இருப்பிடம் சென்று அமர்ந்தான்.

அப்போது கம்பர் இப்போது என்னுடைய கற்றுச் சொல்லிகளின் திறத்தையும் நீங்கள் அறிந்தீர்கள். அடுத்த பாடலை நான் பாடுகிறேன். சபையோர்களில் ஒரு பெண் எழுந்து அப்பாடலுக்குப் பொருள் கூற வேண்டும். ஏதேனும் சொல்லுக்குப் பொருள் தெரியவில்லை என்றால் நான் கூறித் திருத்தி விடுகிறேன். சபையோர்கள் பின்பற்றி வருகிறார்களா? என்பதை நான் அறிய விரும்புகிறேன். இப்பொழுது பாடலைப் பாடுகிறேன். கேளுங்கள்.

21. “அலகிலா மறை விளங்கும்
அந்தணர் ஆகுதி விளங்கும்
பலகலையாம் தொகைவிளங்கும்
பாவலர்தம் பாவிளங்கும்

மலர்குலாந் திருவிளங்கும்
மழை விளங்கும் மநுவிளங்கும்
உலகெலாம் ஒளிவிளங்கும்
உழவர் உழும் உழவாலே!"

இவ்வாறு கம்பர் பாடலைப் பாடி முடித்த நிலையில், மருதனின் காதலியான மரிக்கொழுந்து எழுந்தாள். "ஐயா! இப்பாடலுக்கு நான் பொருள் கூறுகிறேன். தவறு இருந் தால் தாங்கள் சொல்லும் கருத்துக்கு இசைகிறேன்!" என்று கூறினாள்.

உடனே கம்பர் பொருள் கூறும்படி பணித்தார்.

பாடலின் கருத்து :

உழவர்கள் செய்யும் உழவுத் தொழிலினால் வேதங் களும் அதன் எல்லையில்லாத உட்பிரிவுகளும் சிறந்தோங் கும். அந்தணர்கள் செய்யும் ஓமத்தீயில் போடும் பொருட் கள் சிறக்கும். அறுபத்தினான்கு கலைகளும் சிறப்படை யும். புலவர்கள் பாடும் பாடல்கள் சிறக்கும். மலர்களின் மழை பெய்யும், மனுதர்மம் சிறந்தோங்கும். உலகப் பசுமையின் ஒளி பிரகாசிக்கும்.

இவ்வாறு மரிக்கொழுந்து பொருள் கூறினாள். அதைக் கேட்ட சபையோர்களும் வியந்தனர். சரியாகப் பொருள் கூறிவிட்டாய். உனக்கும் ஒரு பரிசு நாளை தரவிருக்கிறேன் என்று கம்பர் கூறினார்.

பின் கம்பர் சபையோர்களைப் பார்த்து "பெரியோர் களே! சபையோர்களே! உழவர்களின் பெருமையைப் பற்றிக் கூறும் எழுபது பாடல்களை உடைய "ஏரெழுபது"

என்ற சிற்றிலக்கியத்தில் இதுவரை 21 பாடல்களின் சிறப்பையறிந்தோம். நாளை தொடர்ந்து 5 பாடல்களையும் அதன் சிறப்பையும் அறியவிருக்கிறோம். நாளை ஏரெழுபதின் அரங்கேற்றம் நிறைவாகித் தொடர்ந்துள்ள பாக்களை மற்றொரு சமயம் வெளிப்படுத்தலாம் என்று அரசர் குறிப்பிட்டுள்ளதால் நான்காம் நாளாகிய நிறைவு விழாவிற்கு அனைவரும் வருகை தந்து சிறப்புவிக்க வேண்டுகிறேன். அனைவரும் உணவருந்திச் செல்ல வேண்டுகிறேன். நன்றி. இப்பொழுது சபை கலையலாம்'' என்று கம்பர் கூறி வணக்கம் தெரிவித்தார்.

நான்காம் நாள் நிகழ்ச்சி :

அடுத்த நாள். ஏரெழுபது அரங்கேற்றத்தின் நான்காம் நாள். இப்பொழுதைக்கு அரங்கேற்றத்தின் நிறைவு நாளாக இருந்தமையால் மக்கள் திரளாகக் கூடியிருந்தனர். குலோத்துங்க சோழன், சடையப்பர், அமைச்சர், பெருங்குடி மக்கள் யாவரும் தத்தம் இடத்தில் வந்து அமர்ந்தனர்.

மேடையில் கம்பரும், அவருடைய கற்றுச் சொல்லிகளும் வணக்கம் தெரிவித்து வந்தமர்ந்தனர்.

கம்பர் கலைமகள் சிலையை வணங்கி தொடர்ந்து பாட ஆரம்பித்தார்.

22. ''தென்னன் முடி, சேரன் முடி
தேங்கு பொன்னி நாடன் முடி
நன்னன் முடி கடல் சூழ்ந்த
காசினியோர் தங்கள் முடி

இன்ன முடி அன்றியும் மற்
றெடுத்துரைக்கும் முடிகளெல்லாம்
மன்னு முடி காராளர்
வயலின் முடி கொண்டன்றோ"

கம்பரே பாடலின் பொருளைக் கூறினார்.

பாடலின் கருத்து :

"தென்னவராகிய பாண்டியன் மகுடம், சேரனுடைய மகுடம், நிறைந்த காவிரி வளம்பெற்ற சோழனுடைய மகுடம், வடவெல்லையை ஆண்ட மகுடம், மற்றும் கடல் சூழ்ந்த உலகில் உள்ள நாட்டையாளும் எவராக இருந்தாலும் அவர்தம் சிரங்களில் அணிந்திருக்கும் மணிமுடிகள் எல்லாம் உழவர்கள் தங்கள் வயல்களில் நடும் நாற்று முடிகளின் விளைச்சலைக் கொண்டுதான் சிறந்து விளங்குகிறது"

என்று கம்பர் பொருள் கூறி அடுத்த பாடலைப் பாடினார்.

23. "மெய்ப்பாங்கு படக்கிடந்த
வேதநூல் கற்றாலென்?
பொய்ப் பாங்குப் படப்பிறரால்
புகழநூல் கற்றாலென்?
செய் பாங்கு படக்கிடந்த
செஞ்சாலி நன்னாற்றை
கைப்பாங்குப் பகுத்துநடக்
கற்றாரே கற்றாரே!"

என்று பாடிய பின் கம்பர் அவையோர்களைப் பார்த்து "பெரியோர்களே! இப்பொழுது இப்பாடலுக்குரிய கருத்தை இச்சபையில் உள்ள புலவர் நமசிவாயரைக் கூறும்படி வேண்டுகிறேன்.

இதைக்கேட்ட தடியுடன் அமர்ந்திருந்த நமசிவாயர் எதிர்பாராத நிலையில் தனக்கும் ஒரு வாய்ப்பைக் கம்பர் கொடுத்திருக்கிறார். முதலில் அதிர்ச்சி அடைந்தாலும் எழுந்து நின்று பொருள் கூற ஆரம்பித்தார்.

பாடலின் கருத்து :

''மெய்யாக விளங்குகின்ற வேதங்களைத் திறம்படக் கற்றாலும், பிறருக்கு இல்லாத தகுதிகளை பொய்யாகக் கூறிப் பணத்தைப் பெறுவதற்காக புகழ்ந்து பாடிய நூல்களைக் கற்றாலும் அதனால் பயனில்லை. அப்படிக் கற்றுத் தேர்ந்தவர்களெல்லாம் உண்மையாகக் கற்றவர்களில்லை. நன்கு பண்படுத்தப்பட்ட வயல்களில் செந்நெற் பயிர்களின் நல்ல நாற்றுகளைத் தங்களின் கை சாதுரியத்தால் பிரித்துப் பகுத்து, நட்டி உழவைப் பெருக்கக் கற்றாரே, தங்களை மட்டுமல்ல மற்றவர்கள் வாழ்வையும் காப்பாற்றுவதற்காகக் கற்றவர்கள் ஆவார்கள்.''

இவ்வாறு பொருள் கூறி அமர்ந்தார் நமசிவாயர். இதைக்கேட்ட சபையோர்கள் சபாஷ் என்று பாராட்டினார்கள். கம்பரும் ''தாங்கள் இப்பாடலைச் சுவைத்துப் பொருள் கூறியிருக்கிறீர்! நன்று'' என்று கூறி அடுத்த பாடலைப் பாடினார்.

24. ''ஏராலே சேறாக்கி
எருவாலே கருவாக்கி
நீராலே பைங்கூழை
நிலைப்பிப்பார் தமையின்றி

காராலே, காவேரி
நதியாலே காசினியில்
ஆராலே பசிதீர்வார்
அகலிடத்தில் பிறந்தாரே!

என்று கம்பர் பாடி அதற்குப் பொருளைக் கம்பரே கூறினார்.

பாடலின் பொருள் :

''ஏரினாலே நிலத்தை உழுது சேறாக்கி, பின் எருக்களாகிய உரத்தைப் போட்டு பக்குவப்படுத்தி, நீர்ப்பாய்ச்சி பயிர்களை விளைவிக்க மழையினாலும், காவேரி நதியின் நீரினாலும் செழிப்பிக்கும் உழவர்களைத் தவிர உலகில் வேறு யாராலும் மக்களின் பசியைத் தீர்க்க முடியாது''

என்று பொருள் கூறித் தொடர்ந்து அடுத்த பாடலைக் கம்பர் பாடினார்.

25. ''அந்தணர்க்கு வேதநூல்
அரசர்க்கு வெற்றி முதல்
முந்திய சீர் வைசியர்க்கு
முதல் உழவாம்; மூதுலகில்
வந்த உயிர் தமக்கெல்லாம்
மருந்தாக வைத்த முதல்
செந்தமிழ்க்கு முதலாம்அத்
திருவாளர் செய்முதலே!''

என்று கம்பர் பாடலைப் பாடி பொருள் கூறினார்.

பாடலின் கருத்து :

''வேத நூல்களைக் கற்றுத் தேர்தல் அந்தணர்க்கு முதல் சிறப்பாகும். பகைவர்களை வென்று வெற்றி

நாட்டுவதே அரசர்க்கு முதல் பெருமையாகும். வைசிய ரெனும் வணிகர்களுக்குப் முதல் பெருமை எதுவென்றால் உழவர்கள் விளைவித்த பொருளைப் பெறுவதாகும். உழவு செய்வோர்க்கு முதலைத் தருவது வயலாகும். அந்த வயல் தான் உலக உயிர்களுக்கு அமுத மருந்தாகவும், தமிழர் களின் செந்தமிழுக்கு முதல் சிறப்பைத் தருவதுமாகும்''

என்று கம்பர் பாடலுக்குப் பொருள் கூறினார்.

கற்றுச்சொல்லி பாடிப் பொருள்கூறுதல் :

கம்பர் அவையோர்களை நோக்கி ''ஏரெழுபது அரங் கேற்றத்தின் இன்றைய நிறைவுப் பாடலை என் கற்றுச் சொல்லியாகிய உலகநாதன் பாடி, அவனே பொருள் கூறுவான். அதனையடுத்து பங்குகொண்டு சிறப்பித்தோர்க்கு வெகுமதிகள் வழங்கப்படும்!'' என்று கம்பர் கூறினார்.

அப்போது கம்பரின் கற்றுச் சொல்லியாகிய உலக நாதன் எழுந்து சபையை வணங்கிப் பாட ஆரம்பித்தான்.

26. ''ஆழித்தேவர் கடலானார்
        அல்லாத்தேவர் அம்பலத்தார்
    ஊழித் தேவர் எல்லோரும்
        ஒருங்கே கூடி வந்தாலும்
    வாழித் தேவர் நன் மக்கள்
        வையத் தேவர் பெருக்காளர்
    மேழித் தேவர் பெருமைக்கு
        வேறு தேவர் கூறேனே!

என்று உலகநாதன் படி அதற்கு பொருள் கூறினான்.

பாடல் கருத்து :

திருமால், அக்னி, வருணன், பிரம்மன் அம்பலங்களில் ஆடும் இறைவன் மற்றும் உலகத்திலுள்ள தேவர்கள் எல்லோரும் ஒருங்கு கூடி வந்தாலும் வாழ வைக்கும் தேவர்கள் என்று சொல்லப்படும் பூமியில் வாழும் தேவர் களாகிய, கலப்பையை பிடிக்கின்ற உழவர்களுக்கு இணை யாகக் கருதப்பட மாட்டார்கள்.

ஆழி என்பதற்கு சக்கரப்படையை உடைய திருமால்; தேவர் என்பதற்கு அக்னி என்ற பொருள். வாழித்தேவர் – வாழ வைக்கும் தேவர்கள்; மேழித்தேவர் – கலப்பையைக் கொண்ட உழவர்கள். தேவர் என்பதற்கு கடவுள் என்ற பெயரும் உண்டு.

கற்றுச் சொல்லியாகிய உலகநாதன் பாடலின் பொருள் நயத்தைக் கூறி, வணக்கம் தெரிவித்து அமர்ந்தான்.

சடையப்ப வள்ளல் பரிசளித்தல் :

அப்போது சடையப்ப வள்ளல் எழுந்து நின்று ''திருவெண்ணெய் நல்லூரில் வாழும் பெருமக்களே! எனது அழைப்பினை ஏற்று இலக்கிய அரங்கேற்று விழா விற்கு வருகை தந்து நான்கு நாட்களும் உடனிருந்து சிறப்பித்த மன்னர் குலோத்துங்கன் அவர்களுக்கும், அமைச்சர்களுக்கும், புலவர்களுக்கும், கற்று வல்ல சான் றோர்களுக்கும், பொது மக்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று ஒரு நன்னாள். இப்பொன்னாளில் கம்பரின் ஏரெழுபது சிற்றிலக்கியம் இனிதே அரங்கேறியது. கம்பர்

என் தம்பியைப் போன்றவன். அவர் இயற்றிய நூலை நானே புகழ்வது உசிதம் அல்ல! எனவே அரங்கேற்றத் திற்கு ஏற்பாடு செய்தேன். தம்பியின் நூலை நீங்கள் அனைவரும் கேட்டீர்கள். பலரும் இடையிடையே சிறப் பித்து போற்றினார்கள். நூல் அரங்கேற்றத்தை சிறப்பாக நடத்தி தந்த கம்பருக்கும், கற்றுச் சொல்லிகளுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுவதுடன் இந்தப் பொன்முடிப்பை கம்பருக்கு அன்பளிப்பாக அளிக்கிறேன் என்று கூறி, பொன் முடிப்பை எடுத்துக் கம்பருக்கு வழங்கினார். கம்பரும் மகிழ்வோடு பெற்றுக் கொண்டார். சபையோர் மகிழ்ந்து கைத்தட்டினர்.

சோழ அரசன் பரிசளித்தல் :

பின்னர் குலோத்துங்க மன்னன் சபையோரை நோக்கி வணக்கம் தெரிவித்து ''சபையோர்களே! உழவர் களின் பெருமையை விளக்கும் அருமையான காவியத்தை இயற்றி இங்கு சிறப்புற அரங்கேற்றம் செய்த கம்பருக்கு இந்தப் பொன்முடிப்பை அளிக்கிறேன்'' என்று கூறிக் கம்பரை அழைத்தார். கம்பர் அரசரைப் பணிந்து அவர் கொடுத்த பொன் முடிப்பையும் பெற்றுக் கொண்டார் சபையோர் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

பின் அரசர் சபையோர்களைப் பார்த்து, அரங்கேற்று விழாவில் இருபாடலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வாதாடிய சைவப் புலவராகிய நமசிவாயருக்கு ஒரு நவரத்தின மாலையைப் பரிசாக அளிக்கிறேன். உடனே நமசிவாயர் வந்து பெற்றுக் கொள்ளவும் என்று

கூறினார். தண்டை ஊன்றியவாறு புலவர் நமசிவாயர் மேடைக்கு வந்து அரசரிடம் நவரத்தின மாலையைப் பெற்றுக் கொண்டார். சபையோர் கைதட்டினார்கள்.

வேலை தேடிவந்த நால்வரின் திருமண நிகழ்ச்சியை அறிவித்தல் :

பின் அரசர் சபையை நோக்கி நமசிவாயருடன் எதிர்த்து வாதாடி, எடுத்துக்கூறிய முத்தனை மேடைக்கு வரவழைத்தார். முத்தன் மேடைக்கு வந்தான்.

அதேபோல் கம்பருடைய பாடல்களைப் பாராட்டி யும், பொருளும் கூறிய் சண்பகம், பொன்னன், மரிக் கொழுந்து ஆகிய மூவரையும் மேடைக்கு வரவழைத்தார் அரசர். அவர்களும் மேடைக்கு வந்து சேர்ந்தனர்.

இப்போது மேடையிலே அரசரிடம் வேலை கேட்டு வந்த பொன்னனும், முத்தனும், அதேபோல வேலைகேட்டு வந்த வாணனுடைய காதலி சண்பகமும், மருதனுடைய காதலி மரிக்கொழுந்தும் நிற்பதை சபையோர் கண்டனர்.

அரசர் சபையை நோக்கி, அவையோர்களே! மேடை யில் நிற்கும் இந்த நால்வரையும் தனித்தனியே காதலித்த வர்கள் இந்த சபையிலே அமர்ந்திருக்கிறார்கள். இப்பொழுது அவர்கள் ஏரெழுபது அரங்கேற்றத்தின் மூலம் உழவினு டைய சிறப்பினை அறிந்து விட்டனர். அவர்களை உற்சாகமூட்டி உழவுத் தொழிலில் ஈடுபடுத்த வேண்டிய உதவிகளைத் தான் செய்து தருவதாகவும், ஓர் நல்ல நாளிலே இந்த நான்கு ஜோடியர்களின் திருமணத்தைத்

தான் நடத்தி வைப்பதாகவும் உறுதியளிக்கிறேன். கம்பர் இயற்றிய ஏரெழுபது நூலை அனைவரும் கற்றுத் தேர்ந்து உழவின் பெருமை அறிய, இந்த நான்கு நாள் விழா ஒரு காரணமாக இருந்ததைக் கண்டு பெருமை அடைகிறேன். தற்காலிகமாக மேடையில் தோன்றிய நால்வருக்கும் தனித்தனியே ஓர் நவரத்தின மாலையைப் பரிசாக அளிக்கிறேன். ஏற்றுக்கொள்ளுங்கள் என்று கூறி ஆளுக்கொரு நவரத்தின மாலையைக் கொடுத்தார் அரசர். சபையோர் கைதட்டி மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

அனைவரும் விருந்துண்டு கலைந்து சென்றனர்.

பின் ஒரு நல்ல நாளில் வேலை தேடிவந்த நால்வருக்கும் திருமணம் சோழ அரசன் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது.

5

கம்பர் மகன் அம்பிகாபதி வரலாறு

சோழன் அம்பிகாபதியின் கவியாற்றலை பரிசோதித்தல் :

கம்பருடைய் மகன் அம்பிகாபதியும் கவியாற்றல் பெற்றவன் என்பதை கம்பராமாயணம் அரங்கேற்றிய வரலாற்றின் மூலம் அறிகிறோம். கம்பர் தன் மகனிடம் அவனுக்குப் பிடித்தமான இரட்டைக் கிளவி பாடல்கள் நான்கினைக் கூறி, அவனிடமும் பாராட்டுக் கடிதம் கம்பர் பெற்றார் என்பதை அறிகிறோம்.

கம்பனுக்கு அம்பிகாபதி பிறந்த சில ஆண்டுகளில் சோழ அரசனுக்கு ஒரு மகள் பிறந்தாள் என்பதை அறிகி றோம். சோழ அரசன் தன் மகளுக்கு கல்வி கலைகளை கற்றுக் கொடுக்க கம்பரை நியமித்தார். இதனால் கம்பரு டைய மகன் அம்பிகாபதியும், சோழனுடைய மகளும் ஒன்று சேர்ந்து கல்வி கற்று வந்தனர். சோழ அரசன் கம்பருடைய மகன் அம்பிகாபதியின் கவியாற்றலை அறிய விரும்பினார்.

ஒருநாள் கம்பர் தன் மகனை அரசபைக்கு அழைத்துச் சென்றார். அப்போது சோழ அரசன் சபையின் முன்னே, அம்பிகாபதியை நோக்கி, ''தம்பி! நீ விஷ்ணு எங்கெங்கு உறங்கினார்? அவர் உறங்குமிடங்களை ஒரு பாட்டிலமைத்து கூறுவாயாக!'' என்று கேட்டார்.

சோழ அரசன் கேட்ட கேள்விக்கு விடையாக, அகத்துறையில் ஒரு பாடலமைத்துக்கூற முன்வந்தான் அம்பிகாபதி. ஒரு காதலி தன் காதலனுடன் ஊ ரை விட்டுச்

செல்ல, அதை அறிந்த தாயானவள் தன் மகள் செயலுக்கு இரக்கப்பட்டு கூறுபவளாக,

"பாலினும் இன்சொல் குயிலினும்
மென்மொழிப் பாவை நல்லாள்
மேலினும் காமன் சரம் தைக்குமோ
வடவேங்கடம் விட்டு
ஆலினும் வேலை நடுவினும்
பாம்பினும் – ஆத்துரத்துங்
கோலினும் கண்வளர்வாய் மழவா
பள்ளி கொண்டவனே!"

என்று பாடி முடித்தான்.

தான் குறித்தபடி விஷ்ணு பள்ளிகொண்ட இடங்களைப் பாடிய அம்பிகாபதியின் கவியாற்றலைக் கேட்டு அரசன் மிக்க மகிழ்ச்சியடைந்தான். வருடங்கள் உருண்டோடின.

கண்டகத்தி பாடலின் சிறப்பு :

அரசன் தன் மகள் பருவம் அடைந்த காரணத்தால் கன்னி மாடத்துள் வைக்கப் பெற்றாள். ஒருநாள் அரசன் நூதனமான கனவு கண்டான். நான்கடியாலான வெண்பாவில் முதலில் ஒருவர் இரு அடிகளைப் பாடவும், தொடர்ந்து அதை முடிக்க மூன்றாம், நான்காம் அடிகளை மற்றொருவர் பாட அமைவதுதான் கண்ட கத்தி பாடல் அமைப்பாகும். அதன் பெருமையை அறியக் கம்பரிடம் கேட்போம் என்று தனக்குள் எண்ணிய சோழன் அந்த இரவிலேயே கம்பருடைய வீட்டிற்குச் சென்றான்.

கம்பருடைய வீட்டையடைந்த சோழன் கதவைத் தட்டினான். கதவின் உட்புறம் நீண்ட வராந்தாவில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த அம்பிகாபதி, விழித்தெழுந்து, உள்ளே தூங்கிக் கொண்டிருந்த அப்பாவை நோக்கி,

"கரைக்கு வடக்கிருக்கும் காளிகா ளம்மைக்
கரைத்துவழி சாந்தைத் தொட்டப்பேய்"

என்று வெண்பாவின் இரண்டு அடிகளைப் பாடவும் அதைத் தொடர்ந்து வீட்டிற்குள்ளிருந்த கம்பர்

"–உரைத்தும்
மறைக்க வறியாத வன்பேயின் கையைக்
குறைக்குமாங் கூன்கத்தி கொண்டு!"

என்று பாடி முடித்தார்.

வெவ்வேறு குரல்களில் பாடப்பெற்ற இப்பாட்டினைக் கேட்ட சோழன் தான் கனவில் கண்ட "கண்டகத்தி" பாடலுக்கு உதாரணம் என்பதை அறிந்து வியப்படைந்தான். உடனே அரசன் வேறு ஒன்றும் தோன்றாமல் அரண்மனை வந்து சேர்ந்தான்.

மறுநாள் அரசபைக்குக் கம்பர் வந்தார். சோழன் கம்பரைப் பார்த்து நேற்று இரவு நீங்கள் பாடிய பாடலில் முதல் இரண்டடியைப் பாடியது யார்? என்று கேட்டார். உடனே கம்பர் என்னுடைய மகன் அம்பிகாபதியே முதல் இரண்டடியைப் பாடினான் என்று கூறவும் அரசர் வியந்து நாளை உன் மகனை அரசபைக்கு அழைத்து வருவாயாக! என்று வேண்டினார்.

அரச சபையில் நடந்தவை :

மறுநாள் கம்பர் தன் மகனை அழைத்துக் கொண்டு அரசபைக்குச் சென்றார். கம்பர் முன் விரைந்து சென்றார். அப்போது எதிர்பாராத நிலையில் பின் வந்து கொண்டிருந்த அம்பிகாபதி அவ்வழியே சென்ற தன் பள்ளித் தோழியாகிய சோழ அரசன் மகளைக் கண்டு யாரும் எதிர்பாராத வகையில் தழுவினான். அரசன் மகளும் யாது செய்வதென்று அறியாது மயங்கி பின் விலகிச் சென்றாள்.

அம்பிகாபதிக்கும் தன் மகளுக்கும் ஏற்பட்ட நட்பை சோழ அரசன் அப்பொழுது அறியாது, பின் சபை கலைந்த பின் அறிந்தான். தன் செவிக்கெட்டிய விஷயத்தை நேரில் காணாத அரசன், சமயம் வரும்போது அம்பிகாபதியின் அடாத செயலை சபைக்கு தெரியப்படுத்தி பழிவாங்க எண்ணினான்.

விருந்தின்போது நடைபெற்ற செயல் :

சோழ அரசன் தன்னுடைய சமஸ்தான புலவர்களுக்கும், வித்வான்களுக்கும் ஒரு விருந்து நடத்துவதாகவும் அவ்விருந்தில் தன்னுடைய மகளே பந்தி போஜனம் பரிமாறப் போவதாகவும் அறிவித்தான்.

குறித்த நாளில் சமஸ்தானப் புலவர்களும் வித்வான்களும் அரச மாளிகைக்குச் சென்றனர். கம்பர் தன் மகன் அம்பிகாபதியையும் அழைத்துச்சென்று விருந்தில் கலந்து கொண்டார். அனைவரும் சாப்பிட அமர்ந்தனர். சோழன் மகள் ஒரு தங்க வட்டிலில் பல ஆகாரங்களை வைத்து தன் இடையில் இட்டு மெதுவாக அசைந்து வந்தாள்.

அப்போது அதைக் கண்ட அம்பிகாபதி காதல் மயக்கத்தில் அவள் இடைவருந்த நடந்து வருவதைக் கண்டு, அனுதாபத்துடன்,

> "இட்டடிநோவ வெடுத்தடி கொப்புளிக்க
> வட்டில் சுமந்த மருங்கசைய..."

என்று இரண்டடிப் பாடலால் வெளிப்படுத்த, அதைக் கண்ட அரசன் கோபத்துடன் புலவர்களைப் பார்த்து "தன் மகளைப் பார்த்து அம்பிகாபதி இப்படிக் கூறுவது சரி தானா? என்று உரத்துக் கேட்டான்.

கம்பரும் கலைமகள் அருளும் :

அப்போது கம்பர் ''அரசே! என்னுடைய குமாரன் உங்களுடைய மகளைப் பற்றி இவ்வாறு பாடவில்லை. தெருவில் கொட்டிக் கிழங்கு விற்றுச் செல்லும் ஒரு கிழவியை நோக்கியே பாடினான் என்று கூறி,

"–கொட்டிக்
கிழங்கோ கிழங்கென்று கூவுவாள் நாவில்
வழங்கோசை வையம் பெறும்"

என்று தொடர்ந்து கம்பர் மீதிப்பாடலைப் பாடி முடித்தார்.

இதைக் கேட்ட அரசனுக்கு மேலும் கோபம் அதிகரிக்க, ஒரு சேவகனிடம் ''இப்போது கம்பர் கூறியது போல் தெருவில் ஓர் கிழவி கொட்டிக் கிழங்கு விற்றுச் செல்கிறாளா?'' என்று பார்த்து வரும்படி கூறினான்.

உடனே சேவகன் அரசன் கட்டளைப்படி அரண் மனையிலிருந்து வெளியே சென்று பார்த்தான். அப்போது கம்பர் கலைமகளை எண்ணி உதவி செய்ய வேண்டினான். கம்பருக்கு உதவி செய்யும் நிமித்தம் கலைமகளே, ஓர் கிழவியாக உருப்பெற்று தெருவில் கொட்டிக் கிழங்கு விற்றுக் கொண்டு சென்றாள்.

தெருவில் ஓர் கிழவி கம்பர் பாட்டிசைத்துக் கூறிய படி கொட்டிக்கிழங்கு விற்றுக் கொண்டு செல்வதைக் கண்ட சேவகன் அரசனிடம் வந்து உண்மையைக் கூற, அப்போது அரசனே வெளியே வந்து பார்த்தான். அங்கு ஓர் கிழவி கொட்டிக்கிழங்கு விற்றுக் கொண்டு சென்றாள். அரசன் ஏக்கத்துடன் சபைக்கு வந்தான்.

கம்பர் தன் மகனைக் காப்பாற்ற வாணியின் அருளை நாடியிருக்கிறார் என்பதை சோழன் அறிந்து, அடுத்து

எப்படியாவது அம்பிகாபதி குற்றமுடையவன் என்பதை நிரூபித்துக் காட்ட வேண்டும் என்று மனதில் துடிதுடித் தான்.

அம்பிகாபதி காதலியைத் தழுவுதல் :

பந்திபோஜனம் சிறப்பாக நடைபெற்றது. எல்லாப் புலவர்களும் விருந்து அருந்திய பின் சந்தனத்தைக் கையில் எடுத்து பூசிக் கொண்டனர். அம்பிகாபதி உடலில் சட்டை யணியாத நிலையில், தன் மேனியெல்லாம் சந்தனத்தைத் தடவிக் கொண்டான்.

சோழ அரசன் அம்பிகாபதியை நோக்கி "நீ அடுத்த அறையில் இருக்கும் தாம்பூலத்தட்டை எடுத்துக் கொண்டு வா!" என்று கூறினார். உடனே அம்பிகாபதியும் அடுத்த அறையில் தாம்பூலத்தட்டை எடுக்கச் சென்றான். அங்கு சோழன் மகள் எல்லோருக்கும் தாம்பூலம் கொடுப்பதற் காக தாம்பூலத் தட்டை தயாரித்துக் கொண்டிருந்தாள். உள்ளே சென்ற அம்பிகாபதி மெய்மறந்து அப்படியே காதலியை ஆலிங்கனம் செய்தான். சிறிது நேரத்தில் மயக்கந்தெளிந்து அம்பிகாபதி அந்த தாம்பூலத்தட்டை எடுத்துக் கொண்டு முதலறைக்கு வந்தான். அரசர் அம்பிகாபதியின் மார்பை உற்றுக் கவனித்தார். சந்தனம் பூசிய அம்பிகாபதி வயிற்றில் தன் மகள் மார்பிலணிந்த மதாணி முதலிய ஆபரணங்களின் உருவம் பதிந்திருப்ப தைக் கண்டான்.

ஒட்டக்கூத்தர் கூறிய தண்டனை :

அம்பிகாபதியின் மார்பிலே தன் மகளின் ஆபரண வடுக்களைக் கண்ட அரசன் உடனே உண்மையறிந் தவனாய் கோபத்துடன் அருகிலிருந்த ஒட்டக்கூத்தரை நோக்கி,

"கண்டீரோகான் அம்பிகாபதி செயும் பிழையைக்
கண்டீரோ நம்மீதில் கள்ளமில்லை உண்டோகாண்
ஆற்றாது கோபமடங்க வில்லை யிவனை ஒட்டக்
கூத்தா! என் செய்திடலாம் கூறு"

என்று அரசன் கூற உடனே ஒட்டக்கூத்தர் அதற்கு விடையாக,

"பனிப்பகையும் திங்களுமே பார்த்த செயலானால்
உனக்குயான் சொல்லுவ தொன்றுண்டோ-கனத்த
பிழைசெய்தான் அன்னைக்குப் பின் பார்க்க வேண்டான்
கழுவினில் ஏற்றிவிடல் காண்!"

என்று கூறினார்.

அம்பிகாபதிக்கு வாணி அருள் புரிதல் :

உடனே அரசன் காவலர்களை நோக்கி அம்பிகாபதியைக் கழுவிலேற்றும்படி கட்டளையிட, அம்பிகாபதியை இழுத்துச் சென்றனர். அம்பிகாபதி வாணியை நோக்கி வேண்ட கழுமரம் தீப்பற்றி எரிந்தது.

அரசன் அம்பிகாபதியைக் கட்டி யானையால் இடறச் செய்யுங்கள் என்று கட்டளையிட, யானையும் பயந்து ஒதுங்கியது. கலைவாணியின் அருளால் அம்பிகாபதி பிழைத்தான்.

அம்பிகாபதிக்கு நேர்ந்த கதி :

யானையின் மிடறலிலிருந்து பிழைத்த அம்பிகாபதியை நோக்கி, "அம்பிகாபதி! நீ நூறு பாடல்கள் பாட வேண்டும். அப்பாடல்கள் அனைத்தும் பேரின்பத்தைப் பற்றியதாக இருக்க வேண்டும். ஒரு பாடலிலும் சிற்றின்பம் கலக்கக்கூடாது. கலந்து பாடினால் என்னுடைய வாளுக்கு நீ இரையாவாய்!" என்று கோபத்துடன் கூற அதற்கு அம்பிகாபதி இசைந்தான்.

கம்பரும் அம்பிகாபதியும் :

இதுவரையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளையெல்லாம் கண்டு கொண்டிருந்த கம்பர் தன்னுடைய மகனைப் பார்த்து,

"இந்நாள் இது விளையுமென்று எழுத்துத் தானிருக்க
என்னாலே யாவதொன்று மில்லையே-உன்னாலே
வந்தது தானப்பா மகனே! தவிர்ப்பவர் யார்
முந்தையில் நீ செய்த வினையே!"

என்று கூறினார். அதைக் கேட்ட அம்பிகாபதி தன்னுடைய பிதாவை நோக்கி,

"இன்னாளிது விளையுமென்று எழுத்துத்தானிருக்க
என்னாலே யாவதொன்று மில்லையே-என்னாலே
வந்தது தானையாவரும் விதியை யார் தடுப்பார்
எந்தை மகாதேவர் செயல்"

என்று பதில் கூறினான். இதைக் கேட்ட கம்பர் அதன்பிறகு நடக்கும் நிகழ்ச்சிகளைக் காண வேண்டாதவராய் அங்கிருந்து வருந்தித் தன் இருக்கையடைந்தார்.

அம்பிகாபதி பாட ஆரம்பித்தல் :

அரச சபையின் முன் அம்பிகாபதி 100 பாடல்கள் பாட நிறுத்தப்பட்டான். சிற்றின்ப வார்த்தைகளே இல்லாமல் பேரின்பத்தைத் தரக்கூடியதாய் 100 பாடல்கள் பாட ஆரம்பித்தான்.

உணர்ச்சிவயப்பட்ட காதலியின் செயலும் விளைவும் :

இதே நேரத்தில் மாடத்தில் சோழ அரசன் மகள் அம்பிகாபதிக்கு யாதொரு துன்பமும் வரக்கூடாது என்று

எண்ணியவளாய் 100 மலர்களை ஒரு தட்டில் வைத்து ஒவ்வொரு பாடலுக்கும் ஒரு மலரை எடுத்துப் போட ஏற்பாடு செய்து கொண்டான்.

ஒட்டக்கூத்தரின் விதிப்படி காப்புப் பாடலை நீக்கி 100 பாடல்கள் பேரின்பத்தைப் பற்றிய பாடலாக இருக்க வேண்டும்.

எனினும் இதை அறியாத சோழன் மகள் காப்புப் பாடலையும் சேர்த்து 100 மலர்களை எடுத்துப் போட்டாள். 100 பாடல்களும் பேரின்பத்தைப் பற்றிய பாடல்கள் என்று அறிந்து மகிழ்ந்த சோழன் மகள் மாடத்திலிருந்து தன் உருவத்தை வெளிப்படுத்தி அம்பிகாபதியைப் பார்த்தாள். உடனே அம்பிகாபதி 100 பாடல்கள் முடிந்துவிட்டன என்று கருதி அடுத்த பாடலைத் தன் காதலியை எண்ணிச் சிற்றின்பப் பாடலாகப் பாடினான்.

காப்புப் பாடலைத் தவிர்த்து அந்த நூறாவது பாடல், சிற்றின்பப் பாடலாக இருந்ததால், அரசன் கோபங் கொண்டு தன் கை வாளினால் அம்பிகாபதியை சேதித்து விட்டான்.

கம்பன் சோழன் மகனைத் தண்டித்தல் :

தன் மகன் அரசனால் சேதிக்கப்பட்டதை அறிந்து துயரந் தாங்காது கம்பர்,

"மட்டுப்படாக் கொங்கை மானார் கல்வி மயக்கத்திலே
கட்டுப்பட்டாய் என்ன காதல் பெற்றாய்
மதன் கையம்பினால்
பட்டுப்பட்டாய் இனுந் தேறுவையே
என்று பார்த்திருந்தேன்
வெட்டுப்பட்டாய் மகனே! தலைநாளின் விதிப்படியே!"

என்று பாடி மனங் கலங்கினார்.

இதனால் வேதனையுற்ற கம்பர் அன்றையிலிருந்து சோழனுடைய சபைக்குச் செல்வதை விட்டு விட்டார். எனினும் தன் மகனைக் கொன்ற அரசனைப் பழி வாங்க தக்க தருணத்தை எதிர் நோக்கியிருந்தார் கம்பர்.

ஒரு நாள் காட்டிலிருந்து ஓடி வந்த யானை ஒன்று தெருக்களில் பிளிறியபடியே வந்து கொண்டிருந்தது. கம்பருடைய தெருவில் சோழ அரசனுடைய மகன் (சிறுவன்) மற்ற சிறுவர்களோடு விளையாடிக் கொண் டிருக்கும்போது அந்த யானையைக் கண்டு மருண்ட சோழ அரசனுடைய மகன் கம்பருடைய வீட்டிற்குள் புகுந்தான்.

அப்பொழுது கம்பர் ஏட்டிலே பாடல் எழுதிக் கொண்டிருந்தார். அதே சமயம் அரசனுடைய சிறுவன் உள்ளே நுழைந்தான். இதையே வாய்ப்பாகக் கருதிய கம்பர் தன் கையில் வைத்திருந்த எழுத்தாணியால் அச்சிறுவனைக் குத்திக் கொன்றார்.

சோழன் கம்பனைத் தண்டித்தல் :

இச்செய்தியைக் கேள்விப்பட்ட சோழன் கடுங்கோபங் கொண்டு வில்லையும் அம்பையும் எடுத்துக்கொண்டு கம்பருடைய வீட்டிற்கு வந்தார்.

''ஏ! கம்பா! என்னை இப்பொழுது நேரில் காண் கிறாய்! என்னைப் பார்த்தால் உனக்கு எப்படித் தெரிகிறது?'' என்று சோழன் கேட்டான்.

உடனே கம்பர் ''உன்னைப் பார்த்தால் ஸ்ரீஇராம பிரானைப் போல இருக்கிறது'' என்றார்.

உடனே சோழன், கம்பரை நோக்கி ''ஏ! கம்பா! உன்னைப் பார்த்தால் அந்தக் கொடிய இராவணனைப் போல் இருக்கிறது! இந்தா! என்னுடைய அம்பை வாங்கிக் கொள்!'' என்று கூறி கம்பருடைய மார்பை நோக்கி

பாணத்தை விடுத்தான். அந்த அம்பு கம்பருடைய மார்பில் பாய்ந்தது.

மார்பில் பாய்ந்த அம்பின் வலிமையைப் பொறுக்க மாட்டாத கம்பர், சோழனை நோக்கி,

''வில்லம்பு சொல்லம்பு மேதினியில் இரண்டுண்டு
வில்லம்பிற் சொல்லம்பே மேலதிகம்–வில்லம்பு
பட்டதடா என் மார்பில் பார்வேந்தா! நின்குலத்தைச்
சுட்டதடா என் நாவிற் சொல்''

என்று வசகவி பாடினார். மேலும் அப்போது தன் ஆருயிர்த் துணைவராகிய சடையப்ப முதலியாரை நினைத்து அவர் நன்றியைப் பாராட்டி,

''ஆன்பாலும் தேனும் அரம்பை முதன்முக்கனியும்
தேன்பாயவுண்டு தெவிட்டு மனம்–தீம்பாய்
மறக்குமோ வெண்ணை வருசடையா கம்பன்
இறக்கும் போதேனும் இனி''

என்று கம்பர் பாடிய நிலையில் தம் பூத உடம்பை நீத்தார். இவ்வாறு ஸ்ரீமத் முருகதாஸ சுவாமிகள் கூறி யுள்ளார்.

மறுத்துக்கூறும் மற்றொரு சம்பவம் :

மேற்கண்ட ''வில்லம்பு'' என்று சொல்லக்கூடிய பாடலை சில அறிஞர்கள் அப்பாடல் ஔவையாரால் பாடப்பட்டது என்று குறிப்பிடுகின்றனர். பாண்டிய மன்னன் தன்னை பழித்துக் கூறிய ஔவையாரை அம்பால் அடிக்க, அப்பொழுது ஔவையார் பாண்டியனை நோக்கி,

''வில்லம்பு சொல்லம்பு மேதகவே ஆனாலும்
வில்லம்பின் சொல்லம்பு வீறுடைத்து–வில்லம்பு

பட்டுருவிற்று என்னை என் பாட்டம்பு நின்குலத்தைச்
சுட்டெரிக்கு மென்றே துணி''

என்று கூறினாள். இக்கூற்று பலரால் மறுத்துக் கூறவும் படுகிறது. புலவர் புராணத்தை இயற்றிய ஸ்ரீமத் முருகதாஸ சுவாமிகள் சோழ அரசன் கம்பரை அம்பால் எறிந்து கொல்லாமல் கீழ்க்கண்ட நிகழ்ச்சியாலும் கொன்றிருக்கலாம் என்று கூறி மற்றொரு சம்பவத்தையும் குறிப்பிடுகிறார்.

கம்பர் இறப்புக்கு மற்றொரு காரணம் :

சோழ அரசன் சிற்பத் தொழிலில் வல்ல ஒருவனைக் கொண்டு ஒரு பெட்டியைச் செய்யச் சொன்னார். மேலும் பெட்டியை யார் திறக்கிறார்களோ அவரைத் திறந்தவுடனே வெளிக்கிளம்பிக் கொல்லக்கூடிய வில்லினோடு பொருந்திய அம்பை அப்பெட்டியினுள் அமைத்து, அப்பெட்டியை மூடியவாறு கம்பரிடத்தில் கொண்டு சென்றான் சோழன்.

கம்பர் சோழன் கொடுத்த பெட்டியைத் திறக்க, உடனே உள்ளிருந்து கிளம்பிய அம்பு கம்பரைத் தாக்கிக் கம்பர் இறந்தார் என்றும் குறிப்பிடுகிறது. இவ்வாறு ஸ்ரீமத் முருகதாஸ சுவாமிகள் குறிப்பிட்டுள்ளார்.

ஒட்டக்கூத்தரின் மகிழ்ச்சி :

கம்பர் இறந்த செய்தியைக் கேட்ட சோழ சபையி லிருந்த ஒட்டக்கூத்தர்

''இன்றைக்கோ கம்பன் இறந்தநாள் என் கவிதை
இன்றைக்கே அரசபைக்கு ஏற்குநாள்–இன்றைக்கோ
பூமடந்தை வாழப் பொறைமடந்தை வீற்றிருக்க
நாமடந்தை நூல் வாங்கு நாள்''

என்று பாடினார் என்று கூறப்படுகிறது. ஒட்டக்கூத்தர் தனக்கு பகையாக இருந்த கம்பர் இறந்த செய்தியால் மிக்க மகிழ்ச்சியடைந்ததாகக் கூறப்படுகிறது.

ஜெயங்கொண்டார் சதகத்தில் கூறப்படும் செய்தி :

மேலும் அக்காலத்தில் இயற்றப்பட்ட ஜெயங் கொண்டார் சதகத்தில் ஒரு எதிர்மாறான கருத்தும் கூறப் படுகிறது. சோழன் எய்த அம்பு குறி தவறியது. கம்பர் மீது படவில்லை. இதனால் கோபங்கொண்ட கம்பர் வில்லம்பு என்ற பாடலைப் பாடி, சோழனைச் சபித்துவிட்டு, நாட்டை விட்டுச் சென்றார் என்றும், பின் நாமகள் அருள் கம்பருக்குக் கிடைக்கவில்லை என்றும், பின் பாண்டிய நாடு சென்று கூலிவேலை செய்தாரென்றும் அச்சதகத்தில் குறிக்கப் பட்டுள்ளது.

"நங்கை கலைவாணி கம்பரிடத்து இருக்கத்
தண்டிகையின் நலமாய் வாழ்ந்தார்
அங்கவடான் புறம்போகக் கம்பர் அன்றே
கூலிக்கோராளானாரே
செங்கையுகிரால் வேதன் சிரத்தி லொன்றைத்
துணித்து விட்ட
ஜெயங்கொண்டாரே
சுங்க மாறியபோது சுண்ணாம்பும் கொடுத்தார்
தொல்புவியுளோரே!"

என்று சதகத்தில் கூறப்படுகிறது.

கம்பர் சமாதி நிலை :

பின் கம்பர் தம் அறுபதாம் வயதில் பாண்டிய நாடு வந்தடைந்தார். இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள நாட்டரசன் கோட்டையில் உவச்சர் மரபு குலத்தோர் இருப்பதை அறிந்து தங்கினார். அப்படி இருந்தபோது மாடுமேய்க்கும் சிறுவர்களிடம் சித்து விளையாட்டுக்

காட்டி மகிழ்ந்தார். நாட்டரசன் கோட்டையில் அவர் உடலைவிட்டு உயிர் பிரிந்தது. அங்கு அவர் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

கம்பர் சமாதியின் சிறப்பை இன்றும் காண்போம் :

அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் சிறு சமாதியுடன் கோவில் கட்டப்பட்டுள்ளது. இந்த கோவிலில் திருநீறுக்குப் பதில் சமாதியில் உள்ள மண்ணையே பிரசாதமாகக் கொடுக்கின்றனர். அந்த மண்ணை வாயில் போட்டுக் கொண்டதால் பேசாத குழந்தையும் பேசும் ஆற்றலைப் பெற்று அறிவுத் திறனிலும் சிறந்து விளங்கக் காணு கின்றோம்.

சமாதி அரைஅடி உயரத்தில் 4அடி சதுர பரப்பில் கட்டப்பட்டு அதன் நடுவில் பீடமும் நிறுவப்பட்டுள்ளது. அந்த பீடத்திற்கு பின் இடதுபுற மூலையில் இருந்து பேச்சுத்திறன் அறிவுத்திறன் கிடைக்க சமாதி மண் எடுத்துக் கொடுக்கப்படுகிறது.

மேலும் இந்தச் சுற்று வட்டாரத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு முதன் முதலில் நாக்கில் இந்த மண்ணைத் தடவுவதைக் காண்கிறோம். கலைமகளின் நாக்கு வளத்தைப் பெற இக்கோவிலுக்கு மக்கள் சென்று வருவதை இன்றும் காண்கிறோம்.

6

கம்பரும் எழுத்தச்சனும்

(ஓர் ஒப்பீடு)

இருவர் சிறப்பு :

திராவிட மொழிகளில் ஒன்றான மலையாளத்தில் எழுதப்பட்ட அத்தியாத்ம இராமாயணத்தை இயற்றியவர் எழுத்தச்சன் ஆவார்.

கம்பன் கன்னித் தமிழில் இராமாயணத்தை இயற்றி யுள்ளார். கவின்மிகு மலையாளத்தில் எழுத்தச்சன் இராமா யணத்தைத் தந்துள்ளார்.

எழுத்தச்சன் 17ம் நூற்றாண்டில் வாழந்தவர். மலபார் பகுதி, மக்களின் குடும்பப் பெயர் ''துஞ்சத்து'' என்பதாகும். துஞ்சத்து எனும் அடை சேர்த்து துஞ்சத்து எழுத்தச்சன் என்று போற்றப்படுகிறார்.

''விருத்தமெனும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்'' என்பர். அதுபோல் ''கிளிப்பாட்டு எனும் கவி வகைக்கு உயர்ந்தவர் எழுத்தச்சன்'' ஆவார். கேக, காகளி, களகாஞ்சி, மணிகாஞ்சி, அன்ன நட என்னும் ஐவகைப் பாக்கள் சேர்ந்து உருவாக்கப்படும் கவிக்கு மலையாளத்தில் ''கிளிப் பாட்டு'' என்று பெயர்.

தேரெழுந்தூரில் பிறந்தவர் கம்பர். திருச்சூர் அடுத்து திருக்கண்டியூரில் பிறந்தவர் எழுத்தச்சன் ஆவார்.

கம்பர் – எழுத்தச்சன் இயற்றிய நூல்கள் :

வியாச முனிவர் இயற்றிய பாரதத்தை மலையாளத்தில் பாபாரதம் என்ற பெயரில் மொழியாராய்ச்சி செய்தவர் எழுத்தச்சன். சமஸ்கிருதத்தில் உள்ள பிருமாண்ட புராணத்தையும் பாகவத புராணத்தையும், அத்தியாத்ம புராணத்தையும், தமிழில் உள்ள கம்பராமாயணத்தையும் கொண்டு மலையாளத்தில் அத்தியாத்ம இராமாயணத்தை இயற்றியுள்ளார்.

கம்பர், சடகோபர் அந்தாதி, சரசுவதி அந்தாதி, சிலை எழுபது, ஏர் எழுபது, திருக்கை வழக்கம், மும்மணிக் கோவை என்னும் நூல்களை இயற்றியுள்ளார். மாபாரதம், பாகவதம், தேவி மாத்மியம், பிருமாண்ட புராணம், சதமுக இராமாயணம், ஹரி நாமகீர்த்தனம், சிந்தாரத்னம், கைவல்லிய நவநீதம், இராமாயண இருபத்து நாலு விருத்தம், கேரள நாடகம் போன்ற பல நூல்களை இயற்றியவர் எழுத்தச்சன் ஆவார்.

இராமாயணத்தின் உட்பிரிவுகள் :

கம்பர் வால்மீகி இராமாயணத்தை மாற்றம் செய்தது போல, எழுத்தச்சனும் மலையாளத்தில் தான் இயற்றிய இராமாயணத்தை, மூலமாகிய சமஸ்கிருத இராமாயணத்தில் புகுந்து விரித்தும், தொகுத்தும், வகைப்படுத்தியும், சுருங்கச் சொல்லியும், சில சேர்த்தும், சில விடுத்தும் மறு படைப்பு செய்து மலையாள அத்தியாத்ம இராமாயணத்தை இயற்றியுள்ளார்.

எழுத்தச்சன் மலையாளம், தமிழ், சமஸ்கிருத மொழிகளில் தேர்ச்சி பெற்றவர். தமிழில் கம்பர் இயற்றிய

இராமாயணத்தின் அமைப்பைப் பின்பற்றி பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், புத்த காண்டம் என ஆறு காண்டங்களில் கதையை எழுத்தச்சன் நடத்திச் செல்லு கிறார். எனினும் காண்டத்தின் உட்பிரிவுகளை கம்பர் அமைத்ததுபோல் அமைக்கவில்லை. கம்பராமாயணத் திலுள்ள ஏழாவது காண்டம் ஒட்டக்கூத்தரால் இயற்றப் பட்டது. எழுத்தச்சனுடைய அத்தியாத்ம இராமாயணத்தில் வருகின்ற ஏழாவது காண்டமான உத்தர காண்டத்தை மற்றொரு அறிஞரே எழுதியுள்ளார்.

இராமாயண தொடக்கம் :

கம்பராமாயணத்தில் கம்பரே கடவுள் மாக்கதையை தாமே கூறுவதாக நடத்திச் செல்லுகிறார்.

சிவபெருமானும் பார்வதி தேவியாரும் நடத்துகின்ற உரையாடல்களைக் கிளி ஒன்று கூறுவதாக அத்தியாத்ம இராமாயணத்தை எழுத்தச்சன் நடத்திச் செல்கிறார்.

திருமால் மண்ணுலகில் இராமனாக ஏன் அவதாரம் செய்தார் என்பதைக் கம்பர் விளக்கமாகக் கூறுவதைப் போல், எழுத்தச்சன் விளக்கமாக ஆரம்பத்தில் கூறவில்லை.

அரக்கர்களின் கொடுமையிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ள தேவர்களும் பூமாதேவியும் திருமாலிடம் வந்து உதவி கேட்க, அப்போது திருமால் அவர்கள் துன்பத்தை நீக்கத் தான் கோசலை வயிற்றில் தோன்றுவ தாகவும், தனக்கு தம்பியர் மூவர் பிறப்பதாகவும் (எப்படிப் பிறப்பார்கள் என்பதைக் கூறவில்லை) கூறினார். ஆனால் கம்பரின் திருமால் (தன் தம்பியரின் பிறப்பை) தெளிவாக ஆரம்பத்தில் கூறுவதைக் காண்கிறோம்.

கம்பன், எழுத்தச்சன் இராமாயணப் படைப்புகளில் விளக்க அட்டவணை

படைப்பு	காண்டம்	படல எண்ணிக்கை	பாட்டு / அடி எண்ணிக்கை	யாப்பு
கம்பன்	பாலகாண்டம்	22	1397	விருத்தங்கள்
	அயோத்தியா காண்டம்	12	1224	
	ஆரணிய காண்டம்	11	1204	
	கிஷ்கிந்தா காண்டம்	17	1050	
	சுந்தர காண்டம்	15	1343	
	யுத்த காண்டம்	39	4358	
			10576	
எழுத்தச்சன்	பால காண்டம்	–	1700	கேக
	அயோத்தியா காண்டம்	–	3188	காகளி
	ஆரணிய காண்டம்	–	2040	கேக
	கிஷ்கிந்தா காண்டம்	–	2285	காகளி
	சுந்தர காண்டம்	–	1474	களகாஞ்சி
	யுத்த காண்டம்	–	5154	காகளி
			15841	

இராமர் – தம்பியர் பிறப்பும் வளர்ப்பும் :

வேள்வித் தீயில் தோன்றிய பூதம் கொண்டுவந்த சுதைப் பங்கீட்டின்போது, தயரதன் அவிச்சுதையின் பாதியை கோசலைக்கும், மீந்ததை இரு கூறாக்கி, கைகேயி, சுமித்திரைக்கும் கொடுத்தது போக சிதறியதை ஒன்று திரட்டி சுமித்திரைக்கும் கொடுத்ததாகக் கம்பன் காட்டு கிறார்.

ஆனால் எழுத்தச்சன் சற்று மாற்றமுடன் கூறுகிறார். பூதம் கொடுத்த அவிச்சுதையை தயரதன் இரு கூறாக்கி ஒன்றை கோசலைக்கும், மற்றொன்றை கைகேயிக்கும் கொடுத்து உண்ணும்படி கூறுகிறார். அப்போது கோசலை யும் கைகேயியும் தங்களுக்குக் கிடைத்த அவிச்சுதையைத் தாங்கள் முழுவதும் உண்ணாமல், ஒவ்வொருவரும் தங்கள் பங்கில் கொஞ்சத்தை சுமித்திரைக்கு இருவரும் கொடுக்கி றார்கள். கோசலை, கைகேயி கொடுத்த சிறிய அவிச் சுதையை சுமித்திரை வாங்கிச் சாப்பிடுகிறாள். இவ்வாறு எழுத்தச்சன் அத்தியாத்ம இராமாயணத்தில் கூறுகிறார்.

மேலும் கம்பன் காட்டாத ஒரு காட்சியை எழுத் தச்சன் காட்டுகிறார். கோசலைக்குப் பிறந்த குழந்தை மட்டும் பேருருக் கொண்டு திருமால் வடிவமாய்க் காட்சி தந்து பின் குழந்தையாகியது – இதனை எழுத்தச்சன் குறிப் பிடுகிறார். கம்பன் அப்படிக் காட்டவில்லை.

குழந்தைகள் நால்வரின் இளமைக்கால நிகழ்ச்சிகள் வான்மீகி இராமாயணத்திலும், கம்பராமாயணத்திலும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. எழுத்தச்சனின் அத்தியாத்ம இராமாயணத்தில் குழந்தைகள் கூடிவிளையாடுவது, கல்வி பயில்வது கூறப்படவில்லை.

புனை மண்டபத்தில் மந்திரக் குழுவுடன் தயரதன் அமர்ந்திருக்க, அப்பொழுது விசுவாமித்திர முனிவர் வருகை தரும் கையடைப் படலம் கம்பரின் இராமாயணத்தில் கூறப்பட்டுள்ளது. எழுத்தச்சன் அத்தியாத்ம இராமாயணத்தில் விசுவாமித்திர முனிவர் தயரதன் சபைக்கு வந்தார். இராமனையும் இலக்குவனையும் கூட்டிக் கொண்டு சென்றார் என்று மட்டும் குறிப்பிடுகிறார்.

"அக்காலம் விசுவாமித்ரனாகிய முனி குலமுக் யனு
மயோத்யக் கம்மா றெழுந்நெள்ளீடினான்"

என்று எழுத்தச்சன் குறிப்பிடுகிறார்.

விசுவாமித்திர முனிவரின் அனுமதி பெற்று இராமன் வில்லை முறித்தல் :

ஜனகனுடைய சபையில் அறுபதினாயிரம் பேர் வில்லைக் கொணர்ந்தார்கள் என்று கம்பன் கூறுகிறார்.

அய்யாயிரம் பேரே வில்லைக் கொண்டுவந்ததாக எழுத்தச்சன் குறிப்பிடுகிறார்.

வில்லை முறிக்கும்படி விசுவாமித்திர முனிவர் இராமனை நோக்கினார் என்று மட்டும் கம்பர் குறிப்பிடுகிறார்.

எழுத்தச்சனின் இராமாயணத்தில் இராமன் விசுவாமித்திர முனிவரிடம் சென்று அனுமதி வாங்கிப் பின் வில்லை நோக்கிச் சொன்னான், இதனை,

"சந்திர சேகரனுடை பள்ளிவில் கண்டு ராம
சந்திர னுமானந்த முட்கொண்டு வந்திச்சிடினான்
வில்லெடுக்காமோ குலச்சீடாமோ வலிக்காமோ"

என்று எழுத்தச்சன் குறிப்பிடுகிறார்.

அரியும் சிவனும் ஒன்று :

ஆரணிய காண்டத்தில் இராமன் விடுத்த கணையால் கரனும், பதினாயிரம் அரக்கர்களும் கீழே விழுந்து ஒளி வடிவானார்கள். அப்போது அவர்கள் இராமனைத் துதித்து முற்பிறப்பை அறிந்தார்கள். முற்பிறப்பில் அவர்களின் தவ நிலையை அறிந்து, அவர்களைச் சிவபெருமான் அரக்கர் களாகப் பிறக்குமாறு கட்டளையிட்டார். முற்பிறப்பில் இராமபிரானால் அம்பெய்யப் பெற்று ஒளிவடிவானார்கள் என்று எழுத்தச்சன் குறிப்பிடுகிறார்.

அரியும் சிவனும் ஒன்று என்ற தத்துவத்தைக் காட்டவே எழுத்தச்சன் இந்நிகழ்ச்சியைக் கூறியுள்ளார். இக்காட்சி கம்பராமாயணத்தில் இல்லை.

பஞ்சவடி :

கம்பராமாயணத்தில் கோதாவரி ஆற்றின் கரையில் பஞ்சவடி அமைந்துள்ளது. எழுத்தச்சனின் பஞ்சவடி கங்கையின் வடகரையில் அமைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

துந்துபி மண்டையோட்டின் நிலை :

கிஷ்கிந்தா காண்டத்தில் சுக்கிரீவன் இராமனிடம், வாலியைக் கொல்வது எளிதன்று என்று கூறி துந்துபி என்னும் அவுணன் வரலாற்றைக் கூறுகிறான். மலைபோலும் துந்துபியின் தலையோட்டினை சுக்கிரீவன் இராமனுக்குக் காட்டி, இதனை எடுத்தெறியுமாறு பணிக்கிறான்.

இராமன் தன் காலால் துந்துபியின் தலையோட்டை எற்றி விடுகிறான். அந்தத் தலையோடு பத்து யோசனைத் தொலைவு சென்று விழுகிறது. இச்சம்பவத்தை எழுத் தச்சனே விளக்கமாகக் கூறுகிறார். இதனால் இராமபிரானு டைய மிக்க ஆற்றலைச் சுக்கிரீவன் அறிகிறான். அதன் பின்னர்தான் கம்பரால் விளக்கப்படும் ஏழு மரா மரங்களை

இராமன் ஒரு கணையால் சிதைப்பதை நாம் அறிகிறோம். மராமரம் என்பது பனை மரம் என்று எழுத்தச்சன் குறிப்பிடுகிறார்.

இராமபிரான் முடிசூட்டு விழா :

இராமபிரானின் முடி சூட்டு விழாவின் போது உமா தேவியோடு சிவபெருமான் வந்து வாழ்த்தியதாக எழுத் தச்சனின் அத்தியாத்ம இராமாயணம் கூறுகிறது.

''அரியணை அனுமன் தாங்க'' என்ற பாடலால் இராமனுடைய முடிசூட்டு விழாவைச் சிறப்பிக்கிறார் கம்பர்.

எழுத்தச்சனின் முடிசூட்டு விழா வைபவம் ஊர் வலமாக நத்திக் கிராமத்திலிருந்து தொடங்கி வருகிறது இராமபிரானின் முடிசூட்டு விழாவை கிளிப் பாடலில்,

"சாரு வெஞ்சாமரம் நக்தஞ்ச ரேந்திரனும்
சவேதா தபத்ரம் பிடிச்ச சத்ருக்கனனும்
சோதரன் திவ்யவ் யஜனவும் வீயினான்"

என்று எழுத்தச்சனால் கூறப்படுகிறது. சத்துருக்கனன் குடை கவிக்க, வீடணன் கவரி வீச, இலக்குவன் விசிறி வீச தேர் ஊர்வலம் அயோத்தி வந்து விழா சிறப்பாக நடைபெற்றது என்று சுருக்கமாகக் கூறப்படுகிறது.

பாத்திரப் படைப்பில் கம்பனும் எழுத்தச்சனும்

இராமன் :

கம்பன் காவியத் தலைவன் இராமன். தயரதனின் மூத்த மகன். உண்மையின் உறைவிடம். இராமனைப் பரம்

பொருளென்றே காட்டி, தம் நூலுக்கு இராமாவதாரம் என்றுக் கம்பர் பெயர் சூட்டியுள்ளார்.

எழுத்தச்சன் காட்டும் இராமன் திருமாலின் அவதாரம். பரம்பொருள் என்றே எழுத்தச்சனாலும் போற்றப்படுகிறான்.

கம்பன் காட்டும் இராமன் எவ்விடத்திலும் கைகேயியைப் பழித்துக் கூறவில்லை. பிறர் கைகேயியைப் பழித்தாலும் அதை முன்னின்று தடுத்து அறவுரை கூறுகிறான். இன்பத்திலும் துன்பத்திலும் இராமன் மனோ நிலை ஒன்றாகவே இருக்கிறது. ''மெய்திருப்பதம்'' சூடச் சொன்ன வேளையிலும், அதனைத் துறந்து ''கானகம் செல்க'' என்று சொன்னபோதும் மாறுபாடின்றிச் சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரையினை ஒத்த முகத்தினை உடையவனாய் இராமனைக் காட்டுகிறார் கம்பர்.

எனினும் எழுத்தச்சனோ, இராமன் இன்ப துன்பத்திற்கேற்ற முகம் மாறுபடுவதையே காட்டுகிறார். இராமன் கோசலையிடம் விடைபெறச் சென்றபோது இராமன் முகம் வாட்டமுற்றிருப்பதைக் கண்டு, ''எந்தென் மகனே முகாம்புஜம் வாடுவான்!'' என்று கூறுகிறாள். சீதையும் தன் கணவன் முகம் வாடியிருப்பதைக் கண்டு கலங்குகிறாள்.

இராமன் முக வேறுபாட்டை எழுத்தச்சன் ஒரு சில இடங்களில் சுட்டிக் காட்டினாலும் அவனைக் கருணையுடையவனாகவே காவியத்தில் சித்தரித்துக் காட்டுகிறார்.

இராவணன் இறந்தபின் அவன் சடலத்தை எரியூட்ட மறுக்கிறான் வீடணன். அப்போது இராமன் வீடணனிடம், ''சாவுக்குப் பின் வஞ்சகம் பாவித்தல் கூடாது'' என்று பெருந்தன்மையுடன் கூறுகிறான். இச்சம்பவம் எழுத்தச்சனின் இராமாயணத்தில் காண்கிறோம்.

இவற்றிற்கெல்லாம் மேலாக இராமன், ''சிவனின் அவதாரம்'' என்று உணர்த்துகிறார் எழுத்தச்சன். இதனை ''நிர்ணயம் மஹாதேவனாயதும் ரகுபதி'' என்று கூறுவதின் மூலம் அறிகிறோம்.

பரதன் :

எழுத்தச்சன் காட்டும் இராமன், தெய்வ, மானுடப் பண்புகளில் சிறந்தவன். இலக்குவன் இராமனிடம் காட்டிய பக்தியை விட பரதன் அதிக பக்தி செலுத்து வதைக் கம்பராமாயணத்தில் காண்கிறோம். பரதன் தன்னைப் பெற்ற தாயாகிய கைகேயியைப் பழித்துக் கூறுவதையே காண்கிறோம். தன் அண்ணன் காடு செல்வதற்குத் தன் தாய் கைகேயிதான் காரணம் என்பதை அறிந்து வேதனைப்படு கிறான். அதற்காக கோசலையிடம் சென்று மன்னிப்புக் கேட்கிறான் பரதன்.

''ஆயிரம் இராமர் உனக்கு ஈடாக மாட்டார்கள்'' என்று குகனும் பரதனைப் போற்றுகிறான்.

தன்னுடைய தந்தை தயரதனுடைய ஈமச்சடங்கைச் செய்ய முடியாமல் தவிக்கிறான் பரதன். எனவே இராமனை நீதியாகவும், பரதனை அறமாகவும் உவமித்துப் போற்று கிறார் கம்பர்.

நிகழ்ச்சிக் கோவைகளில் கம்பனைப் போல அடிப் படைப் பண்பில் உயர்த்தியே கூறுகிறார் எழுத்தச்சன். பரதனின் ஆட்சிச் சிறப்புக் கருதியே பரதன் என்னும் பெயர் அமைந்ததாக எழுத்தச்சன் கூறுகிறார்.

நந்திக் கிராமத்திலிருந்து பரதன் பதினான்கு ஆண்டு கள் ஆட்சி செய்ததனால் அரண்மனைக் கருவூலம், யானை, தேர், குதிரை அளவு பதின்மடங்கு, பெருகியதாக எழுத்தச்சனின் கீழ்க்கண்ட பாடலால் அறிகிறோம்.

''பண்டேதி லிருந்து பதின்மடங் ஙாயுட
ஹுண்டிஹ ராஜ பண்டாரவும் பூபதே!
ஆனயும், தேரும் குதிரயும் பார்த்து காண்
ஊனமில் லாதே பதின் மடங் ஙண்டல்லோ''

என்று எழுத்தச்சன் குறிப்பிடுகிறார். பரதன் கொண்ட துறவுக் கோலமும், பிற மாண்புகளும் கம்பனில் அமைவது போல காணப்படுகின்றன.

இலக்குவன் :

சுமித்திரை வயிற்றுதித்தவன் இலக்குவன். ஆதிசேடனின் மானுட அவதாரம். ஏழிரண்டு ஆண்டு அண்ணனைத் தொடர்ந்து ஏவல் செய்யப் புறப்பட்டவன். தன்னை அணுகிய துயிலை, தன் அண்ணனை அயோத்திக்கு மீட்டு வரும் வரை இலக்குவன் பெறவில்லை என்றே கம்பர் உயர்த்திக் கூறுகிறார். இலக்குவன் துறந்தது துயில் மட்டுமல்ல, உணவும் கூட ''துயில்கின்றேனுக்காவன நல்கியயிலாதாய்!'' என்று பிறிதோர் இடத்தில் போற்றப் படுகின்றான்.

இராமனை நிழலெனத் தொடரும் இலக்குவன், சில நெருக்கடியான நிலையில் அண்ணனுக்கு அறவுரையும் கூறுகிறான்.

கம்பன் இலக்குவனை போற்றிக் கூறியதைப் போல, எழுத்தச்சன் சிறப்பிக்கவில்லை எழுத்தச்சன் படைக்கும் இலக்குவன் உண்மையறிவு காணத்துடிப்பவன். இராமனிடம் அவன் வேண்டுவது எல்லாம் ஞானப்பாதை காட்டித் தன்னை அழைத்துச் செல்லுமாறு வேண்டுவதாகும்.

சத்துருக்கனன் :

சுமித்திரையின் வயிற்றில் உதித்த இரட்டையரில் ஒருவன் பரதனின் தம்பி. தெய்வச் சக்கரத்தின் மானுட வடிவம் சத்துருக்கனன். இலக்குவன் இராமனைத் தொடர் தல் போல பரதனை நிழலெனத் தொடரும் இயல்பினன்.

சீற்றத்தில் இலக்குவனை ஒத்தவன். கானகம் செல்லும் பரதனைத் தொடரும் மாந்தர் கூட்டத்துள் கூனியைக் கண்டதும் அவளைப் பற்றி இழுத்துத் தண்டிக்க முனைந் தான் சத்துருக்கனன். கம்பனில் சத்துருகனனே தயரதனுக்கு ஈமச்சடங்குகளைப் புரிகின்றான்.

குறித்த நாளில் இராமன் அயோத்தி வராத நிலையில், பரதன் நெருப்பில் வீழ்ந்து இறக்கத் துணிந்தான். சத்துருக் கனனே நெருப்பை மூட்டுகிறான்.

கம்பன் செய்த சிறப்பையே எழுத்தச்சனும் தன் இராமாயணத்தில் செய்கிறான். பரதனோடு சத்துருக்கனன் இணைந்து திரிவதற்குக் காரணம்,

> "பரத சத்துருக்னன் மாரொருமிச் செல்லா நாளும்
> மருவீடுந்து பாயஸாம் சானு ஸாரவசால்"

என்று அவிச்சுதைப் பங்கீட்டின் சிறப்பை எழுத்தச்சன் குறிப்பிடுகிறார். சாத்துவீகக் குணத்தின் உருவமாக சத்துருக் கனனை இருவரும் படைத்துள்ளனர்.

தயரதன் :

அயோத்தி மன்னன். அயன் புதல்வன். உயிரெலாம் தன்னுயிரொப்ப ஓம்பியவன். உயிரெலாம் உறைவதோர் உடம்பும் ஆயினன். அவனுடைய ஒத்துறை பத்தினிப்

பெண்டிர் பலர் எனினும் பட்டத்தரசியர் மூவர். கைகேயி யிடம் தனிப்பாசங்கொண்டவன் என்று கம்பர் குறிப்பிடு கிறார். எனினும் கைகேயியிடம் தயரதன் கொண்ட எல்லையில்லாப் பாசத்தை எழுத்தச்சன் காமம் என்கிறார். ''ஸ்த்ரீஜிதனாயதி காமுகன் தச்ரதன்'' என்று எழுத்தச்சன் குறிப்பிடுகிறார்.

மேலும் வேள்விச் சுதைப் பங்கீட்டின்போது தயரதன் தயக்கத்துடனே கைகேயிக்கு ஒரு பகுதி சுதை கொடுத்ததாக எழுத்தச்சன் குறிப்பிடுகிறார்.

''சைதில்யாத்மனா பாதி நல்கினான் கைகேயியிக்கும்'' என்று எழுத்தச்சனின் கிளிப்பாட்டு வரி கூறுகிறது.

கைகேயி வரங்கேட்ட நிலையிலிருந்து தயரதன் மிக்க கோபங்கொண்டவனாகவே எழுத்தச்சனும் குறிப்பிடுகிறார். இராவணன் இறந்த பிறகு வானிடையிருந்து மண்ணுலகம் வந்த தயரதன்,

> "அன்று கேகயன் மகள் கொண்ட வரமெனு மயில்வேல்
> இன்று காறு மென்னிதயத்திடை நின்றதென்னை
> கொன்று நீங்கலதிப் பொழுதகன்றது"

என்று கூறி கைகேயி ''என்தாரமல்லள்'' என்று பழித்துக் கூறுவதைக் காண்கிறோம்.

கோசலை :

இராமனின் நற்றாய். பட்டத்தரசியரில் மூத்தவள். நற்குடிப்பிறந்த கோதை. கற்புடைய நங்கை. யாவராலும் வணங்கத்தக்கவள். ''சுற்றத்தார் தேவரோடு தொழ நின்ற கோசலை'' என்று கம்பர் குறிப்பிடுகிறார். கம்பன் கோசலை பரதனிடம் வஞ்சமோ வெறுப்போ கொண்டவளல்லள்.

பரதன் முடிசூட்டப் போவதை இராமபிரான் தன் தாய் கோசலையிடம் கூறியபோது தன் தாய் கோசலை, ''நிறை குணத்தவன் நின்னினும் நல்லன்'' என்றே பரதனைக் கூறுகிறாள்.

தீயிடைப் புகுந்து பரதன் தன் உயிரைப் போக்க எண்ணியபோது, அங்கு ஓடி வந்த கோசலை,

''எண்ணில் கோடி இராமர்களென்னினும்
அண்ணல் நின்னருட்கு அருகாவரோ''

என்று பரதனிடத்துக் கொண்ட அன்பை வெளிப்படுத்துகிறார் கம்பர்.

எழுத்தச்சனும் கோசலையை நற்குண மாண்புடையவளாகவே காட்டுகிறார்.

திருமால்தான் தனக்கு மகனாகப் பிறந்திருக்கிறார் என்ற தேவ ரகசியத்தை அறிந்தவள் எழுத்தச்சனுடைய கோசலை. கம்பன் கோசலை இவ்வுண்மையை உணர்ந்தவளல்லள்.

இராமன் நாட்டை ஆள்வான் என்பதை மந்திர சபையில் கூறியபின், தயரதன் கைகேயியிடம் செல்வதைக் கண்ட கோசலை, ''இராமனுக்கு முடிசூட்டு விழாவிற்கு பங்கம் ஏற்படுமோ?'' என்று சந்தேகம் கொள்கிறாள். எனவே ''இலக்குமி தேவியைத் துதித்து முடிசூட்டு விழாவிற்கு இடையூறு ஏற்படக் கூடாதென்று துதிக்கிறாள். இவ்வாறு துதி செய்வது எழுத்தச்சனின் இராமாயணத்தில் காண்கிறோம்.

கைகேயி :

பரதனின் நற்றாய். அவளழகும் தோற்றமும் தயரதனை மையல் கொள்ளச் செய்தது. கைகேயி நெஞ்சில் தயரதன் உறைவதாகவே கம்பன் குறிப்பிடுகிறார். அதேபோல் இராமனிடம் கைகேயி கொண்ட பாசமும் தூய அன்பும் அளவிடற்கரியதாகும். தான் இராமனிடத்தில் கொண்ட பாசத்தை கூனியிடம் கூறும்போது,

"விராவரும் புவிக்கெலாம் வேதமெயென இராமனைப் பயந்த எற்கிடருண்டோ?" என்று கம்பர் குறிப்பிடுவதால் அறிகிறோம்.

எழுத்தச்சனின் கைகேயி கூனியிடம் பேசும்போதும் இராமனை உயர்த்தியே கூறுகிறாள்,

"புத்ரனாம் ராமனெஸ்னே உறமெனிக்கேறும்
ராமனும் கவுசல்யா தேவி யெக்காளென்னே
பிரேமமேறு"

என்பது எழுத்தச்சனின் கிளிப்பாட்டாகும்.

கம்பரின் கைகேயியும் எழுத்தச்சனின் கைகேயியும் கூனியின் சூழ்ச்சியால் மனமாற்றம் அடைவதைப் பக்குவ மாகப் புலப்படுத்தியுள்ளனர்.

இராவணன் வீழ்ச்சிக்குப்பின் அயோத்தி மீளும் இராமனின் கூட்டத்தாரை வரவேற்பதில் துடிப்புமிக்க வளாய் எழுத்தச்சனின் கைகேயி திகழ்வதைக் காணுகி றோம்.

சுமித்திரை :

தயரதன் பட்டத்தரசியரில் இளையவள். இலக்குவன், சத்துருக்கனன் எனும் இரட்டையரை ஈன்றவள். இராம இலக்குவரிடம் ஒத்த அன்புடையவள்.

வால்மீகி இராமாயணத்தில் இராமர், சீதை, இலக்குவன் வனம் செல்லும்போது, தன் மகன் இலக்குவனை நோக்கி சீதையைத் தன்னைப்போல தாயாகவே கருத வேண்டும் என்று கூறுகிறாள்.

கம்பன் அதனை மாற்றி தயரதனின் அரசியர் மூவ ராகவே சீதையைக் கருதுமாறு தன் மகனிடம் சுமித்திரை கூறுகிறாள்.

கம்பரைப்போலவே எழுத்தச்சனின் சுமித்திரையும் உயர்ந்த குணமுடையவளாக படைக்கப்பட்டுள்ளாள். ''இராமன் பின்செல்'' என்று கம்பர் இலக்குவனிடம் கூறுவதை சற்று மாற்றி எழுத்தச்சனின் இலக்குவனிடம் ''இராமன் முன்னே செல்வாயாக!'' என்று குறிப்பிடு வதைக் காணுகிறோம்.

"அக்ரஜன் தன்னெ பரிசரிசரிச் செய்போழ
மக்ரே நடந்து கொள்ளேணம் பிரியாதே"

என்று எழுத்தச்சன் குறிப்பிடுகிறார்.

சீதை :

காவியத் தலைவி. கற்பின் கனலி என்று போற்றப் படுபவள். இராவணனுடைய மனைவி மண்டோதரியே சீதையின் அழகைக் கண்டு வியந்து

''காந்தையருக் கணியனைய சானகியார்'' என்று பாராட்டுகிறாள்.

அனுமன் வாயிலாகக் 'கற்பினுக் கணி' என்று பாராட்டப்படுகிறாள்.

அசோக வனத்தில் சிறையிருந்த சீதையைக் கண்டு வந்த அனுமன் இராமபிரானிடம்,

"இற்பிறப்பென்ப தொன்றும்
இரும்பொறை என்பதொன்றும்
கற்பெனும் பெயரதொன்றும்
களிநடம் புரியக் கண்டேன்"

என்று அனுமன் குறிப்பிடுகிறான்.

இருமாதரைச் சிந்தையாலும் தொடாத செம்மலுக்கு ஏற்ற துணையாகவே சீதையைப் படைத்துள்ளார் கம்பன்.

எழுத்தச்சனின் சீதை ஆரண்ய காண்டத்தில் இராமனின் உடலில் ஏற்ற காயங்களைத்தன் கையால் தடவி ஆறிடச் செய்கிறாள்.

"த்ருக்கைகள் கொண்டு தலோடிப் பொறுப்பிச்சீடினா
ளொக்கவே புண்ணுமதின் வடுவும் மாச்சீடினாள்"

என்று எழுத்தச்சன் குறிப்பிடுகிறார்.

அசோக வனத்தில் இருந்த சீதை அனுமனுடன் புறப் படுவதற்கு மறுத்தாள். அதற்குக் கம்பன் கூறும் காரணம் வேறு, எழுத்தச்சன் கூறும் காரணம் வேறு. இரவிடை யாரு மறியாது கொண்டு செல்வது இராமன் புகழுக்கு மாசு விளைக்கும் என்று எழுத்தச்சன் குறிப்பிடுகிறார்.

இலங்கையிலிருந்து அயோத்தி திரும்பும்போது கிட்கிந்தைப் பெண்டிரைக் காண விரும்புகிறாள் சீதை. சீதையின் விருந்து ஓம்பும் பண்பும், பரந்த மனமும் அங்கு நடைபெற்ற நிகழ்ச்சியிலிருந்து நாம் அறிகிறோம். எழுத் தச்சன் சீதையைக் கற்புக் கணிகலன் என்று மட்டும் கூற வில்லை. தெய்வத்தாய் என்றே பலவிடங்களில் சுட்டிக் காட்டுகிறார்.

இராவணன் :

''தீங்கிழை இராவணன்'' எனக் கம்பர் இராவணனை அறிமுகப்படுத்துகிறார். அவன் ஆற்றலை வெளிப்படுத்த ''வெள்ளியங்கிரியினை விடையின் பாகனொடு அள்ளி விண் தொட வெடுத்தவன்'' என்ற சம்பவத்தைக் காட்டி புலப்படுத்துகிறார். எனினும் வாலியின் வாலில் சிக்கிய பூச்சியாக இராவணனுடைய ஆற்றலை மட்டுப்படுத்தவும் காண்கிறோம்.

''உட்புலன் எழுநூறு யோசனை கொண்ட இலங்கை வேந்தனாக'' ஆட்சி செய்கிறான் இராவணன். இந்த இராவணன் கார்த்த வீரியனிடம் வலியிழந்தவனாகச் சுட்டப்படுகிறான்.

பிற பெண்டிர் மாட்டு இராவணன் கொண்ட மையலும் அதனால் அவனுக்கமைந்த சாபமும் பல விடங்களில் பேசப்படுகின்றன. சீதையிடம் இராவணன் கொண்ட காமத்தை இறுதிவரை விடவில்லை. ''யாக்கையை விடுவதல்லால் சீதையை விடுவதுண்டோ?'' என்று இந்திரசித்திடம் இராவணன் கூறுகிறான்.

எழுத்தச்சனின் இராவணன் தன்னை எதிர்க்க வரும் இராமன் திருமாலின் அம்சம் என்பதை நன்கு அறிந்தவன். பக்தியினால் இராமனுடைய அருளைப் பெறுவதைவிட, அவனைப் பகைவனாகவே கருதி அழிவை மேற்கொள்வதே சிறந்தது என்ற திடவுள்ளம் கொண்டவனாக எழுத்தச்சன் இராவணன் திகழ்கிறான்.

மாரீசன் :

இராமாயணக் கதைப்போக்கில் திருப்புமையத்தை ஏற்படுத்துபவர்களில் கூனி, சூர்ப்பணகைக்கு அடுத்த படியாக மாரீசன் அமைகின்றான்.

சீதையை இராவணன் கவர்ந்து செல்ல வித்திட்டவள் சூர்ப்பணகையே யானாலும், துணை நின்றவன் மாரீசனே ஆவான். மாரீசன் படைப்பில் கம்பனும், எழுத்தச்சனும் வேறுபட்டு நிற்றலைக் காணுகின்றோம்.

தாடகைக்கும் சுந்தனுக்கும் பிறந்தவர்கள் மாரீசனும் சுவாகுவும் ஆவார்கள். இந்த இருவருமே விசுவாமித்திர முனிவர் செய்த வேள்விக்கு இடையூறாக இருந்தவர்கள். இராமனுடைய கணை சுவாகுவை வீழ்த்தி, மாரீசனை கடலிடை ஆழ்த்தியது.

கம்பர் காட்டும் மாரீசனை விட, எழுத்தச்சன் காட்டும் மாரீசன் இராமன்பால் மிக்க பக்தி உடையவனாக அமைகின்றான். எழுத்தச்சனின் மாரீசன் கடலிடை வீழ்ந்த பின் திருந்தி இராமனிடம் வந்து சரணடைந்தான். சடையும், மரவுரியும் தரித்து இராமனையே நினைந்து தவம் செய்யத் தகுந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தான். கம்பனின் மாரீசன் இராமபக்தி உடையவன் என்றாலும் முதலில் இராமனிடம் வந்து ஆசி பெறவில்லை.

இராவணன் மாரீசனின் இருக்கைக்கு வந்தபோது, மாரீசன் இராமநாமத்தை உச்சரித்த நிலையில் சடையும் மரவுரியும் தரித்து அமர்ந்து காட்சியளித்ததை எழுத்தச்சன் காட்டுகிறார்.

இராமனுடைய அம்பால் வீழ்ந்த மாரீசன், மாயமான் வடிவு நீங்கி அரக்கர் வடிவெய்தியதைக் கம்பனும் எழுத்தச்சனும் காட்டுகின்றனர். வான்மீகி இராமாயணத்தில் அம்பு பட்டு வீழ்ந்த மாரீசன் உடலிலிருந்து ஒளிப் பிழம்பொன்று பிரிந்து இராமபிரானிடம் வந்து சேர்ந்தது. இச்செய்தி எழுத்தச்சன் இராமாயணத்தில் இல்லை.

கம்பனில் மறம் கூறி அறம் பாடி நிற்கும் உத்தம மாரீசன், எழுத்தச்சனில் இராமபக்தனாக மாற்றம் கொள்கிறான். இராவணனுடைய வாளுக் கிரையாவதை விட, இராமனுடைய அம்பினால் மோட்சம் அடைவதே மேன்மையென்று கம்பரின் எழுத்தச்சனின் மாரீசன் கருதக் காண்கிறோம்.

பொதுவாக ஆதிகவி வான்மீகியின் பாத்திரப் படைப்பையொற்றி கம்பன் பாத்திரங்கள் இயங்கினாலும், தமிழ்ச்சாயலுக்கும் சூழலுக்கும் பொருந்துமாறு படைக்கப் பட்டுள்ளனர்.

எழுத்தச்சன் கதைமாந்தர்கள் சமஸ்கிருத அத்தியாத்ம இராமாயணத்தை அடிப்படையாகக் கொண்டே படைக்கப் பட்டுள்ளனர். தம் கவித்திறத்தால் சிற்சில இடங்களில் எழுத்தச்சன் மெருகிட்டு வளப்படுத்தியுள்ளார்.

பக்திநெறி மேம்பாட்டிற்காகவே எழுத்தச்சன் இராமாயணம் எழுதினார் என்பதும், மானுடர் வீடுறும் வகையுணர்த்துவதே அதன் நோக்கமென்பதும் வெளிப்படை, இடைவிடாது இராமநாமம் பாடுதல் பிறவித்துயரிலெழும் பாவத்தைப் போக்கும் என்பதே கம்பர், எழுத்தச்சன் இருவர் தம் கொள்கையாகும்.





நூலாசிரியரைப் பற்றி...

பெயர் : **அ. காசி**

கல்வித்தகுதி : எம்.ஏ., எம்.எட்.

கல்விப்பணிகள் :

1. இடைநிலை ஆசிரியராக 16 ஆண்டுகள் பணி.
2. இரண்டாம் நிலைத் தமிழாசிரியராக 6 ஆண்டுகள் பணி.
3. மேல்நிலைத் தமிழாசிரியராக 16 ஆண்டுகள் பணி. 1994–இல் ஓய்வு. மொத்தம் 38 ஆண்டுகள் பணி.

பொதுப்பணிகள் :

ஆன்மீக சொற்பொழிவு கவியரங்க நிகழ்ச்சி. இலக்கிய நிகழ்ச்சிகளில் பங்கேற்பு – ஆலயப் பணிகள்.

பெற்ற சிறப்புப் பட்டங்கள் :

அருட்கவிஞர், கவியருவி, கவிச்சாரல், கவித் தமிழ்க் கோமகன், தமிழருவி, பாரதி பணிச் செல்வர்.